# எதிரொலி
ஆஸ்திரேலியா
ETHIROLI

குரல் 04 அதிர்வு 38 ஒகஸ்ட் 2020 ethirolimelbourne@gmail.com தொ.பே:1800 960 162




# துயர்வழியும் வீதி எங்கும் கிருமி வாசம்










ஆஸ்திரேலியாவிலிருந்து வெளிவரும் தமிழ் மாத இதழ்


24 வருட கால
நகை
அடகுச்சேவை
Maximum Value | Quick Service | Lowest Rate
• குறைந்த வட்டி வீதம்
• கடன் தொகை படிப்படியாக மீள் செலுத்தும் வசதி
• ஏழு நாட்களும் சேவையில்
EZY CASH PAWN SHOP
அடகுகடை
EZY CASH
Bala 0420 877 303
#Shop L01 102c, Dandenong Plaza Shopping Centre, 49-55 McCrae Street, Dandenong VIC 3175



நம்பிக்கை, தரம், நிரந்தரம்
உங்கள்
SRI MURUGAN
SINCE 1969
ஸ்ரீ முருகன் டிரேடிங்
SRI MURUGAN TRADING
(Largest Indian Grocer Chain)
PERFECT STOP FOR ALL
INDIAN
GROCERY NEEDS
03 7379 7777
www.srimurugantrading.com.au
@SriMuruganAustralia
POINT COOK | CARRUM DOWNS | NARRE WARREN
INDIA | SINGAPORE | MALAYSIA | INDONESIA | AUSTRALIA | DUBAI | FRANCE

எதிரொலி
ஆஸ்திரேலியா
ETHIROLI



# அரோகஹரா நல்லூரில் இனி பெரஹரா?

திருகோணமலையிலுள்ள தேவாரப் பாடல் பெற்ற தலமான திருக்கோணேஸ்வரம் கோயில் என்பது கோகண்ண விகாரை என்றும் அந்தப் பகுதியிலுள்ள பௌத்த தொல் பொருள்கள் பாதுகாக்கப்படவேண்டும் என்றும் சிறீலங்கா ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சவால் நியமிக்கப்பட்டுள்ள ஜனாதிபதி செயலணியின் உறுப்பினரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான புத்த மதகுரு எல்லாவ மேதானந்த தேரர் அண்மையில் தெரிவித்திருந்தார்.

தமிழர்கள் பலர் கொதித்தெழுந்தார்கள். என்ன, இராவணன்தரிசித்தகோயில் எப்படி பௌத்த விகாரையாக முடியும் என்று சீற்றமடைந்தார்கள்.

அதே புத்த மதகுரு, நல்லூர் கந்தசுவாமி கோயிலும் சிங்கள மன்னன் ஒருவனால் கட்டப்பட்டது என்றும் உரிமை கோரியிருந்தார். ஆனால், இந்தக் கருத்துப்பற்றி தமிழ் இரத்தம் அதிகமாகக் கொதித்தெழவில்லை. இதற்குக் காரணம் என்னவாக இருக்கும்?


ஒருவேளை அந்த புத்த மதகுரு கூறியதில் உண்மை இருக்கலாமோ என்ற சந்தேகம்எழுந்ததால்ஒருசிறு ஆராய்ச்சி, அதன் விளைவு இந்தக் கட்டுரை.

நல்லூர் கந்தசுவாமி கோயில் நல்லூரிலே முதலில் கட்டப்படவில்லை என்றும் சுமார் *1070* ஆண்டுகளுக்கு முன்னர் பூநகரியில் இந்தக் கோயில் இருந்ததாகவும் ஒரு ஐதீகம் நிலவுகிறது.

ஆனால் இந்த நல்லூர் கந்தசாமி கோயிலுக்கும் பூநகரி நல்லூர் என்ற இடத்தில் அப்போதைய இராசதானி கட்டிய கோயிலுக்கும் எந்தவித சம்பந்தமும் இல்லை என்று சில ஆய்வாளர்கள் கூறுகிறார்கள்.

ஆனால், இதற்கும் பௌத்த மதத்திற்கும் தொடர்பு இருக்கிறது. கந்தரோடை பிரதேசம் பௌத்தமாக மாறிய வேளை அப்போதைய மன்னன் உக்கிரசிங்கன், தனது தலைநகரை கந்தரோடை என்று தற்போது அழைக்கப்படும் கதிரமலையிலிருந்து சிங்கை நகருக்கு மாற்றியிருக்கிறார். சிங்கைநகர் என்பது தற்போதைய பூநகரிபிரதேசம்என்று அடையாளம் காட்டப்பட்டுள்ளது.

சுமார் *775* ஆண்டுகளுக்கு முன்னர் - தற்போது இந்தக் கோயில் அமைந்துள்ள இடத்தில் - கந்தசுவாமி கோயில்




நிறுவப்பட்டது என்பதற்கு இலக்கியச் சான்றுகள் உள்ளன.

முக்கிய சான்றாக சொல்லப்படுவது கைலாயமாலையில் வரும் இந்தப் பாடல்: '...இலக்கிய சகாப்த மெண்ணூர், றெழுபதா மாண்ட தெல்லை, அலர் பொலி மாலை மார்பனாம் புவனேகவாகு, நலமிகும் யாழ்ப்பாண நகரி, கட்டுவித்து நல்லைக் குலவிய கந்த வேட்குக், கோயிலும் புரிவித்தானே...' இதில் வரும் ஆண்டு என்பது சக-வருடம் (அல்லது சாலிவாகன வருடம்) என்பதை ஆய்வாளர்கள் ஏற்றுக் கொண்டுள்ளார்கள். இந்து நாள்காட்டி, இந்தியத் தேசிய நாள்காட்டி, கம்போடிய பௌத்த நாள்காட்டி என்பன இந்த முறையைக் கைக்கொள்ளுகின்றன.

சாலிவாகனன் என்னும் மன்னன் விக்கிரமாதித்தனுக்கு எதிராகப் பெற்ற வெற்றியைக் கொண்டாடுவதற்காக கி.பி. *78* ஆம் ஆண்டில் இம்முறையைத் தொடக்கி வைத்ததாகச் சொல்லப்படுகிறது. இந்தப் பாட்டில் வரும் எண்ணூற்றெழுபதாம் என்பது கி.பி.*1248* ஆம் ஆண்டைக் குறிக்குமென்று சுவாமி ஞானப்பிரகாசர், வ.குமாரசாமி போன்றவர்கள் கூறியுள்ளார்கள். இந்தப் பாடலில் வரும் எண் என்பது ஆயிரத்தைக் குறிக்குமெனவும் ஆயிரத்துடன் நூற்றெழுபதைக் கூட்ட வருவது சகவருடம் *1170* என்பதும் குறிக்கும் என்பதும் இவர்களது கருத்து. டானியல்ஜோன்மற்றும் முதலியார் இராசநாயகம் என்பவர்களின் கருத்துப்படி சகவருடம் எண்ணூறெழுபது என்பது *(870 10 78)* கி.பி.*948* ஐக் குறிக்கும். இந்தக் கணக்கில் வரும் குழப்பத்தால் கோயில் முதலில் எங்கே எப்பொழுது கட்டப்பட்டது என்பதிலும், யாரால் கட்டப்பட்டது என்பதிலும் ஆய்வாளர்களிடையே இன்றும் குழப்பங்கள் நிலவுகின்றன.

மேலும், இந்தப் பாடலில் வரும் புவனேகபாகு என்பவர் ஆரிய மன்னனின் மந்திரி என்றும் நல்லூரின் கந்தசுவாமி கோயிலைக் கட்டியவர் என்றும் கைலாயமாலைஇயாழ்ப்பாணவைபவ-மாலை போன்ற நூல்கள் சொல்கின்றன. ஆனால், அதனைக் கட்டியவர் சிறிசங்க போதி புவனேகபாகு என நல்லூர்க் கோயில்கட்டியத்தில்குறிப்பிடப்பட்டிருக்கிறது. இந்தசிறிசங்கபோதி புவனேகபாகு என்பவன் தான் நல்லூரை இராசதானியாக்கி, கி.பி.*1450* இலிருந்து கி.பி. *1467* வரை அரசாண்ட சப்புமல்குமாரய என்பவர். அவரைத்தான் புத்த மதகுரு எல்லாவ மேதானந்த தேரர் தனது 'முப்பாட்டன்' என்று தற்போது நல்லூர் கோயில் மீது உரிமை கேட்டு வந்திருக்கிறார்.

ஆனால், அனுராதபுரத்தில் இருந்து பெரும்படையுடன் புறப்பட்ட சப்புமல் குமாரய, யாழ்ப்பாண நகரின் உள்ளே தனது படைகளுடன் புகுவதற்கு முன், அதைச்சுற்றியுள்ள பெருநிலப்பரப்பில் அமைந்திருந்த சிறிய நகரைத் தாக்கி, அங்கிருந்த மாளிகைகள் கட்டிடங்கள் என்பவற்றை அழித்தான் என்றும் -

சிங்கை நகரை அழித்து தரைமட்டமாக்கிய போது, நகரிலிருந்த மாடமாளிகைகள் தரைமட்டமாக்கப்பட்டன என்று சப்புமல்குமாரய வெற்றியைப் புகழ்ந்து பாடும் 'கோகில சந்தேஸய' பாடல்கள் கூறுகின்றன. தலைநகரைத் தரைமட்டமாக்கிய படையினர் நல்லூர் கந்தசாமி கோயிலையும் தரைமட்டமாக்கியிருக்கக் கூடும்.


எழுத்தாளர் கந்தையா குணராசா என்பவரின் கருத்துப்படி, இந்த இரண்டு புவனேகபாகுகளும் வரலாற்றில் வாழ்ந்திருக்கிறார்கள். முதல் புவனேகபாகு ஒரு தமிழர் என்றே அவர் முடிவு செய்துள்ளார்.

இலங்கையில் வாழ்ந்த இனக்குழுக்கள் ஒருகட்டத்தில் தற்காலத்து இனக்குழுக்களாகத் தோற்றம் பெற்றன என்று பேராசிரியர் இந்திரபாலாவின் 'இலங்கையில் தமிழர் - ஓர் இனக்குழு ஆக்கம் பெற்ற வரலாறு' என்ற நூலில் குறிப்பிட்டுள்ளார்.

**(05ஆம் பக்கம் பார்க்க)**



**கவல்கணன்**





# அரோகஹரா நல்லூரில் இனி பெரஹரா?

(04ஆம் பக்கத் தொடர்ச்சி)

அவரது ஆய்வின் படி, இலங்கையில் இருந்த பல்வேறு சிறு பண்பாட்டு குழுக்களையும் சமூகங்களையும் உள்ளடக்கி சிங்களவர்களும் தமிழர்களும் 1200 ஆம் ஆண்டளவில் பரிணாமம் பெற்றனர் என்கிறார். அதை ஏற்றுக்கொண்டால், இந்தக் கோயில் கட்டப்பட்ட காலத்தில் தற்போதுள்ள தமிழ் - சிங்கள அடையாளங்கள் பூரண வடிவம் பெறவில்லை.

இரண்டாம் உலகப் போரின் பின்னர், அழிவுற்றிருந்த ஜப்பானையும் ஜேர்மனியையும் அமெரிக்காவும் ஐரோப்பிய நாடுகளும் கட்டியெழுப்பியது போல், அழிக்கப்பட்ட நகரை மீண்டும் கட்டியெழுப்பிய சப்புமல்குமாரய நல்லூரையும் மீண்டும் கட்டியெழுப்பி இருக்கக்கூடும்.

ஆனால்இ மேதானந்த தேரர் உரிமை கோருவதுபோல, சப்புமல்குமாரய சிங்கள இனம் என்று சொல்ல முடியாது. ஆறாம் பராக்கிரமபாகு மன்னனிடம் தொழில்புரிய வந்த இவனது தந்தை ஒரு மலையாளி என்று ஆவணங்கள் சுட்டிக்காட்டுகின்றன. சிதைக்கப்பட்ட நல்லூர் கோயில் அமைந்திருந்த குருக்கள் வளவில் அதனை மீண்டும் கட்டி அமைக்காமல், இப்பொழுது முத்திரைச் சந்தை என்று அழைக்கப்படும் இடத்தில் கோயில் கட்டியெழுப்பப்பட்டது.

பதினாறாம் நூற்றாண்டில் இஸ்லாமிய மதத்தை ஏற்றுக்கொண்ட தமிழ் மக்கள், குருக்கள் வளவு என்ற இடத்திற்கு அருகில் வாழ்ந்து வந்தார்கள். சிக்கந்தர் என்ற ஒரு சித்தர், சைவ மக்கள் மட்டுமின்றி இஸ்லாமிய மக்களின் பேரன்பைப் பெற்றவராக இருந்த காரணத்தால், அவர் இறந்த பொழுது குழுக்கள் வளவிலேயே இஸ்லாமிய மக்கள் ஒரு சமாதியைக் கட்டியிருக்கிறார்கள்.

யாழ்ப்பாணம் மீது 1591 ஆம் ஆண்டு போத்துக்கேயர் படையெடுத்து, கந்தசுவாமி கோயிலுக்கு அருகில், தமிழர் படையுடன் பெரும் போரில் ஈடுபட்டதாக வரலாறு சொல்கிறது.

1620 களின் ஆரம்பத்தில்இ நல்லூர் கந்தசுவாமி கோயில் போத்துக்கேயரால் தரைமட்டமாக்கப்பட்டது. கிறிஸ்தவ மதம் அல்லாத அனைத்தையும் போர்த்துக்கேயர்கள் அழித்ததாக ஞானப்பிரகாச சுவாமிகள் ஆவணப்படுத்தியுள்ளார். கந்தசாமி கோயில் அமைந்திருந்த முத்திரைச்சந்தியில் ஒரு கத்தோலிக்க தேவாலயம் அமைக்கப்பட்டது. கந்தசுவாமி கோயிலின் கருவறையும் கர்ப்பக்கிருகம் அமைந்த இடமும் அப்படியே பேணப்பட்டு, தேவாலயம் அமைக்கப்பட்டது. (அண்மைக் காலம் வரை அது பேணப்பட்டு வந்தது. அதன் தற்போதைய நிலை தெரியவில்லை.)

யாழ்ப்பாண இராச்சியம் கி.பி. 1658 ஆம் ஆண்டு ஒல்லாந்தர் வசமாகியது. இவர்கள் ஆட்சியில், நல்லூரிலிருந்து அந்தத் தேவாலயம் கிறிஸ்தவ தேவாலயமாகமாறியது. ஆனால், போத்துக்கேயரைப் போல அல்லாமல் மற்ற மதங்களையும் மக்கள் வணங்க ஒல்லாந்தர் அனுமதி வழங்கினார்கள். இருப்பினும், கோயில் ஒன்றைக் கட்டியெழுப்பி அது மீண்டும் தரைமட்டமாக்கப்படாமல், மடம் ஒன்றைக் கட்டி, அதில் கந்தபுராணம் ஓதுவதென்று அப்போது அங்குள்ளவர்கள் முடிவெடுத்திருக்கிறார்கள்.

பின்னர், கந்தசுவாமி கோயிலைக் கட்டியெழுப்பலாம் என்ற சிந்தனை வலுப்பெற்றபோது அதற்கான அனுமதி ஒல்லாந்து ஆட்சியாளரிடமிருந்து 1750 ஆம் ஆண்டளவில் பெறப்பட்டுஇ தற்போது அமைந்துள்ள குருக்கள் வளவு என்ற இடத்தில் சிறிய அளவில் கட்டப்பட்டது. அந்த இடத்தில் இஸ்லாமியதமிழர்கள்வாழ்ந்ததற்கானஆதாரம் இருந்திருக்கிறது. அவர்கள் அந்த இடத்திலிருந்து விலக சம்மதிக்கவில்லை. அதிக விலை தருவதாகக் கேட்ட போதும் அவர்கள் அதற்கு இணங்கவில்லை. அவர்களின்கிணறுகளில்பன்றி இறைச்சியையும் இரத்தையும் கலந்து அவர்களை அந்த இடத்தை விட்டு விலக செய்திருக்கிறார்கள் இந்தக் கோயிலைக் கட்ட முனைந்தவர்கள் (இன்னொரு அயோத்தி!).

அதன்பின்னர், அம்பலவாணர் கந்தப்பர் என்பவர் பெயரிலேயே அந்த நிலம் முதலில் பதியப்பட்டது. இந்தக் கோயிலைக் கட்டுவதற்கான நிதி சேகரிப்பதற்காக ஊர் ஊராக அலைந்து மக்களிடம் நிதி சேகரித்துள்ளார் முன்னர் அந்தக் கோயிலில் அர்ச்சகராக இருந்தவரின் பரம்பரையில் வந்த கிருஷ்ணையர் சுப்பையர். இதற்குத் தேவையான விண்ணப்பங்களைப் பெறுவதில் மாப்பாண முதலியார் பெரும்பங்கு வகித்திருக்கிறார்.

ஆலயத்தின் பிரதம குருவாக சுப்பையர் தெரிவானார். ஆறுமுக மாப்பாண முதலியார் இவருடன் இணைந்து ஆலயத்தை நிர்வகிக்க நியமிக்கப்பட்டார். கிருஷ்ணையர் சுப்பையர் அந்த கோயிலின் முதற் பூசகராக பணிசெய்தவர் என்று ஜோன்சன் அலெக்சாண்டர் குறிப்பிட்டுள்ளார். திருவிழாக் காலங்களில் கட்டியம் கூறப்படும்போது, கோயிலை முதலில் நிறுவியவர் என்று புவனேகபாகுவின் பெயரும், தற்போதைய கோயிலின் நிறுவனர் என்று இரகுநாத மாப்பாண முதலியார் பெயரும் சொல்லப்படுகிறது. ஆனால், இந்த கோவிலைக் கட்டுவதற்கு, ஆரம்பத்தில் நிதி சேகரிக்க பெரிய அளவில் உழைத்த கிருஷ்ணையரின் பெயர் அந்த கட்டியத்தில் கிடையாது.

யாழ்ப்பாண அரசு கி.பி. 1798 ஆம் ஆண்டு ஆங்கிலேயரின் ஆட்சிக்குள் வந்தது. போர்த்துக்கேயரைப்போல அல்லாமல், கோயில் வழிபாட்டை ஆங்கிலேயர்கள் தடை செய்யவில்லை. மாறாக, அதனைத் தமது கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் முகமாக சைவ ஆலயங்களுக்குப் பிரித்தானிய அரசு அர்ச்சகர்களை நியமனம் செய்தது.

பாலசுப்பிரமணிய ஐயர் என்பவருக்கு அர்ச்சகர் நியமனப் பத்திரம் 1807 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 5 ஆம் திகதி அப்போதைய பிரித்தானிய கவர்னர் அவர்களால் கொடுக்கப்பட்டது என்றும் அந்தப் பத்திரம் அவரது சந்ததியாரிடம்உள்ளதுஎன்றும்இராசநாயகம் என்பவர் 1933 ஆம் ஆண்டில் குறிப்பிட்டிருக்கிறார். மேலும் ஐந்து குருமார்களையும் இவருக்கு துணையாக பணியாற்றுமாறு கவர்னர் உத்தரவு பிறப்பித்திருக்கிறார்.

அப்போது, அப்பிரதம அர்ச்சகர் சுப்பையருக்கும் ஆறுமுக மாப்பாணருக்கும் இடையில் பிரச்சினை தலை தூக்கியது. ஆலய நிதியைத் தனது சொந்த தேவைகளுக்குப் பயன்படுத்துகிறார் ஆறுமுக மாப்பாணர் என்று சொல்லி நீதிமன்றத்தில் வழக்கு ஒன்றைத் தொடுத்தார் அர்ச்சகர் சுப்பையர். ஆலய நிர்வாகம் இருவராலும் இணைந்து நடத்தப்பட வேண்டும் என்று நீதிபதி தீர்ப்புக் கூறி, ஆலயப்பொருட்கள் மற்றும் நிதி ஆகியவை ஒரே அறையில் வைக்கப்பட்டு இரண்டு பூட்டுக்கள் போட்டுப் பூட்டப்படவேண்டும் என்றும், ஒரு சாவி ஆறுமுக மாப்பாணரிடமும் மற்றைய சாவி சுப்பையரிடமும் இருக்க வேண்டுமென்றும் வழக்கில் தீர்ப்புக் கூறப்பட்டது.

ஆனால் இந்தத் தீர்ப்பை ஏற்றுக்கொள்ளாத ஆறுமுக மாப்பாண முதலியார், பிரித்தானிய அரசாங்கத்திடம் நேரடியாக முறையிட்டார். அந்த விசாரணையின் பின்னர், ஆலயத்தின் உரிமை மாப்பாண முதலியார் குடும்பத்திற்கே இருக்கிறது என்றும் சுப்பையரிடம் இருந்த சாவி திருப்பக் கொடுக்கப்பட வேண்டுமென்றும் பிரித்தானிய அரசு தீர்ப்புக் கூறியது.

இதே மாப்பாண முதலியார் கோயில் தர்மகர்த்தாவாக இருந்தவேளையில், அரசுப்பணி ஒன்றிலும் ஈடுபட்டிருந்தார். அங்கும், சில நிதி மோசடிகள் இடம்பெற்றதாக அவர் மீது குற்றம் சாட்டப்பட்டு, வேலையிலிருந்து நீக்கப்பட்டார்.

இது நடைபெற்று சில வாரங்களில் அவர் இறந்து போனார். அதன்பிறகு, அவரது மருமகன் சின்னத்தம்பி என்பவர் சில நாட்கள் ஆலயத்தைப் பொறுப்பேற்றார். பின்னர், ஆறுமுக மாப்பாணரின் பேரன் இரகுநாத மாப்பாண முதலியார் கோயில் உரிமையைக் கையிலெடுத்தார்.

அதன் உரிமை யாருக்கு என்பதில் பல வழக்குகள் நடந்திருந்தாலும், தற்போது மாப்பாண முதலியார் பரம்பரையில் வந்த தனி குடும்பத்தினர் கைகளில் தான் நல்லூர் கோயிலின் உரிமை தங்கியிருக்கிறது.

இந்தக் கோயிலின்இ மற்றும் அது அமைந்திருக்கும் வளாகத்தின் உரிமை நாட்டின் நான்கு பெரும் மதங்களுக்கும் இருக்கிறது என்பதை வரலாறு சொல்கிறது.

அண்மையில் இரண்டு திருவிழாக்கள் நடந்து முடிந்திருக்கின்றன. ஒன்று, இலங்கை பாராளுமன்ற பொதுத் தேர்தல், மற்றையது நல்லூர் கந்தசுவாமி வருடாந்த திருவிழா.

பெரும்பாலான கோவில்களில் வருடாந்திர திருவிழாக்கள் 10 நாட்கள் நடக்கும். நல்லூர் கந்தசுவாமி கோயிலில் திருவிழாக்கள் 25 நாட்கள் நடைபெறுவது அதன் தனித்தன்மை (மற்றைய கோயில் மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில்).

கொரோனாவைரஸ்தொற்றுகாரணமாக கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டு இருந்தாலும் எந்தவித அசம்பாவிதமும் இல்லாமல் இந்த வருட திருவிழா நடந்து முடிந்திருக்கிறது. பொதுத் தேர்தல்முடிவுகளைப்பார்த்தால்பௌத்த குருவின் கருத்துகள் வலுப்பெற்று, சட்டமாகி நடைமுறைப்படுத்தப்படலாம். அப்படி நடந்தால், அடுத்த வருடமோ அல்லது இன்னமும் சில வருடங்களிலோ மக்கள் நல்லூர் கந்தசுவாமி கோயில் திருவிழாவிற்கு செல்லமாட்டர்கள். அவர்கள்செல்வது நல்லூர் பெரஹராவாக இருக்கும்.

எதிரொலி ஆஸ்திரேலியா ETHIROLI
குரல்:03 அதிர்வு: 38 ஒகஸ்ட் 2020 தொ.பே:1800960162

# சிறிலங்கா நாடாளுமன்ற தேர்தல்: ஆஸ்திரேலிய கொந்தளிப்புகள்

சிறிலங்காவில் நடைபெற்று முடிந்த ஒன்பதாவது நாடாளுமன்ற தேர்தல் பெரும்பான்மை சிங்கள மக்களுக்கு கொண்டாட்டத்துக்குரிய வெற்றியையும் தமிழர் தரப்புக்கு பெருங்கேடான தோல்வியையும் கொடுத்திருக்கிறது.

இந்த தேர்தலில் தமிழர் தரப்புக்கு பிரிந்துசென்றிருக்கும் வாக்குகள் அதிசயிக்கத்தக்க பெறுபேறுகளை கொடுத்திருப்பது அனைவரும் அறிந்ததே.

ஆனால், இதுவிடயத்தில் வெளிநாட்டிலுள்ள தமிழர்கள் – குறிப்பாக ஆஸ்திரேலிய தமிழர்கள் – இனிவரும்காலத்தில் எடுக்கவேண்டிய நிலைப்பாடுகள் பற்றி எதிரொலியின் ஆசிரியர் தலையங்கம் சற்று விரிவாகவும் – வேண்டுகோளாகவும் – பதிவுசெய்ய விளைகிறது.

சிறிலங்காவின் இவ்வளவுகால நாடாளுமன்றங்களை தமிழர் தரப்புக்கு ஏதோவொரு பேரம் பேசும் வட்டத்துக்குள் வளைத்துவைத்து அழுத்தும் கொடுத்து வந்திருக்கின்றன. ஆனால், தற்போது – 77 ஆம் ஆண்டுக்குப்பிறகு – முதல் தடவையாக அந்த வலுவை தமிழர் தரப்பிடமிருந்து முற்றாக பிடுங்கி எடுத்திருக்கிறது சிங்களத்தரப்பு.

இந்நிலையில், சிறிலங்காவின் ஆளும் தரப்பினை – இனிவரும் காலத்தில் அது கொண்டுவரவுள்ள மாற்றங்களை – பெரும்பான்மை அரசியல் திமிரை – தமிழர் தரப்பு எவ்வாறு முகங்கொடுக்கவேண்டும் என்பதற்கு தெளிவான புரிந்துணர்வு தேவையாகவுள்ளது.

முன்புபோல, கிடைத்த துவாரங்களின் வழியனைத்திலும் சென்று சிங்கள ஆளும் தரப்பினை சீண்டுவதும் அதன் வழியாக ஒரு தாக்கத்தை ஏற்படுத்துவதற்கான எத்தனங்களை கொடுப்பதும் இனி முடியாத காரியம்.

சிங்கள ஆளுந்தரப்பினை தொடர்ச்சியாக பரம வைரிகளாகவும் – கொலை பாதகர்களாகவும் – பார்த்துவந்த தமிழர் தரப்புக்கு இது மிகக்கடினமானதுதான். ஆனால், கள யதார்த்தம் இதுதான் என்பதை புரிந்துகொள்ளவேண்டியிருக்கிறது.

பழைய ஞாபகத்தோடு போய்நின்று சிங்கள தேசத்தோடு வீராப்பு பேசினால், சிங்கள அதிகார வர்க்கம் மாத்திரமல்லாமல், சிங்கள மக்களும் சேர்ந்து தமிழர் தரப்பை பார்த்து நகைக்கும் நிலையேற்படும்.

இந்த யதார்த்தத்தை துளியளவும் உணர்ந்துகொள்ளாத தரப்புக்கள் தமிழர்களை மீண்டுமொரு பேரழிவுக்கு அழைத்துப்போவதற்கு திடசங்கற்பம் பூண்டிருக்கிறார்கள் போலுள்ளது.

நடந்துமுடிந்த தேர்தலில் கூட்டியெடுத்தால் மூன்று ஆசனங்களை பெற்றுள்ள தமிழ் தேசிய மக்கள் முன்னணியினரும் விக்னேஸ்வரனும் நாடாளுமன்றத்துக்கு போவதற்கு சபதமெடுப்பதாக முள்ளிவாய்க்காலில் போய் நின்று தீபமேற்றிவிட்டு வந்திருக்கிறார்கள்.

தமிழர் தரப்பு இவ்வளவு காலமும் சிங்களத் தரப்பின் காலடிகளைப் பார்த்து கவனமாக இயங்கியது என்றால், இனிமேல் அவர்களது மனமறிந்து நிதானத்தோடு நடந்துகொள்ளவேண்டும் என்பது அத்தியாவசியமானது.

முள்ளிவாய்க்காலில் இறந்த மக்களுக்கு அஞ்சலி செலுத்துவதொன்றும் தவறான காரியம் அல்ல. மிகப்பெரிய பேரழிவில் ஆகுதியானவர்கள் அவர்கள். அவர்களது இழப்புத்தான் தமிழ் தேசிய அரசியலை இன்றுவரை மக்கள் மத்தியில் கொஞ்சமாவது தா(க்)கத்தோடு வைத்திருக்கிறது.

அப்படிப்பட்ட மக்களின் முன்பாக எடுக்கும் சபதமும் – சத்தியமும் – புனிதமாக இருக்கவேண்டுமே தவிர, அவர்களது சாவுகளை கொச்சைப்படுத்துவதாகவும் சுயலாப அரசியலுக்கு பயன்படுத்தி மலினப்படுத்துவதாகவும் இருக்கக்கூடாது.

நாளையே சிறிலங்கா நாடாளுமன்றத்திற்கு சென்று அங்குள்ளவர்களின் சட்டங்களை ஏற்று சத்தியப்பிரமாணம் எடுத்துக்கொள்ளப்போகிறவர்கள், இந்த மக்களின் அழிவுகளின் குறியீடாக உள்ள தீபத்தின் முன்பாக வந்துநின்று ஏன் சபதமெடுக்கவேண்டும்?

அந்த அழிவுகளுக்கெல்லாம் ஒரு தீர்வைக்கொண்டு வந்துவிட்டோம் – இவர்கள் கூறுகின்ற தேர்தல்கால சபதம் போல இரண்டு தேசங்களை ஒரு நாட்டுக்குள் ஏற்படுத்திவிட்டோம் – என்றால், அதைக்கொண்டுபோய் அவர்களது நினைவுத்தூபியில் வைத்து சபதம் செய்வதில் ஒரு நியாயமிருக்கிறது.

வெறுமனே சுயலாப அரசியலுக்கு இந்தக்காரியங்களை செய்வது மாத்திரமன்றி, தங்களைச்சுத்தி நிற்கின்ற இளையவர்களை உசுப்பேற்றிவிட்டு – அதேவேளை அதனை ஒரு கருவியாக பயன்படுத்தி, தங்களுக்கு ஒரு பெருநிழலை ஏற்படுத்தி, அந்த சாவின் நிழலில் நின்றுகொண்டு சிங்கள தேசத்தை சீண்டும் காரியம்தானே இது?

'தமிழர்கள் கடும் தேசியவாதிகளாக உருவாகிவருகிறார்கள்' என்பதுபோன்ற செய்தியை சிங்களத்தரப்புக்கு அனுப்புவதுதானே இந்தக்கோமாளிகளின் முனைப்பாக உள்ளது?

குட்டி நாய் குரைத்து, கடைசியில் தாய் நாய் கடி வாங்குவதைப்போல, இவர்கள் செய்கின்ற காரியம் ஏற்படுத்தப்போகும் விளைவுகள், கடைசியில் மக்களுக்குத்தான் பெருங்கேடாக முடியப்போகிறது என்பது இந்த மரமண்டைகளுக்கு ஏன் உறைக்கவே மாட்டேன் என்கிறது?

இதனைப் பலர் பல சந்தர்ப்பங்களில் சுட்டிக்காட்டிய பின்னரும் ஆஸ்திரேலியாவிலிருந்து வெளிவரும் எதிரொலியில் மீள்பதிவு செய்வதன் நோக்கம் –

ஆஸ்திரேலியாவிலுள்ள தமிழ் அமைப்புக்களின் முக்கியஸ்தர்கள் என்ற தலைப்பில் காணொலியொன்று அண்மையில் எதிரொலியின் பார்வைக்கு வந்திருந்தது. தேர்தலுக்கு முன்னர் வெளியாகியிருந்த இந்தக்காணொலியில், முள்ளிவாய்க்காலில் போய் நின்று சதிராடிய இந்தக் கூட்டத்திற்குத்தான் வாக்களிக்கும்படி கோரப்பட்டிருந்தது.

இதன் பின்னணியில் இங்கு எதிரொலி பதிவுசெய்ய விளைவது –

தாயகத்தில் மிகப்பாரதூரமான காரியங்களில் ஈடுபட்டு – மக்களின் இயல்புவாழ்வை குலைப்பதற்கு துணைபோகின்ற கட்சிகளை கண்டிப்பது எவ்வளவு முக்கியமானதோ, அதுபோல அந்தக் கட்சிகளுக்கு 'ஜால்ரா'அடிக்கும் வெளிநாட்டு அமைப்புக்கள் குறித்தும் சுதாரிப்போடு செயற்படுவது ஆஸ்திரேலிய மக்களின் கடமையாகும்.

இது ஒரு இனத்தின் தார்மீக பொறுப்பும் கடமையும் ஆகும்.

ஆஸ்திரேலியாவில் இயங்கும் மக்கள் அமைப்புக்கள் என்ற வகையில், இன்று இந்த நாட்டில் செய்யக்கூடிய பணிகள் என்ன?

பொறுப்பான சில தமிழ் அமைப்புக்கள் இந்தக் கொள்ளை நோய் காலத்தில் எங்களைச்சூழ உள்ளவர்களை கவனிக்கிறார்கள். பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவிகளை செய்கிறார்கள். சிட்னியிலும் மெல்பேர்னிலும் ஏனைய பகுதிகளிலும் இத்தகைய பணிகளை செய்யும் பொது அமைப்புக்கள், சில மத சார் அமைப்புக்கள் பாராட்டப்படவேண்டியவை.

தமிழர்கள் புலம்பெயர்ந்து வந்தபிறகு, ஆஸ்திரேலியாவுக்கு புலம்பெயர்ந்து ஒரு சமூகமாக திரண்டு பெரும் தளத்தைக்கொண்டிருக்கின்ற சீக்கிய சமூகம், தற்போதைய கொரோனா காலகட்டத்தில் செய்கின்ற உதவிகள் ஆஸ்திரேலிய ஊடகங்களிலேயே மாதத்தில் ஓரிரு தடவைகளாவது வெளிவருமளவுக்கு, பெருமையை பெற்றிருக்கின்றன.

ஆனால், தங்களை பொறுப்புள்ள "பருப்புக்களாக" மக்கள் மத்தியில் விற்கத்துடிக்கும் இந்தக் கோஷ்டிகள் என்ன செய்கின்றன?

தலைபோகும் வேலையாக, சிறிலங்கா தேர்தலில் முடிவுகளை மாற்றுவதற்கு இங்கு வாலில் நெருப்பைக் கட்டிக்கொண்டு ஓடித்திரிகின்றன.

ஆஸ்திரேலிய தமிழர்கள் முதலில் ஒன்றை நீக்கமற நினைவில்கொள்ளவேண்டும்.

பொது அமைப்புக்களாகவும் ஆஸ்திரேலிய தமிழர்களின் குரலாகவும் தங்களை முன்னிறுத்தும் இந்த கோஷ்டிகள், ஒருபோதும் மக்களால் தெரிவுசெய்யப்பட்டவையும் அல்ல. சமூக அளவில் பரந்துபட்ட பொதுநோக்கத்தோடு செயற்படுபவையும் அல்ல. இன்னும் குறிப்பாக சொல்லப்போனால், ஆஸ்திரேலியாவில் முன்னொரு காலத்தில் சமூகத்தலைவர்கள் செய்த நல்ல காரியங்களினாலும் – பொதுத்தொண்டினாலும் – மக்களின் செல்வாக்குப் பெற்ற அமைப்புக்கள்தான் இவை. அவற்றின் முகவரியோடு – அந்தப் பெயரின் மீது ஏறிக்குந்தியிருந்துகொண்டு – ஆஸ்திரேலிய தமிழர்களில் செல்வாக்கு செலுத்தும் வலுக்கட்டாயமான காரியங்களில் ஈடுபடுவதும் – காணொலிகளை விடுத்து குஸ்தியடிப்பதும் – எந்தக் கோதாவில் இடம்பெறுகின்றன என்பதை மக்கள் முதலில் புரிந்துகொள்ளவேண்டும்.

இதனை மீண்டும் மீண்டும் வலியுறுத்திக்கூறுவதன் காரணம், இந்த அமைப்புக்களின் பெயரால் ஆதரவளிக்கப்படும் அரசியல் கட்சிகள், தாயகத்தில் மேற்கொள்கின்ற குறளி வித்தைகள் நாளை பெருங்கேடுகளை ஏற்படுத்தினால், அதையும் இந்த அமைப்புக்கள் அரசியலாக்கி, அதில் குளிர்காய்வதற்கு பின்நிற்காது. இன்று முள்ளிவாய்க்காலில், சுடரேற்றி நடத்துகின்ற சதிராட்டத்தை நியாயப்படுத்துவது போலவே, வருங்காலத்தில் இழப்புக்களையும் வலிகளையும்கூட அரசியலாக்கிவிடும்.

ஆனால், தாயகத்திலுள்ள மக்கள் இனிமேலும் இழப்புக்களையும் வலிகளையும் முகங்கொடுப்பதற்கு வலியவர்களா என்பதை நிதானமுள்ள மக்கள் முன்பின் சிந்திக்கவேண்டும். அவர்களின் இழப்புக்களை இனிமேலும் அரசியலாக்கவோ – அனுதாபம் தேடுவதற்கு முதலீடு செய்வதற்கோ – அனுமதிக்கமுடியாது.

தாயகத்தில் அரசியல் நிலமை, இவ்வளவு காலமும் நம்பியிருந்த தமிழ் கூட்டமைப்புக்கு பெரும் அடியை கொடுத்திருக்கிறது. தமிழ் தேசியக்கூட்டமைப்பின் கடந்த பத்தாண்டுகால செயற்பாடுகளை வைத்துப்பார்க்கும்போது அது அடைந்திருக்கும் மிகப்பெரிய தோல்வி. இந்நிலையில், தாயகத்தின் அரசியல் கூட்டுசக்திகளை சிவில் அமைப்புக்களால் கட்டுப்படுத்தவல்லபொறிமுறையொன்று எதிர்காலத்தில் உருவாக்கவேண்டும். அதன் ஊடாக வெளிப்படையானதொரு அரசியல் ஏற்பாடு முன்நகர்த்தப்படும்போதுதான், மக்களின் தேவைகளை பெருந்தேசியவாதத்தின் பக்கம் சாய்ந்துவிடாமலும் – அதேவேளை யதார்த்தத்தை அணுகிச்செல்லக்கூடியவாறும் – வழிநடத்த முடியும்.

சிங்கள ஆட்சியாளர்களை சீண்டி – போர் சங்குகளை ஊதி – கோஷ அரசியலை நடத்தி மக்களுக்கு ஏதாவது பெற்றுக்கொள்ளலாம் என்று அங்கிருந்து எந்தக்கட்சியாவது எண்ணினால், அது தமிழ் தேசிய அரசியலை பௌத்த பெருந்தேசியம் சவப்பெட்டியில் போட்டு மூடுவதற்கு தமிழர்களே ஆணி எடுத்துக்கொடுப்பதற்கு சமம்.

சுத்தியலை வெளிநாட்டிலிருந்து கொடுத்து அனுப்பப்போகிறோமா என்று மக்கள் முடிவெடுத்துக்கொள்ளவேண்டும்.

# Sai Shree Foods Pty. Ltd.

## AUSTRALIA - CANADA - INDIA

# REMARKABLE QUALITY AND RELISHING TASTE.




**If you're after the authentic taste of Indian style foods look no further, Sai Shree Foods is the manufacturer of quality Indian Yoghurt, Idli & Dosa mix, Paneer, Shrikhand Kesar Elaichi, Mango Lassi, Punjabi Lassi and much much more. Sai Shree Foods produce a Quality Australian Products in Melbourne facility.**

**We are also distributing Grand snacks/pickles and Mambalam Iyers pickles (Famous South Indian brand)**

**HEAD OFFICE:** Sai Shree Foods Pty. Ltd.
Ph: 03 9706 6211
Unit 17/69-77, Mark Anthony Drive, Dandenong - VIC 3175

**DISTRIBUTORS:** Sai Shree International Pty Ltd
Sydney & Canberra - Mr Bhaskar - 0421 835 554
Products Available - Adelaide, Perth, Brisbane & Darwin

எதிரொலி ஆஸ்திரேலியா ETHIROLI
ஓகஸ்ட் 2020

# கொள்ளை நோய் ஓய்ந்தாலும் தீராது மோடியின் “காவி நோய்”

இந்தியாவின் உத்தரப்பிரதேச மாநிலம் அயோத்தியில் அமைந்திருந்த - நானூறு ஆண்டுகளுக்கு மேல் பழமையான - பாபர் மசூதி என்று அறியப்படும் இஸ்லாமியர்கள் இறைவழிபாடு நடத்தும் பள்ளிவாசல் 1992ஆம் ஆண்டு டிசம்பர் 6ஆம் திகதி இடிக்கப்பட்டது. பள்ளிவாசல் இருந்த இடம் இராமர் பிறந்த இடம் என்றும் அந்த இடத்தில் இராமர் கோயில் இருந்ததாகவும் கோரி ஆர்.எஸ்.எஸ் மற்றும் பல்வேறு இந்துத்துவா அமைப்பினர் இந்த வழிபாட்டுத் தலத்தை இடித்துத் தள்ளினார்கள். இது நாடு முழுவதும் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியது.



இந்தியாவின் உச்சநீதிமன்றம் 1994 ஆம் ஆண்டு இந்த சம்பவத்தை, தேசிய அவமானம்” என்று கூறியிருந்தது. அத்துடன், தகர்க்கப்பட்டது பழமைவாய்ந்த கட்டடம் மட்டுமல்ல, சிறுபான்மை மக்களின் நம்பிக்கையும்தான்” - என்றும் கூறியது.

இந்தப்பள்ளிவாசல் இடிக்கப்பட்ட அதே இடத்தில் கடந்த ஐந்தாம் திகதி இராமர் கோவில் கட்டுவதற்கு பூமி பூசையுடன், அடிக்கல் நாட்டி தொடங்கி வைத்திருக்கிறார் பிரதமர் நரேந்திர மோடி. இந்நிகழ்வு பல ஊடகங்களாலும் நேரலை செய்யப்பட்டது, இன்றும் படங்களாகவும் செய்திகளாகவும் வெளிவந்தவண்ணம் உள்ளது .

சுமார் 492 ஆண்டுகள் நெடிய வரலாறு கொண்ட இந்த வரலாற்று நிகழ்வுகளை சுருக்கமாகத் தெரிந்து கொள்வது இந்நிகழ்வின் குறைந்தபட்ச புரிதலை நமக்கு ஏற்படுத்தும்.

இந்தியத்துணைக்கண்டத்தைமுகலாய மன்னரான பாபர் ஆட்சி செய்த காலத்தில் 1528 ஆம் ஆண்டு பாபரின் தளபதி மிர் பாகி என்பவர் இந்தப் பள்ளிவாசலை கட்டியதாகக் வரலாற்றுக் குறிப்பு உள்ளது. இந்தியத் துணைக்கண்டத்தை ஆங்கிலேயர்கள் ஆட்சிசெய்து கொண்டிருந்த 1853 ஆம் ஆண்டு, பாபர் மசூதி கட்டப்பட்ட இடத்தில் இந்துக்களுக்கான கோயில் ஒன்று இருந்தது. அந்தக்கோயில் இடிக்கப்பட்டு பாபர் மசூதி கட்டப்பட்டது என்று அப்பகுதி மக்கள் சிலர் கோரிக்கை வைக்க (இராமர் கோயிலை இடித்துக் கட்டியதாக வரலாற்றுக் குறிப்புகள் ஆதாரங்களும் சமர்பிக்கப்படவில்லை) சமூகப்பதற்றம் அதிகரித்தது. 1859 ஆம் ஆண்டு மசூதியில் இஸ்லாமியர்கள் தொழுகை நடத்தவும், வெளியில் இந்துக்கள் வழிபாடு நடத்தவும் அனுமதிக்கப்பட்டனர்.

இந்தியா சுதந்திரம் பெற்ற இரண்டு ஆண்டுகள் கழித்து - 1949 ஆம் ஆண்டு - டிசெம்பர் 22ஆம் திகதி, ஒருசிலர் பாபர் மசூதி உள்ளே (தொழுகை நடக்கும் இடத்தில்) இராமர் சிலையை வைத்தனர். அதன் பின்னர், பாபர் மசூதி இருக்கும் இடம் சர்ச்சைக்குரியது எனக் கூறி இருதரப்பினரும் உள்ளே நுழைய உத்தரப் பிரதேச மாநில அரசு அனுமதி மறுத்தது.

1950 ஆம் ஆண்டு கோபால்சிங் விசாரத் மற்றும் ராமச்சந்திரதாசு மசூதியில் உள்ளே வைக்கப்பட்ட இராமர் சிலைக்குப் பூசை செய்ய அனுமதிக்கவேண்டும் என நீதிமன்றத்தில் மனுதாக்கல் செய்தனர். அந்த மனு ஏற்று அனுமதி வழங்கப்பட்டது. ஆனால், பைசலாபாத் மாவட்டத்தின் மாவட்ட ஆட்சியராக இருந்த கே.கே நாயர் இந்த விடயத்தில் ஒருதலைப்பட்சமாக நடந்து கொண்டதாக குற்றம்சாட்டப்பட்டது. அப்போது, கே.கே. நாயர் அவரது அரசுப் பணியை ராஜினாமா செய்துவிட்டு மனைவியுடன் 1952 ஆம் ஆண்டு “சன சங்க” (பாரதிய ஜனதா) கட்சியில் இணைந்தார். இவரது மனைவி உத்திரபிரதேச மாநில சட்டமன்ற தேர்தலில் “சன சங்க” கட்சி சார்பில் போட்டியிட்டு சட்டமன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டதும், பின்பு கே.கே நாயரும் இவரது மனைவியும் 1962 ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலில் சன சங்க (பாரதிய ஜனதா) சார்பாக போட்டியிட்டு வெற்றியும் பெற்றனர் என்பது இக்குற்றச்சாட்டை வலுப்படுத்துகிறது.

இந்தியா சுதந்திரம் பெற்று இரண்டு ஆண்டுகளில் பாபர் மசூதி பிரச்சினை “சன சங்க” கட்சியால் கையில் எடுக்கப்பட்டு, பிரிவினை மற்றும் வகுப்புவாத உணர்வுகளை பெரும்பான்மை இந்து மக்களிடம் பரப்புரை செய்யப்பட்டு, அதில் அரசியல் செல்வாக்கை வளர்க்கத் தொடங்கியது.

1989 ஆம் ஆண்டிலிருந்து இன்று இந்தியாவை ஆளும் பாரதிய ஜனதா கட்சி, பாபர் மசூதி பிரச்சினையை கட்சியின் முக்கியசெயல்பாடாக கையிலெடுத்து வந்திருக்கிறது.

1990 ஆம் ஆண்டு பாரதிய ஜனதா கட்சியின் தலைவர்களில் ஒருவரான அத்வானி தலைமையில் இந்தியா முழுவதும் பாபர் மசூதி ராமர் கோவில் பிரச்சினையை முன்னெடுத்து ரத யாத்திரை மேற்கொள்ளப்பட்டது. இந்த வகுப்புவாத - பிரிவினைவாத அரசியல் வட இந்தியாவில் பாரதிய ஜனதா கட்சிக்கு பெரும் செல்வாக்கை அளித்தது.

1991 ஆம் ஆண்டு உத்தரப்பிரதேச மாநிலத்தின் ஆட்சியை கைப்பற்றவும் இந்திய நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சியாகவும் அமரவும் பாரதிய ஜனதா கட்சிக்கு இந்தப்பிரச்சினை உதவியது. தொடர்ந்து மசூதியை வைத்து கோயில் கட்ட “கரசேவை இயக்கம்” ஆரம்பிக்கப்பட்டது.

1992 ஆம் ஆண்டு டிசம்பர் 6 ஆம் திகதி பாபர் மசூதி இடிக்கப்பட்டது. அத்வானி உள்ளிட்ட சில தலைவர்கள் மீது சதித் திட்டம் தீட்டியதாக சி.பி.ஐயினால் நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டது.

2010 ஆம் ஆண்டு அலகாபாத் உயர் நீதிமன்றம் மத்திய அரசு கையகப்படுத்திய - சர்ச்சைக்குரிய - நிலத்தில் மூன்றில் இரண்டு பகுதி இராமர் கோயில் கட்டுவதற்கும் ஒரு பகுதியை மசூதி கட்ட வழங்கவும் உத்தரவிட்டது. இதை எதிர்த்து இராமர் கோவில் சார்பு அமைப்புகளைச் சேர்ந்தவர்கள் உச்ச நீதிமன்றத்திற்கு மேன்முறையீட்டிற்கு சென்றனர்,

ஒன்பது ஆண்டுகளுக்குப் பிறகு - 2019 நவம்பர் 9 ஆம் திகதி - உச்சநீதிமன்றம் இறுதித் தீர்ப்பை வழங்கியது,

“மசூதியின் உள் முற்றத்தில்தான் ராமர் பிறந்ததாக இந்துக்கள் நம்பி வந்துள்ளனர். ஆனால், உள்முற்றத்தில் முஸ்லிம்கள் தொழுகையை நிறுத்தியதாக எந்த ஆதாரமும் இல்லை. 1992 ஆம் ஆண்டு பாபர் மசூதி இடிக்கப்பட்டது சட்டத்துக்கு புறம்பானது. 1949 ஆம் ஆண்டு டிசம்பர் 16 ஆம் திகதி முதல் தொழுகை நிறுத்தப்பட்டதால் மட்டும் மசூதி கைவிடப்பட்டதாக கருதமுடியாது. வழிபடும் மக்களின் நம்பிக்கையை நீதிமன்றம் கருத்தில் எடுத்துக்கொண்டாகவேண்டும்.

“பாபர் மசூதி இடிக்கப்பட்ட இடத்தில் ராமர் கோவில் கட்டலாம். இதற்குரிய அறக்கட்டளை ஒன்றை மூன்று மாதங்களில் மத்திய அரசு அமைக்க வேண்டும். அந்த அறக்கட்டளை ராமர் கோயில் கட்டுவதற்கான பணிகளை மேற்கொள்ள வேண்டும். அயோத்தியில் வக்பு வாரியம் அமைந்துள்ள இடத்தில் இஸ்லாமியர்கள் தொழுகை நடத்த 5 ஏக்கர் மாற்று இடம் வழங்கவேண்டும்”


- ஆகியவை தீர்ப்பின் முக்கிய அம்சங்கள் :

பெரும்பான்மை மக்களின் நம்பிக்கை மற்றும் உணர்வுகளின் அடிப்படையில் இந்த தீர்ப்பு வழங்கியிருப்பதால், சிறுபான்மையான இஸ்லாமியர்கள் உரிமைகளும், உணர்வுகளும் கருத்திற்கொள்ளாமல் சர்ச்சைக்குரிய ஒட்டுமொத்த இடத்தையும் ஒரு சாராருக்கு வழங்கி நீதிமன்றம் தீர்ப்பு வழங்கிருந்தாலும் நாட்டின் ஒற்றுமை கருதி சிறுபான்மை இஸ்லாமியர்கள் ஏற்றுக் கொண்டதாகவே நாம் உணர முடிகிறது.

உச்ச நீதிமன்றத்தால் 1994 ஆம் ஆண்டு “தேசிய அவமானச் செயல்” என்று கூறப்பட்ட ஒரு நிகழ்வு - 26 ஆண்டுகளுக்குப் பிறகு - இன்று ஒரு வெற்றிவிழாவாக பரப்புரை செய்யப்பட்டு, நாட்டின் பிரதமர் கலந்துகொண்டு விமர்சையாக கொண்டாடப்படுகிறது. இது இந்தியாவின் அரசியலமைப்பு சட்டத்தின்படி, நாட்டிலுள்ள வழிபாட்டுத் தலங்கள் ஆகஸ்ட் 15 1947 ஆம் ஆண்டு எப்படி இருந்ததோ அப்படியே பாதுகாக்கப்படும் என்ற சட்டத்தை மறுப்பதோடு மட்டுமல்லாமல், உணர்வால் புண்பட்டு, உரிமைகள் இழந்து நிற்கும் நாட்டின் ஒருதரப்பு மக்களை கிஞ்சித்தும் கருத்தில் கொள்ளவில்லை என்பது வேதனையான விடயம்.

இந்தியாவை ஆளும் அரசு, மக்களுக்கான அடிப்படை கட்டமைப்புகளைப் பற்றிய திட்டங்களை செயல்படுத்தாமல் மக்களின் மதம் மற்றும் இறை நம்பிக்கைகளை வைத்தே அரசியல் செய்துவருகிறது. கடவுளையும்கூட தங்களது சுயநலத்துக்காகவே தொடர்ந்து பயன்படுத்துகிறது. ஒரு நாட்டின் ஆட்சியை பிடிக்க மக்களின் மதம் மற்றும் இறை உணர்வுகளை மூலப்பொருளாக மாற்ற முடியும் என்பதை செயல்வடிவம் கொடுத்து அதில் வெற்றியும் பெற்றிருக்கிறார்கள்.

சமீப காலமாக மக்களாட்சி தத்துவத்தில் இயங்கும் பல நாடுகள், தங்கள் நாட்டில் வாழும் சிறுபான்மை மக்கள்தான் பெரும்பான்மை மக்களுக்கான உரிமை மற்றும் உணர்வுகளுக்கான அச்சுறுத்தல் என முன் நிறுத்தி அதில் வெற்றியும் கண்டு வருகிறார்கள். இலங்கையின் பெரும்பான்மை அரசு, இந்தியாவின் பாரதிய ஜனதா அரசு தலைமையிலான பெரும்பான்மைவாத அரசு, அமெரிக்காவின் டொனால்ட் ட்ரம்ப் அரசு, துருக்கி நாட்டு அரசு ஆகியவை வாழும் சான்றுகளாக உள்ளன. ■



# வீட்டிற்கு வெளியே ஏற்படும் நெருக்கடி வீட்டிற்குள் இடம்பெறும் வன்முறைக்குக் காரணமாக இருக்கக்கூடாது.

குடும்ப வன்முறை ஒருபோதும்
ஏற்றுக்கொள்ளத் தக்கதல்ல

## உங்களுக்கு உதவுவதற்கான சேவைகள் உள்ளன

'ஆடவர் உதவி இணைப்'(MENSLINE) பினை அழையுங்கள்

1300 78 99 78

MENSLINE.ORG.AU/LANGUAGES

உங்களுடைய செய்கைகள் அல்லது உறவுகளைப் பற்றி நீங்கள் கவலைப்பட்டுக்கொண்டிருந்தால், உங்களுக்கு உதவுவதற்கான சேவைகள் உள்ளன. ஆடவர்களுக்கான இலவச மற்றும் இரகசிய அறிவுரை மற்றும் ஆதரவுதவியை எந்த நேரத்திலும் பெறுங்கள்.

வேறொரு மொழியில் உங்களுக்கு உதவி தேவைப்பட்டால், 131 450-ஐ அழையுங்கள்.



Australian Government

Authorised by the Australian Government, Canberra.



லண்டனிலிருந்து
கருணாகரன்

# சிறிலங்கா அரசு புதுவிதமாக இன்று சிங்கள மக்களின் பொருளாதார கைதி

**வீரகேசரியின் ஆங்கில வார இதழான "Weekend Express" பாதுகாப்பு பத்தியாளரான P.கருணாகரன், கொழும்பிற்கான BBC தமிழ் நிருபராகவும் I.A.N.S. செய்திச் சேவையின் நிருபராகவும் கடமையாற்றியவர். துற்போது லண்டனில் வசிக்கும் அவர் எதிரொலிக்கு எழுதியுள்ள சிறிலங்கா தேர்தல் தொடர்பான சிறப்பு ஆய்வுக் கட்டுரை.**

தெற்காசியாவில் மிகவும் பழமைவாய்ந்த ஜனநாயகக் குடியரசுகளில் ஒன்றான சிறிலங்காவில் மற்றுமொரு பொதுத் தேர்தல் நிறைவடைந்துள்ளது. வழமையான சூறாவளித் தேர்தல் பிரசாரங்கள், அரசியல்சேறுபூசல்கள், உட்கட்சி வெட்டுக்குத்துக்கள், தேர்தல் வாக்குறுதிகள், விஞ்ஞாபனங்கள்போன்றவற்றிற்கு அப்பால், இம்முறைத் தேர்தலும் அதன் முடிவுகளும் பல்வேறு வழிகளில்முக்கியமானவையாக அமைந்துள்ளன.

சிறிலங்காவின் சுதந்திரத்திற்குப் பின்னரான வரலாற்றில், மாறி மாறி ஆட்சிக்கு வந்த இரு பிரதான தேசியக் கட்சிகள் - ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் சிறிலங்கா சுதந்திரக் கட்சி - இரண்டுமே உட்கட்சிப் பூசல்களினால் சின்னாபின்னமாகிப் போயிருந்த நிலையில், அவ்விரு கட்சிகளின் பின்புலத்தில் உருவாக்கப்பட்ட இரு தேர்தல் கூட்டணிகளுக்கிடையிலான போட்டியாகவே 2020 பாராளுமன்றத் தேர்தல் இடம் பெற்றிருந்தது.

முடிவில், வெறும் இரண்டே வருடங்களுக்கு முன்னர் சிறிலங்கா சுதந்திரக் கட்சியிலிருந்து பிரிந்து சென்று முன்னாள்ஜனாதிபதி மஹிந்தராஜபக்ச தலைமையில் உருவாக்கப்பட்ட சிறிலங்கா பொதுஜன பெரமுன நாடளாவிய ரீதியில் அளிக்கப்பட்ட வாக்குகளில் சுமார் 59 சதவீதமான வாக்குகளை அள்ளி145 ஆசனங்களுடன் ஏறத்தாழமூன்றில்இரண்டு பெரும்பான்மையைப் பெற, தேர்தலுக்கு ஒரு சில மாதங்களுக்கு முன்னர் ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து பிரிந்து தனிவழி சென்று முன்னாள் ஜனாதிபதி பிரேமதாஸவின் ஏக புத்திரனான சஜித் பிரேமதாஸ தலைமையில் உதயமான ஐக்கிய மக்கள் சக்தி அண்ணளவாக 24 சதவீதமான வாக்குகளைப் பெற்று 54 ஆசனங்களுடன் பிரதான எதிர்க்கட்சியாக பரிணமித்துள்ளது.

இம்முறை ஏறத்தாள 7,45,000 வாக்குகள் நிராகரிக்கப்பட்டுள்ள வாக்குகளாகப் பதிவுசெய்யப்பட்டுள்ளன. கடந்த ஜனாதிபதித் தேர்தலின்போது செலுத்தப்பட்ட வாக்குகளில் ஒரு வீதமாகக் (1,35.000 வாக்குகள்) காணப்பட்ட நிராகரிக்கப்பட்ட வாக்குகள், இம்முறை ஏழு சதவீதமாக அதிகரித்திருப்பதற்கு பிரதான அரசியல் கட்சிகள் மீதும் அவர்களின் கொள்கைகள் மீதும் மக்கள்கொண்டுள்ளவெறுப்பினையே கோடுகாட்டி நிற்கிறது. இந்த நிராகரிக்கப்பட்ட வாக்குகளை ஒரு அரசியல் கட்சி பெற்றிருக்குமாயின், அந்தக் கட்சிக்கு சுமார் 10 ஆசனங்கள் அதிகம் கிடைத்திருக்கும்.

தமிழர் தரப்பில் வடக்கு கிழக்கில் ஏகபோக உரிமையைக்கொண்டிருந்த தமிழ் தேசியக் கூட்டமைப்பிற்கு இம்முறைத் தேர்தல் பாரிய பின்னடைவினை ஏற்படுத்தியிருக்கிறது. கடந்த பாராளுமன்றத்தில் 16 ஆசனங்களைக் கொண்டிருந்த இந்தக் கட்சிக்கு இம்முறை10 ஆசனங்களை மட்டுமே கைப்பற்ற முடிந்துள்ளது. பல தேர்தல் தொகுதிகளில் மிகவும் சொற்ப வாக்குகள் வித்தியாசத்திலேயே இக்கட்சி வென்றிருக்கிறது.

அகில இலங்கை தமிழ் காங்கிரஸூக்குஇரண்டுஆசனங்கள்கிடைத்திருப்பதும், முன்னாள் முதலமைச்சர் விக்கினேஸ்வரன் தலைமையிலான கூட்டணிக்கு ஒரு ஆசனம் கிடைத்திருப்பதும் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் எதிர்கால அரசியலுக்கு பெரும் சவாலாக அமையலாம்.

தென்னிலங்கையைப் பொறுத்தவரையில், கட்சியின் கொள்கைகள், பிரசாரங்கள், வாக்குறுதிகள் என்பவற்றிற்கு அப்பால், கட்சிப்பாரம்பரியமேகடந்த கால தேர்தல்களில் செல்வாக்குச் செலுத்தும் காரணியாக இருந்து வந்தது. அதாவது, ஐக்கிய தேசியக் கட்சிக்கு வாக்களிக்கும் வாக்காளர்கள் பாரம்பரியமாகவே அந்தக் கட்சிக்கு வாக்களித்து வந்திருந்தனர். அதேபோன்று, சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கு வாக்களிக்கும் வாக்காளர்கள் தலைமுறை தலைமுறையாகவே அந்தக் கட்சிக்கு வாக்களித்து வந்தனர். சில தேர்தல் தொகுதிகள் இந்தக் கட்சிகளின் பாரம்பரிய வாக்கு வங்கிகளாகஅடையாளப்படுத்தப்படும் அளவிற்கு அந்த மக்களின் கட்சி விசுவாசம் வெளிப்படுத்தப்பட்டுவந்திருந்தது. பல இடங்களில் தம்மில் ஓடுவது கட்சிஇரத்தமேஎன்றும், வெட்டினால் கட்சியின் நிறமே இரத்தமாக வெளிவரும் என்றளவுக்கு வாக்காளர்கள் தத்தமது கட்சிகளுக்கும், கட்சித் தலைவர்களுக்கும் விசுவாசமாக இருந்தனர்.

ஆனால், இந்தநிலை அண்மைய தேர்தல்களில் விரைவான மாற்றத்தை நோக்கி நகர்ந்து கொண்டிருந்ததனை அவதானித்த பசில் ராஜபக்ச போன்ற தென்னிலங்கை தேர்தல் அரசியல் விற்பன்னர்கள், இந்த மாற்றத்தைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்தத் தொடங்கினர்.

இதன்ஒருவெளிப்பாடுதான்"பொது ஜனபெரமுன"என்றசிங்கள அடிப்படைவாதக் கட்சி. கடந்த இரண்டு வருடங்களில்செதுக்கப்பட்ட இந்தக்கட்சி நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதியை மட்டுமல்ல, பாராளுமன்றில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையையேதற்போதுதன்னகத்தேகொண்டிருப்பது சிறிலங்காவில் மட்டுமல்ல, தெற்காசியாவிலேயே ஒரு பாரிய அரசியல் சாதனையாக பார்க்கப்படுகிறது.

ஆனால், கட்சியின் கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டு இந்த மாற்றம் நிகழ்ந்திருக்குமாக இருந்தால், இது பெரிதும் வரவேற்கப்படக்கூடியதாக இருந்திருக்கும். மாறாக, இந்தப் பாரிய மாற்றம் அல்லது அரசியல் சாதனை ராஜபக்ச என்ற ஒரு குடும்பத்தினை மையப்புள்ளியாகக் கொண்டு நிகழ்ந்திருப்பது உண்மையான ஜனநாயகத்திற்கு விழுந்த ஒரு பேரிடியாகவே பார்க்கப்படவேண்டும். இதன் துர்விளைவுகளைத் தென்னிலங்கை சந்திக்கப்போகும் காலம் வெகுதொலைவில் இல்லை.

இனி தேர்தலுக்குப் பின்னரான உள்ளூர், வெளியூர் சவால்களைப் பற்றி சற்று நோக்குவோம்.

## அரசியல்

பொது ஜன பெரமுன என்ற கட்சி தமிழீழ விடுதலைப் புலிகளை இராணுவ ரீதியாக வெற்றிகொண்ட அரசிற்கு தலைமை தாங்கிய முன்னாள் ஜனாதிபதி மஹிந்தராஜபக்சவின் தென்னிலங்கை அரசியல் செல்வாக்கினைக் காத்திரமான பின்புலமாகக் கொண்டிருந்த போதிலும், அதனை ஒரு அரசியல் கட்சியாகச் செதுக்கிய ஒட்டுமொத்த பெருமையும் அவரது இளைய சகோதரர்களில் ஒருவரான பசில் ராஜபக்சவையே சாரும்.

அவர் இந்தக் கட்சியை கட்டியெழுப்பியது மட்டுமன்றி ஏனைய எதிர்க் கட்சிகளையும், மொழி, மத பேதம் பாராது நிர்மூலம் செய்திருப்பது, அரசியல் ரீதியாக இந்தக் கட்சியின் எதிர்காலத்தினை ஸ்திரப்படுத்தியிருக்கிறது என்றே கூறவேண்டும்.

**(11ஆம் பக்கம் பார்க்க)**



# சிறிலங்கா அரசு புதுவிதமாக இன்று சிங்கள மக்களின் பொருளாதார கைதி

(10ஆம் பக்கத் தொடர்ச்சி)

இனாமாகக் கிடைத்த தேசியப் பட்டியல் ஆசனங்களுக்கான நபர்களைப் பிரேரிப்பதற்கே அல்லாடிய சஜித் பிரேமதாஸ தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தி, பாராளுமன்றிற்கு உள்ளேயும், வெளியேயும் ஒரு ஸ்திரமான எதிர்கட்சியாக விளங்குமா என்ற சந்தேகத்தை ஏற்கனவே அதன் ஆதரவாளர்கள் மத்தியில் தோற்றுவித்திருக்கிறது. இதன் தெரிவுசெய்யப்பட்ட உறுப்பினர்கள் சிலர் ஆளுங்கட்சிக்குத் தாவுவதற்கான நகர்வுகளை மேற்கொண்டுவருவதாகத் தகவல்கள் ஏற்கனவே கசியத் தொடங்கிவிட்டன.

கடந்த மைத்திரி-ரணில் நல்லாட்சியின்போது உருவாக்கப்பட்ட 19வது அரசியலமைப்புத் திருத்தத்தின் பிரகாரம், நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியின் அதிகாரங்கள் பெருமளவில் வெட்டிக் குறைக்கப்பட்டிருப்பதனால், அவர் மக்களுக்கு வழங்கிய தேர்தல் வாக்குறுதிகளையும், சலுகைகளையும் நிறைவேற்ற தமது கட்சிக்கு பாராளுமன்றில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலத்தை வழங்கும்படி மஹிந்த ராஜபக்சவும் அவரது பொதுஜன பெரமுனவும், மக்களிடம் கோரியிருந்தனர்.

மக்களும் அவரது கட்சிக்கு வாக்குகளை அள்ளி வழங்கி மஹிந்த ராஜபக்சவை மீண்டும் பிரதமராக்கியிருப்பது மட்டுமன்றி மூன்றில் இரண்டு பெரும்பான்மையையும் வழங்கியிருக்கிறார்கள்.

அதாவது, எண்ணிக்கையில் சிறுபான்மையான தமிழ்பேசும் மக்களின் ஆதரவு ஏதுமின்றி பெரும்பான்மை சிங்கள மக்களின் வாக்குப் பலத்தில் மட்டுமே இந்த சகோதரர்கள் ஆட்சிப்பீடம் ஏறியிருக்கிறார்கள்.

இப்போது, ஜனாதிபதிக்கோ, அவரது அண்ணன் பிரதமருக்கோ அல்லது அவர்களது கட்சிக்காரர்களுக்கோ சாக்குப்போக்கு எதுவும் சொல்ல முடியாது. கண்மூடித்தனமாக அள்ளி வழங்கிய தேர்தல் வாக்குறுதிகளைவிரைந்து நடைமுறைப்படுத்தவேண்டிய ஒரு இக்கட்டான நிலைக்கு அவர்கள் தள்ளப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் இதனை நிறைவேற்றத் தாமதிப்பார்களாக இருந்தால், தென்னிலங்கை மக்கள் இவர்களுக்கு எதிராகத் திரும்பும் ஒரு கொதிநிலையிலேயே காணப்படுகிறது.

**பொருளாதாரம்**

கொரோனாவின் தாக்கம் காரண-மாக சிறிலங்காவின் பொருளாதாரம் மட்டுமல்ல, ஒட்டுமொத்த சர்வதேசத்தின் பொருளாதாரமே மிக மோசமாகப் பாதிக்கப்பட்டிருக்கும் இந்நிலையில், மக்களின் அடிப்படைத் தேவைகளையும், சேவைகளையும் வழங்குவதற்கே ஊசலாடிக்கொண்டிருந்த சிறிலங்காவிற்கு தேர்தல்கால சலுகைகளை விரைந்து வழங்குவது எந்தளவுக்குச் சாத்தியம்?

ஏற்கனவே முன்னைய மைத்திரி - ரணில் அரசினால் அரச ஊழியர்களுக்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 10,000 சம்பள உயர்வினை கஜானாவில் ஏற்பட்டிருக்கும் வெறுமை காரணமாக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச இடைநிறுத்திவைத்திருக்கிறார்.

கொறொனா சிறிலங்காவின் பொருளாதாரத்தை தாக்குவதற்கு முன்னரான 2020 இன் முதல் காலாண்டில் அதன் பொருளாதார வளர்ச்சி -1.6 என்ற எதிர்மறை சுட்டியாகவே காணப்பட்டது. இந்நிலையில், சிறிலங்காவின் 2020 ஆண்டிற்கான பொருளாதார வளர்ச்சி -6.5 என்ற மிக மோசமான எதிர்நிலையை எட்டுமென ஆசிய அபிவிருத்தி வங்கி எச்சரித்திருக்கிறது.

வெறுமனே உள்ளூரில் நாணயத் தாள்களை அச்சிட்டு, தற்காலிகமாக பொருளாதரத்தைக் கொண்டுசெல்ல எடுக்கும் அனைத்து முயற்சிகளும், எதிர்காலத்தில் கட்டுப்படுத்தப்படமுடியாத பணவீக்கத்தினைத் தோற்றுவிக்கும் என்று எச்சரிக்கிறார்கள் பொருளாதார நிபுணர்கள். “எங்களை ஆட்சிப் பீடம் ஏற்றுங்கள், மூன்றில் பெரும்பான்மை தாருங்கள்” - என்ற ராஜபக்ச சகோதரர்களிடம் சலுகைகளையும், பொருளாதார அபிவிருத்தியினையும் இரு கரங்கூப்பி எதிர்பார்த்திருக்கும் வாக்காளப் பெருமக்களை இவர்களால் எவ்வாறு திருப்திப்படுத்த முடியும்.

அமெரிக்கா, பிரித்தானியா மற்றும் ஐரோப்பியஒன்றியநாடுகள்கூட கொரோனாவின் தாக்கத்தினால் பொருளாதார ரீதியாக மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளதால் சிறிலங்காவிற்கு உதவக் கூடிய நிலையில் இல்லை. சீனா மட்டுமே சிறிலங்காவிற்கு கைகொடுக்க முன்வந்துள்ளது. ஏற்கனவே, சிறிலங்காவில் சீனாவின் அபரிமிதமான தலையீடு காரணமாக கடுஞ்சினம் கொண்டுள்ள அமெரிக்காவும், இந்தியாவும் சீனக் கடன் பொறிக்குள் சிறிலங்கா தொடர்ச்சியாக வீழாதிருப்பதனையும், அங்கே சீனாவின் செல்வாக்கு மேலும் வலுப்பெறுவது தடுக்கப்படுவதனை உறுதிசெய்யவும் சிறிலங்கா மீது மறைமுகமான அழுத்தங்களைப் பிரயோகித்து, கட்டுப்பாடுகளையும் விதிக்கும் என்றே எதிர்பார்க்கலாம்.

அழுத்த உத்தியாக, பாராளுமன்றில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையைக் கொண்டுள்ள இந்த அரசு தமிழ் தேசியப் பிரச்சனைக்கான தீர்வாக, இந்திய-இலங்கை ஒப்பந்தத்தின் பயனாக உருவாகிய 13வது திருத்தச் சட்டத்தினைமுழுமையாகஅமுல்படுத்தும்படி ராஜபக்ச சகோதரர்களை நிர்ப்பந்திக்கும் வாய்ப்புக்களே அதிகம்.

சீனாவின் செல்வாக்கினால் ஏற்படக் கூடிய சூழ்நிலையைத் தவிர்க்கும் நோக்கில் உலகவங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் சர்வதேச நாணய நிதியங்கள் போன்ற சர்வதேச நிதி அமைப்புக்களின் உதவியை சிறிலங்கா நாடுமாயின் அந்த அமைப்புக்கள் சிறிலங்கா மீது நுண்பொருளாதாரக் கட்டுப்பாடுகளை விதிப்பது மட்டுமன்றி மனித உரிமை மேம்பாடு, நல்லாட்சி, இனங்களுக்கிடையேயான நல்லுறவு, போர்க்குற்றங்களுக்கான பொறுப்புக்கூறல் போன்ற விடயங்களில் சர்வதேசத்திற்கு வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றும்படி கோரிநிற்கும்.

தேர்தல் பிரச்சார மேடைகளில் இனவாதத்தைக் கக்கி, சர்வதேச அமைப்புக்களுக்கு எதிராக வீறாய்ப்புப் பேசி, தென்னிலங்கை மக்களின் ஏகோபித்த ஆணையைப் பெற்று ஆட்சிப்பீடம் ஏறியிருக்கும் ராஜபக்ச சகோதரர்கள் எவ்வாறு சர்வதேசத்திற்கு வழங்கிய வாக்குறுதிகளையும், கடப்பாடுகளையும் உள்ளூரில் நிறைவேற்ற முடியும்?

பாதுகாப்புச் செயலர் உட்பட நான்கு அமைச்சுக்களின் செயலாளர்களாக தற்போது நியமிக்கப்பட்டுள்ள முன்னாள் இராணுவ உயர் அதிகாரிகள் போர்க்குற்றங்களைப் புரிந்த அதிகாரிகள் பட்டியலில் ஏற்கனவே இடம்பிடித்துள்ளநிலையில், பாரிய எதிர்ப்புக்களை உள்ளூரில் ஏற்படுத்தக் கூடிய விசப்பரீட்சையில் இவர்களால் ஈடுபடமுடியுமா?

இராணுவ மயப்படுத்தப்பட்டு வரும் அரச இயந்திரம்தான் இதனை அனுமதிக்குமா?


வெளிநாட்டமைச்சின் செயலா-ளராக நியமிக்கப்பட்டுள்ள முன்னாள் கடற்படைத் தளபதி அட்மிரல் ஜயநாத் கொலம்பகேவிற்கு இவ்வாறான சிக்கல்களைத் தீர்க்ககூடிய வகையிலான இராஜதந்திர அறிவும், ஆற்றலும், அனுபவமும் உண்டா?

ஆகவே, புதிய பாராளுமன்றம் கூடுவதற்கு முன்னதாகவே பொருளாதாரம், சர்வதேச உறவு போன்ற முக்கிய விடயங்களில் இந்தப் புதிய ஆட்சியாளர்கள் பாரிய சிக்கல்களையும், சவால்களையும் எதிர்நோக்கியுள்ளார்கள்.

அரசியல் ரீதியாக, கோட்டாபய ராஜபக்சவை ஜனாதிபதியாக்கும் முயற்சியின்போது தோற்றுவிக்கப்பட்ட "வியத்மக" என்ற அமைப்பின் உறுப்பினர்களை (இவர்களில் அநேகமானோர் முன்னாள், இந்நாள் படை அதிகாரிகள்) முன்னிறுத்தி, கட்சியின் விசுவாசிகளையும், சிரேஷ்ட உறுப்பினர்களையும் உதாசீனம் செய்து ஆட்சிசெய்ய முற்படுவது கட்சியின் உயர்மட்ட உறுப்பினர்களுக்குக் கோபத்தையும், கொந்தளிப்பையும் ஏற்படுத்தியிருக்கிறது.

இதன் பின்னணியில், 19 வது அரசியலமைப்புத் திருத்தத்தின் பிரகாரம் நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதியின் அதிகாரங்கள் பெருமளவில் வெட்டிக்குறைக்கப்பட்டு, பிரதமருக்கு அந்த அதிகாரங்கள் வழங்கப்பட்டிருப்பது, இந்த இரு சகோதர்களுக்கு இடையில் மட்டுமன்றி, அவர்களால் நியமிக்கப்பட்ட அரச அதிகாரிகள் மற்றும் அவர்களது ஆதரவாளர்களுக்கு இடையில் விரைவில் அதிகார மோதல்கள் உக்கிரம்பெற ஏதுவாகப் போகிறது என்கிறார்கள் தென்னிலங்கை அரசியல் நோக்கர்கள்.



# சிறிலங்காவின் 225 சிங்கள கதிரைகளில் அமரப்போகும் 48 தமிழ் குரல்கள்!

ஆர்.எஸ்.

சிறிலங்காவில் நடைபெற்று முடிந்த பாராளுமன்றத் தேர்தலில் சிறிலங்கா பொதுஜன பெரமுன தலைமையிலான தாமரை மொட்டு கூட்டணி வரலாற்று வெற்றியைப் பதிவுசெய்துள்ள நிலையில், புதிய நாடாளுமன்றத்தில் ஒட்டுமொத்த தமிழ் பிரதிநிதித்துவம் பாதுகாக்கப்பட்டுள்ளதா, பாதிக்கப்பட்டிருக்கிறதா என்ற பரந்துபட்ட தளத்தின் மீது இந்தப்பத்தி தனது அவதானிப்பினை முன்வைக்கிறது.

அதிஉயர் சபையாகக் கருதப்படுகின்ற பாராளுமன்றத்திலேயே நாட்டுக்கு தேவையான சட்டதிட்டங்கள் இயற்றப்படுகின்றன. சட்டவாக்கச்சபையின் அனுமதி - அங்கீகாரம் இல்லாமல் நாட்டில் எந்தவொரு கட்டமைப்பிலும் எளிதில் மாற்றத்தை ஏற்படுத்திவிடமுடியாது. அத்துடன், ஜனாதிபதி பதவியை வகிப்பவருக்கு நிறைவேற்று அதிகாரங்கள் இருந்தாலும் அவர் பாராளுமன்றத்துக்கு பொறுப்புகூற வேண்டிய நபராகவே இருப்பார்.

இவ்வாறான விடயங்களால்தான் பாராளுமன்றமும், அங்கு இருக்கவேண்டிய பிரதிநிதித்துமும் முக்கியத்துவம் மிக்கதாக கருதப்படுகின்றது. குறிப்பாக தமது சமூகம் சார்ந்து முன்வைக்கப்படும் ஏதேனுமொரு சட்டமூலத்தில் குறைபாடுகள் இருப்பின் அவற்றை சுட்டிக்காட்டவும், அநீதி இழைக்கப்பட்டிருக்கும்பட்சத்தில் அதனை தட்டிக்கேட்டு - நீதிக்காக குரல் எழுப்புவதற்கும் ஒவ்வொரு சமூகத்தினதும் பிரதிநிதித்துவம் பாராளுமன்றத்தில் கட்டாயம் இருக்கவேண்டும்.

இம்முறை ஒன்பதாவது பாராளுமன்றத்துக்கு உறுப்பினர்களை தெரிவுசெய்வதற்காக நடைபெற்ற பொதுத்தேர்தலிலும் மக்களின் அங்கீகாரத்துடன் தமிழ் - முஸ்லிம் - மலையக உறுப்பினர்கள் 47 பேர் அதிஉயர் சபைக்கு தெரிவாகியுள்ளனர். இவர்களில் 41 பேர் மக்களினால் நேரடியாக தெரிவானவர்கள். 6 பேர் தேசியப்பட்டியல் ஊடாக நாடாளுமன்றம் செல்லவுள்ளவர்கள் ஆவர். இந்த 47 பேரில் 19 பேர் முஸ்லிம்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

(குறிப்பு - இந்தக்கட்டுரைக்குள் நுழைவதற்கு முன்னர் வாசகர்களுக்கு ஒரு சிறிய அறிவித்தல். தமிழ் பேசும் மக்களின் வாக்களிப்பு, அவர்களது தெரிவு ஆகியவை தொடர்பாக வடக்கு முதல் கிழக்கின் ஊடாக மலையகம், கொழும்பு என்று பல்வேறு பகுதிகள் பற்றி இந்த பத்தி ஆராயவிருப்பதால், வாசிப்பின் சிக்கலை தவிர்ப்பதற்காகவும் - புரிந்துகொள்ளலை இலகுவாக்குவதற்கும் - தமிழ் பேசும் முஸ்லிம் வேட்பாளர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களை "முஸ்லிம்கள்" என்று இந்தப்பத்தியில் குறிப்பிடுகிறோமே தவிர, முஸ்லிம்களும் தமிழர்களே என்ற அடிப்படை உண்மைய இந்தப்பத்தி ஒருபோதும் நிராகரிக்கவில்லை. ஆகவே, "முஸ்லிம்கள்" என்று இங்கு குறிப்பிடப்படுவதால், அவர்கள் தமிழர்கள் இல்லை என்று அர்த்தமல்ல. நன்றி)

### யாழ் மாவட்டம்

தமிழர்களின் இதயமாக விளங்கும் யாழ்ப்பாணத்தில் இம்முறை தேர்தல் நிலைவரம் பலருக்கு பல விதமான அதிர்ச்சிகளை கொடுத்திருக்கிறது.

2015 இல் நடைபெற்ற பொதுத் தேர்தலில் 2 லட்சத்து 7 ஆயிரத்து 577 வாக்குகளைப்பெற்று 5 ஆசனங்களைக் கைப்பற்றிய தமிழரசுக்கட்சியின் வாக்கு வங்கியில் இம்முறை வீழ்ச்சி ஏற்பட்டதால் 2 ஆசனங்களை இழக்கவேண்டிய நிலை ஏற்பட்டது.

கடந்தமுறை 15 ஆயிரத்து 22 வாக்குகளைப்பெற்று ஓர் ஆசனத்தையேனும் வெல்லாமல் மாவட்டத்தில் ஐந்தாம் இடத்துக்கு பின்தள்ளப்பட்ட அகில இலங்கை தமிழ் காங்கிரசுக்கான வாக்குக்கட்டமைப்பில் இம்முறை வளர்ச்சி ஏற்பட்டிருப்பதை பெறுபேறுகள் எடுத்துக்காட்டுகின்றன. 2015 இல் 5 வீத வாக்குகளைப் பெற்றிருந்த அக்கட்சி, இம்முறை தேர்தலில் 15.40 சதவீத வாக்குகளுடன் மாவட்டத்தில்இரண்டாம்இடத்துக்குமுன்னேறியுள்ளது.

அத்துடன், தமிழ் காங்கிரசுக்கு ஒரு தேசியப்பட்டியல் ஆசனமும் கிடைத்துள்ளது. மாற்று அரசியல் தளத்தில் இது ஒரு திருப்பு முனையாக பார்க்கப்படுகின்றது.

2015 இல் 30 ஆயிரத்து 232 வாக்குகளைப்பெற்று ஓர் ஆசனத்தை கைப்பற்றிய ஈ.பி.டி.பி. இம்முறை 45 ஆயிரத்து 797 வாக்குகளைப்பெற்று இருப்பை தக்கவைத்துக்கொண்டாலும் மாவட்டத்தில் நான்காம் இடத்துக்கு பின்தள்ளப்பட்டுள்ளது. இருந்தாலும் வன்னியிலும் அக்கட்சிக்கு ஓர் ஆசனம் கிடைத்துள்ளது.

சிறிலங்கா சுதந்திரக்கட்சி தலைமையிலான கூட்டணி 2015 இல் யாழ். மாவட்டத்தில் 5.76 வீத வாக்குகளைப் பெற்றிருந்தாலும்ஒருஆசனம்கூட கிடைக்கவில்லை. எனினும், இம்முறை அங்கஜன் இராமநாதன் தலைமையில் யாழில் தனித்து களமிறங்கிய சுதந்திரக்கட்சி 13.75 சதவீத வாக்குகளைப்பெற்று மூன்றாம் இடத்துக்கு முன்னேறி ஆசனமொன்றையும் வென்றுள்ளது. அங்கஜனின் இந்த வெற்றியே 67 வருடகால பழமை வாய்ந்த சுதந்திரக்கட்சிக்கு, பாராளுமன்றத்தில் தனிக்கட்சிக்கான அங்கீகாரத்தை பெற்றுக்கொடுத்துள்ளது.

அவரின் இந்த வெற்றியால் சுதந்திரக் கட்சிக்கும் பாராளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல் கட்சி என்ற அந்தஸ்த்து கிடைத்துள்ளது. அதாவது பாராளுமன்றத்தில் பிரதிநிதித்துவப்படுத்தும்கட்சிக்கானசகலவரப்பிரதாசங்களும் அங்கஜனுக்கு கிடைக்கும். களுத்துறை, நுவரெலியாமற்றும்யாழ்ப்பாணம்ஆகிய மூன்று மாவட்டங்களில் மட்டுமே சுதந்திரக்கட்சி தனித்து போட்டியிட்டது. எனினும், களுத்துறை, நுவரெலியா மாவட்டங்களில் அக்கட்சி வெற்றிபெறவில்லை. ஒரு வீதத்துக்கும் குறைவான வாக்குகளே கிடைக்கப்பெற்றுள்ளது.

விக்னேஸ்வரன், சுரேஷ் பிரேமச்சந்திரன், அனந்தி சசிதரன் மற்றும் சிவாஜிலிங்கம்அணியினரின்சங்கமத்துடன்உதயமான தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி, கன்னி தேர்தலிலேயே 35 ஆயிரத்து 927 வாக்குகளுடன்ஓர்ஆசனத்தை வென்றுள்ளது. அக் கூட்டணியின்சார்பில்முன்னாள்முதலவர் விக்னேஸ்வரன் பாராளுமன்றம் செல்லவுள்ளார்.

2015இல்20ஆயிரத்து25வாக்குகளைப் பெற்று ஓர் ஆசனத்தைக் கைப்பற்றிய ஐக்கிய தேசியக்கட்சிக்கு இம்முறை யாழ்ப்பாணத்திலும் பேரிடிவிழுந்தது. 13 ஆயிரத்து 71 வாக்குகளைப்பெற்று எம்.பியான விஜயகலாமகேஸ்வரனுக்கு இம்முறையும் எம்.பியாகும் கனவு நனவாகவில்லை.

தமிழரசுக்கட்சியின் சார்பில் யாழ். மாவட்டத்தில்விருப்புவாக்குபட்டியலில் முதலிடம் பிடித்த எஸ். சிறிதரன் 35 ஆயிரத்து 884 வாக்குகளைப்பெற்றார். கடந்த முறை 72 ஆயிரத்து 58 வாக்குகளை அவர் பெற்றிருந்தார்.

2015 பொதுத்தேர்தலில் 58 ஆயிரத்து 43 வாக்குகளைப்பெற்ற எம்.ஏ. சுமந்திரன் இம்முறை 27 ஆயிரத்து 834 வாக்குகளையும், கடந்தமுறை53ஆயிரத்து740வாக்குகளைப்பெற்ற த. சித்தார்த்தன் இம்முறை 23 ஆயிரத்து 840 வாக்குகளையும்பெற்று வெற்றிபெற்றுள்ளனர்.

இலங்கைத் தமிழரசுக்கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா 20 ஆயிரத்து 358 வாக்குகளை பெற்றிருந்தாலும் அவரால் வெற்றிபெறமுடியவில்லை. 2015 பொதுத் தேர்தலின்போது 58 ஆயிரத்து 782 வாக்குகளைப்பெற்றுமாவட்டத்தில்இரண்டாம் இடத்தை மாவை பிடித்திருந்தார்.

20 ஆயிரத்து 392 விருப்பு வாக்குகளைப்பெற்ற சரவணபவனுக்கும் பாராளுமன்றம் செல்வதற்கான வாய்ப்பு கிடைக்கவில்லை. சென்றமுறை 43 ஆயிரத்து 289 வாக்குகளைப்பெற்றிருந்தார்.

அகில இலங்கை தமிழ் காங்கிரஸின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்துக்கு 31 ஆயிரத்து 658 வாக்குகள் கிடைத்தன. 2010,2015 ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற பொதுத்தேர்தல்களின்போது அவரால் வெற்றிபெறக்கூடியதாக இருக்கவில்லை. அவரது கட்சியிலிருந்து இம்முறை தேசியப்பட்டியல் மூலம் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரனும் நாடாளுமன்றம் செல்லவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

ராஜபக்சவின் அமைச்சரவையில் இடம் பிடிப்பார் எனக்கருதப்படும் டக்ளஸ் தேவானந்தா 32 ஆயிரத்து 146 வாக்குகளை பெற்றுள்ளார். டக்ளஸ் கடந்தமுறை 16 ஆயிரத்து 399 விருப்பு வாக்குகள் பெற்றிருந்த நிலையில் இம்முறை அவருக்கான மக்கள் ஆதரவு அதிகரித்துள்ளது.

### வன்னி மாவட்டம்




வன்னி தேர்தல் மாவட்டத்தில் 6 ஆசனங்களை இலக்குவைத்து 17 அரசியல் கட்சிகளில் இருந்தும், 28 சுயேட்சைக் குழுக்களில் இருந்தும் மொத்தம் 405 பேர் போட்டியிட்டனர்.

வன்னி தேர்தல் மாவட்டத்தில் 89 ஆயிரத்து 886 வாக்குகளைப்பெற்று 2015 இல் நான்கு ஆசனங்களை தம்வசப்படுத்திய தமிழரசுக்கட்சிக்குஇம்முறை69ஆயிரத்து 916 வாக்குகளே கிடைக்கப்பெற்றன. இதனால் ஓர் ஆசனத்தை வன்னியில் இழக்கவேண்டிய நிலை அக்கட்சிக்கு ஏற்பட்டது.

42 ஆயிரத்து 524 வாக்குகளைப்பெற்ற பொதுஜன பெரமுன, 37 ஆயிரத்து 883 வாக்குகளைப்பெற்ற ரிஷாத்தின் ஐக்கிய மக்கள் சக்தி, 11 ஆயிரத்து 310 வாக்குகளைப்பெற்ற ஈ.பி.டி.பி. ஆகியவற்றுக்கு தலா ஓர் ஆசனம் வீதம் பகிரப்பட்டுள்ளது.

தமிழரசுக்கட்சியின் சின்னத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் வன்னியில் போட்டியிட்ட வேட்பாளர்களில் சார்ள்ஸ் நிர்மலநாதன், செல்வம் அடைக்கலநாதன், வினோநோகராதலிங்கம் ஆகியோர் வெற்றிபெற்றுள்ளனர்.

கூட்டமைப்பின் சார்பில் 2015 இல் போட்டியிட்டு 25 ஆயிரத்து 27 வாக்குகளுடன் வெற்றிபெற்ற சிவசக்தி ஆனந்தன், இம்முறை விக்னேஸ்வரன் அணியில் இணைந்து போட்டியிட்ட நிலையில் தோல்வியடைந்துள்ளார். கூட்டமைப்பின் தேசியப்பட்டியல் ஊடாக கடந்தமுறை தெரிவான சாந்தி சிறீஸ்கந்தராஜாவும் தோல்வியடைந்துள்ளார். இருந்தாலும் 11 ஆயிரத்து 710 வாக்குகளைப்பெற்றுள்ளார்.

ஈ.பி.டிபியின் சார்பில் களமிறங்கி 3 ஆயிரத்து 203 வாக்குகளைப்பெற்று பாராளுமன்றம் செல்லவுள்ள குலசிங்கம் திலீபன் புதுமுக உறுப்பினர்.

2015 இல் நடைபெற்ற பாராளுமன்ற தேர்தலில் வன்னி தேர்தல் தொகுதியில் ஈ.பி.டிபி. 2 ஆயிரத்து 120 வாக்குகளை மாத்திரமேபெற்றது. ஆனால்இம்முறை11 ஆயிரத்து 310 வாக்குகளைப்பெற்றுள்ளது.

வன்னியில் தமிழ் மக்கள் தேசிய கூட்டணி 8 ஆயிரத்து 789 வாக்குகளையும், தமிழ் காங்கிரஸ் 8 ஆயிரத்து 232 வாக்குகளை பெற்றிருந்தாலும் ஐந்து வீதம் என்ற இலக்கை தாண்டவில்லை. கடந்தமுறை தமிழ் காங்கிரசுக்கு ஆயிரத்து 174 வாக்குகள் மாத்திரமே கிடைக்கப்பெற்ற நிலையில், இம்முறை பெறுபேறுகளுடன் ஒப்பிடுகையில் வன்னியில் அந்தக் கட்சியின் செல்வாக்கு அதிகரித்திருக்கிறது என்றே சொல்லவேண்டும்.

இதேவேளை, வன்னியில் வெற்றிபெறுவார் என்று எதிர்பார்க்கப்பட்ட - கேடய சின்னத்தில் - சுயேட்சையாக களமிறங்கிய சந்திரகுமார் தோல்வியடைந்துள்ளார்.

### மட்டக்களப்பு மாவட்டம்

கிழக்கு மாகாணத்தில் தமிழ்மக்கள் செறிந்துவாழும்மாவட்டமாகவும்தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அரசியல் கோட்டையெனவும் விளிக்கப்படும் மட்டக்களப்பு மாவட்டத்திலும் தமிழரசுக்கட்சி தலைமையிலான கூட்டமைப்புக்கு இம்முறை பெரும் பின்னடைவு ஏற்பட்டுள்ளது.

2015 இல் நடைபெற்ற பொதுத்தேர்தலில் இம்மாவட்டத்தில் 53.25 சதவீத வாக்குகளைப்பெற்று (127,185) மூன்று ஆசனங்களைக் கைப்பற்றிய தமிழரசுக்கட்சிக்கு, பதிவுசெய்யப்பட்ட வாக்காளர்களின் எண்ணிக்கை அதிகரித்துக்காணப்பட்டபோதிலும் இம்முறை 26.66 சதவீத (79,460) வாக்குகளை மாத்திரமே பெறக்கூடியதாக இருந்துள்ளது. கடந்த முறையுடன் ஒப்பிடுகையில் மட்டக்களப்பில் கூட்டமைப்பின் வாக்கு வங்கிவங்கி 26.59 வீதத்தால் சரிந்துள்ளது.

கிழக்குமாகாணத்தின்முன்னாள்முதல்வரும் தற்போது சிறைதண்டனை அனுபவித்துவருபவருமான பிள்ளையான் என்றழைக்கப்படும் சிவநேசன்துரை சந்திரகாந்தன் தலைமையிலான தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சி தேர்தலில் வெற்றி நடைபோட்டுள்ளது. 22.71 சதவீத (67,992) வாக்குகளைப்பெற்று மாவட்டத்தில் இரண்டாம் இடத்தைபிடித்து ஆசனமொன்றை கைப்பற்றியுள்ளது.

சிறைக்குள்இருக்கும்பிள்ளையானுக்கு 52ஆயிரத்து192பேர்வாக்களித்து மாவட்டத்தில் முதலாமிடம் வழங்கி அழகுபார்த்துள்ளனர் அவரது ஆதரவாளர்கள்.

இதேவேளை, தமிழரசுக்கட்சியின் வேட்பாளர்களான சாணக்கியன் 33 ஆயிரத்து 332 வாக்குகளையும், கோவிந்தன் கருணாகரன் 26 ஆயிரத்து 382 வாக்குகளைப்பெற்று புதுமுக எம்.பிக்களாக பாராளுமன்றம் செல்லவுள்ளனர்.

கூட்டமைப்பின் முன்னாள் எம்.பிக்களான யோகேஸ்வரன் 13 ஆயிரத்து 626 வாக்குகளையும், எஸ் சிறீநேசன் 25 ஆயிரத்து 303 விருப்பு வாக்குகளையும் பெற்று இம்முறை தோல்வியடைந்துள்ளனர். 2015 பொதுத்தேர்தலில் யோகேஸ்வரன் 34 ஆயிரத்து 49 வாக்குகளையும்சிறீநேசன் 48 ஆயிரத்து 821 வாக்குகளையும் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

2015 இல் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில்போட்டியிட்டு39ஆயிரத்து321 வாக்ககளைப்பெற்று, 2018 இல் மஹிந்த பக்கம்தாவிய எஸ். வியாழேந்திரன் இம்முறைசிறிலங்காபொதுஜனபெரமுனவின் மொட்டு சின்னத்தின்கீழ் மட்டக்களப்பு மாவட்டத்தில் களம்கண்டார். 22 ஆயிரத்து 218 வாக்குகளைப்பெற்று வெற்றி பெற்றுள்ளார்.

கூட்டமைப்புக்கான ஓர் ஆசனம் குறைந்திருந்தாலும் மட்டக்களப்பு மாவட்டத்திலிருந்து நான்கு தமிழ்ப்பிரதிநிதிகள் தெரிவுசெய்யப்பட்டுள்ளமை ஆறுதல் அளிப்பதாக அமைந்துள்ளதாக அரசியல் விமர்சகர்கள் சுட்டிக்காட்டுகின்றனர். கடந்தமுறை மூவர் மாத்திரமே சபைக்கு சென்றிருந்தனர்.

இதேவேளை, முஸ்லிம்கள் சார்பாக மட்டக்களப்பில் முஸ்லிம் காங்கிரஸில் போட்டியிட்ட ஹபீஸ் நஸீர் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

### திருகோணமலை மாவட்டம்

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தனின் அரசியல் கோட்டையாக விளங்கும் திருகோணமலை மாவட்டத்தில் தனது அரசியல் இருப்பை இம்முறையும் தமிழரசுக்கட்சி தக்கவைத்துக்கொண்டுள்ளது.

2015 இல் நடைபெற்ற பொதுத்தேர்தலில் 25.44 சதவீத (45,894) வாக்குகளைப்பெற்ற தமிழரசுக்கட்சி இம்முறை திருமலை மாவட்டத்தில்18.58 வீத (39,570) வாக்குகளையே பெற்றுள்ளபோதும், 21 ஆயிரத்து 422 வாக்குகளைப்பெற்று சம்பந்தன் மீண்டும் பாராளுமன்றத்துக்கு தெரிவாகியுள்ளார். கடந்தமுறை 33 ஆயிரத்து 834 விருப்பு வாக்குகளை அவர் பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

கடந்தமுறை தேசியப்பட்டியல் ஊடாக பாராளுமன்றம் சென்ற துரைரட்ணசிங்கம் இம்முறை தேர்தலில் போட்டியிடவில்லை. அவருக்கான வாய்ப்பே சண்முகம் குகதாசனுக்கு வழங்கப்பட்டதாக கூறப்படுகின்றது.

இதேவேளை, திருகோணமலை மாவட்டத்தில் ஈ.பி.டி.பி. 3 ஆயிரத்து 755 வாக்குகளையும் தமிழ் காங்கிரஸ் 2 ஆயிரத்து 745 வாக்குகளையும் பெற்றன.

ஐக்கிய மக்கள் சக்தி சார்பில் போட்டியிட்ட எஸ்.எம்.தௌபீக் மற்றும் இம்ரான் மஹ்ரூப் ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

### அம்பாறை மாவட்டம்

அம்பாறை மாவட்டத்தில் ஒரு தமிழ்ப் பாராளுமன்ற பிரதிநிதித்துவம் கடந்த காலங்களில் பாதுகாக்கப்பட்டுவந்த நிலையில் இம்முறை அது இல்லாமல்போயுள்ளது. 2015 இல் நடைபெற்ற பொதுத் தேர்தலில்கூட்டமைப்பின்சார்பில்போட்டியிட்டு 17 ஆயிரத்து 779 வாக்குகளைப் பெற்று வெற்றிபெற்ற கவிந்தன் கோடிஸ்வரன்இம்முறைதோல்வியடைந்துள்ளார்.

அம்பாறை மாவட்டத்தில் 2015 இல் 13.92சதவீத(45,421)வாக்குகளைப்பெற்ற தமிழரசுக்கட்சி 2020 பொதுத்தேர்தலில் 6.54 வீத (25,255) வாக்குகளை மாத்திரமே பெற்றுள்ளது.

கருணா தலைமையில் களமிறங்கிய அகில இலங்கை தமிழ் மகா சபை 7.61 சதவீத (29,379) வாக்குகளைப்பெற்றது. இதனால், தமிழரசுக்கட்சிக்கான வாக்குகளே பெரும்பாலும் கருணா பக்கம் சென்றது. இவ்வாறு இரு தரப்புக்கும் தமிழர்கள் வாக்களித்ததால், வாக்குகள் சிதறி இருந்த பிரதிநிதித்துவமும் இல்லாமல் போயுள்ளது.

ஆனால், தமிழ்த்தேசியக்கூட்டமைப்பு தனது தேசியப்பட்டியல் ஆசனத்தை அம்பாறை மாவட்டத்துக்கு கொடுத்து, தமிழரசுக்கட்சியின் கலையரசனை நாடாளுமன்றத்துக்குஅழைத்துள்ளது. இதன்மூலம் மாவட்டத்தில்தமிழ்தேசியக்கட்சியொன்றுக்கான பிரதிநிதித்துவம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

அம்பாறை மாவட்டத்தில் ஈ.பி.டிபிக்கு 582 வாக்குகளும், தமிழ் காங்கிரசுக்கு 283 வாக்குகளுமே கிடைக்கப் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, முஸ்லிம்கள் சார்பில் ஐக்கிய மக்கள் சக்தியில் போட்டியிட்ட எம்.எச்.எம்.ஹரீஸ், பைசல் ஹாஸீம் ஆகியோரும் தேசிய காங்கிஸின் சார்பில் அத்தாவுல்லாவும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் சார்பில் மொஹாமட் முஸாரப்புமாக நால்வர் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்கள்.

### மலையகம்
### நுவரெலியா மாவட்டம்

வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு வெளியில் தமிழ் மக்கள் செறிந்துவாழும்

(14ஆம் பக்கம் பார்க்க)

# சிறிலங்காவின்...

(13ஆம் பக்கத் தொடர்ச்சி)

மாவட்டமாக நுவரெலியா விளங்குகின்றது. 2015 பொதுத்தேர்தல், 2019 ஜனாதிபதி தேர்தல் ஆகியவற்றின்போது இம்மாவட்ட மக்கள் ஐக்கிய தேசியக் கட்சி தலைமையிலான கூட்டணியையே ஆதரித்து அமோக வெற்றிபெறவைத்தனர்.

ஆனால் 2020 பொதுத்தேர்தலில் சிறிலங்கா பொதுஜன பெரமுன தலைமையிலான கூட்டணி 2 லட்சத்து 30 ஆயிரத்து 339 வாக்குகளைப்பெற்று, ஐந்து ஆசனங்களுடன் நுவரெலியா மாவட்டத்தில் வெற்றிக்கொடி நாட்டியுள்ளது. 10 ஆண்டுகளுக்கு பிறகே நுவரெலியாவின் ஆதரவு மாற்று தரப்பு கைகளுக்குள் சென்றுள்ளது.

2015 இல் நடைபெற்ற பொதுத்தேர்தலில் நுவரெலியா மாவட்டத்தில் இருந்து ஐந்து தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்கள் தெரிவாகியிருந்தனர். இம்முறையும் ஐந்து தமிழ்ப் பாராளுமன்றப் பிரதிநிதித்துவம் உறுதிப்படுத்தப்பட்டிருந்தாலும், அதிகரித்துக்கொள்வதற்கு இருந்த வாய்ப்பு நழுவவிடப்பட்டுள்ளது என்றுதான் கூறவேண்டும். இதனால் மொட்டு கட்சியின் சார்பில் போட்டியிட்ட மூன்று சிங்கள வேட்பாளர்களும் வெற்றிபெற்று சபைக்கு தெரிவாகியுள்ளனர்.



இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் ஐந்து வேட்பாளர்களை நிறுத்தாமல் மூவரை மாத்திரம் களமிறக்கியிருந்தால் தமிழ்ப் பிரதிநிதித்துவம் ஆறாக அதிகரித்திருக்ககூடும். திட்டமிட்ட வியூகம் இன்மையாலேயே வெற்றி கைவசம் இருந்தும் அது நழுவிபோயுள்ளது.

சிறீலங்கா பொதுஜன பெரமுன தலைமையிலான கூட்டணியின் தலைமை வேட்பாளராக களமிறங்கிய இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் பொதுச் செயலாளர் ஜீவன் தொண்டமான் ஒரு லட்சத்து 9 ஆயிரத்து 155 வாக்குகளைப்பெற்று நுவரெலியா மாவட்டத்தில் முதலிடம் பிடித்தார். நடைபெற்று முடிந்த பொதுத்தேர்தலில் தமிழ் வேட்பாளர் ஒருவர் பெற்ற அதிகூடிய விருப்பு வாக்கு என்ற சாதனையையும் படைத்துள்ளார்.

இ.தொ.காவின் மற்றுமொரு வேட்பாளரான மருதபாண்டி ராமேஷ்வரன் 57 ஆயிரத்து 902 வாக்குகளைப்பெற்று வெற்றிபெற்றுள்ளார். இ.தொ.காவின் ஏனைய வேட்பாளர்களான கணபதி கணகராஜ், சக்திவேல், பிலிப்குமார் ஆகியோர் தோல்வியடைந்துள்ளனர்.

அதேவேளை, ஐக்கிய மக்கள் சக்தியின் சார்பில் நுவரெலியா மாவடடத்தில் களமிறங்கிய தமிழ் முற்போக்கு கூட்டணியின் உறுப்பினர்கள் மூவரும் வெற்றிபெற்றுள்ளனர்.

இதன்படி, திகாம்பரம் 83 ஆயிரத்து 392 வாக்குகளையும், வீ. இராதாகிருஷ்ணன் 72 ஆயிரத்து 167 வாக்குகளையும், எம். உதயகுமார் 68 ஆயிரத்து 119 வாக்குகளையும் பெற்று பாராளுமன்றம் செல்வதற்கு மக்கள் அங்கீகாரம் பெற்றுள்ளனர்.

ஜீவன் தொண்டமான், மருதபாண்டி ராமேஷ்வரன், உதயகுமார் ஆகிய மூவரும் முதன்முறையாக பாராளுமன்றம் செல்கின்றனர்.

கடந்தமுறை பாராளுமன்ற உறுப்பினராக அங்கம் வகித்த எம். திலகராஜ் இம்முறை தேர்தலில் போட்டியிடவில்லை. அவரின் பெயர் தேசியப்பட்டியலில் உள்ளடக்கப்பட்டிருந்தாலும் வாய்ப்பு மறுக்கப்பட்டுள்ளது. 2015 பொதுத்தேர்தலில் 67 ஆயிரத்து 761 விருப்பு வாக்குகளை திலகர் பெற்றிருந்தார்.

அத்துடன், 2015 இல் 45 ஆயிரத்து 352 வாக்குகளைப்பெற்று இ.தொ.காவின் சார்பில் பாராளுமன்றம் சென்ற முத்துசிவலிங்கம் இம்முறை தேர்தலில் போட்டியிடவில்லை. இ.தொ.காவின் தலைவர் ஆறுமுகன் தொண்டமான் வேட்புமனு தாக்கல் செய்திருந்தாலும் மாரடைப்பால் அகால மரணமடைந்தார். அவரிடன் இடத்திலேயே அவரின் மகனான ஜீவன் போட்டியிட்டு சாதனை வெற்றியை பதிவுசெய்துள்ளார்.



ஐக்கிய தேசியக்கட்சியின் சார்பில் போட்டியிட்ட முன்னாள் எம்.பிக்களான நவீன் திஸாநாயக்க, கே.கே. பியதாச ஆகியோர் தோல்வியடைந்துள்ளனர்.

நுவரெலியா மாவட்டத்தில் சுயேட்சையாக களமிறங்கி சுமார் 14 ஆயிரம் வாக்குகளைப்பெற்று பாராளுமன்றம் தெரிவாகாவிட்டாலும், எதிர்கால அரசியலுக்கு அடித்தளமிட்டுள்ளார் மலையக மக்கள் முன்னணியின் ஸ்தாபகத் தலைவரான அமரர் சந்திரசேகரனின் புதல்வியான அனுசா சந்திரசேகரன்.

இலங்கை கிரிக்கெட் அணியின் நட்சத்திர சுழல்பந்து வீச்சாளர் முத்தையா முரளிதரனின் சகோதரர் முத்தையா பிரபும் 15 ஆயிரத்துக்கும் மேற்பட்ட வாக்குகளைப்பெற்றிருந்தாலும் சபைக்கு தெரிவாகவில்லை.

நுவரெலியா மாவட்டத்தில் 8 ஆசனங்களை இலக்கு வைத்து 12 அரசியல் கட்சிகளில் இருந்து 132 பேரும், 13 சுயேட்சைக்குழுக்களில் இருந்து 143 பேரும் களமிறங்கினர். இதில் இரு பிரதான கட்சிகளைதவிர வேறு எந்தவொரு அணியும் 5 வீதத்துக்கும் மேல் வாக்குகளைப்பெறவில்லை.

## கண்டி மாவட்டம்

கண்டி மாவட்டத்தில் பலமுனைப் போட்டிகளுக்கு மத்தியிலும் இம்முறையும் தமிழ்ப் பாராளுமன்ற பிரதிநிதித்துவம் தக்கவைத்துக்கொள்ளப்பட்டது. ஐக்கிய மக்கள் சக்தியின் சார்பில் போட்டியிட்ட வேலுகுமார் 57 ஆயிரத்து 445 வாக்குகளைப்பெற்று இரண்டாவது முறையும் பாராளுமன்றம் தெரிவாகியுள்ளார்.

சுமார் ஒரு லட்சம் தமிழ் வாக்காளர்கள் வாழும் கண்டி மாவட்டத்தில் தமிழ்ப் பாராளுமன்றப் பிரதிநிதித்துவத்தை வென்றெடுப்பதென்பது சவாலுக்குரிய விடயமாகும்.

இலங்கையில் 1947 இல் தொகுதி வாரியாக நடைபெற்ற பொதுத்தேர்தலில் கண்டி மண்ணிலிருந்து இரண்டு தமிழ்ப் பிரதிநிதிகள் பாராளுமன்றம் சென்றிருந்தனர். எனினும், 1948 இல் மலையகத் தமிழர்களின் குடியுரிமையும், வாக்குரிமையும் பறிக்கப்பட்டதால் 4 தசாப்தங்களுக்கு மேலாக கண்டி மாவட்ட தமிழர்கள் அரசியல் ரீதியில் அநாதைகளாக்கப்பட்டனர்.

1994 ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத்தேர்தலில் ஐ.தே.க. பட்டியலில் போட்டியிட்ட இராஜரட்ணம் வெற்றிபெற்றார். அதன்பின்னர் 2000, 2001, 2004, 2010 ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற பொதுத்தேர்தல்களில் தமிழ் வேட்பாளர் எவரும் வெற்றிபெறவில்லை.

இந்நிலையில் 2015 இல் நடைபெற்ற தேர்தலில் ஐ.தே.கவின் பட்டியலில் போட்டியிட்ட வேலுகுமார் 62 ஆயிரத்து 556 வாக்குகளைப்பெற்று வெற்றிபெற்றார். இதன்மூலம் 15 ஆண்டுகளுக்கு பிறகு கண்டி மாவட்டத்துக்கு மீண்டும் தமிழ்ப் பாராளுமன்றப் பிரதிநிதித்துவம் கிடைத்தது.



எனினும், அப்பிரதிநிதித்துவத்தை இம்முறை தக்கவைத்துக்கொள்ளமுடியுமா என்ற சந்தேகம் ஏற்பட்டது. ஏனெனில் மூன்று தேசிய கட்சிகளின் சார்பிலும் தமிழ் வேட்பாளர்கள் களமிறக்கப்பட்டிருந்தனர். இதனால் தமிழ் வாக்குகள் சிதறடிக்கப்பட்டு, பிரதிநிதித்துவம் இல்லாமல்போகும் அபாயம் காணப்பட்டது. எனினும், கண்டி மாவட்டத்தில் வாழும் முஸ்லிம் மக்கள், மூன்றாவது விருப்பு வாக்கை தமிழ் வேட்பாளருக்கு வழங்கியதால் வெற்றி சாத்தியமானது. மொட்டு கட்சியின் சார்பில் போட்டியிட்ட இ.தொ.காவின் வேட்பாளர் 23 ஆயிரம் வாக்குகளைப்பெற்றிருந்தார்.

இதேவேளை, கண்டியில் போட்டியிட்ட முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் மற்றும் அப்துல் ஹலீம் ஆகியோர் முஸ்லிம்கள் சார்பில் வெற்றிபெற்றார்கள்.

## பதுளை மாவட்டம்

பொதுத்தேர்தலில் பதுளை மாவட்டத்தில் 12 அரசியல் கட்சிகள் மற்றும் 12 சுயேட்சைக்குழுக்களில் இருந்தும் 288 பேர் பேர் போட்டியிடுகின்றனர். இவர்களில் சுமார் 60 தமிழ் வேட்பாளர்கள் களமிறங்கியிருந்தாலும் இருவரே வெற்றிக்கனியை ருசித்துள்ளனர்.

62.06 சதவீத வாக்குகளுடன் பதுளை மாவட்டத்தை சிறீலங்கா பொதுஜன பெரமுன கைப்பற்றி 6 ஆசனங்களை வென்றாலும் அவ்வணியில் போட்டியிட்ட தமிழ் வேட்பாளரான செந்தில் தொண்டமான் வெற்றிபெறவில்லை. அவர் சுமார் 36 ஆயிரம் வாக்குகளை எடுத்திருந்தார். செந்தில் தொண்டமான் எதிர்கொண்ட முதலாவது பொதுத் தேர்தல் இதுவாகும்.

ஐக்கிய மக்கள் சக்தியின் சார்பில் போட்டியிட்ட வடிவேல் சுரேஷ், அரவிந்தகுமார் ஆகியோர் வெற்றிபெற்றுள்ளனர். வடிவேல் சுரேஷ் 49 ஆயிரத்து 762 விருப்பு வாக்குகளையும், அரவிந்தகுமார் 45 ஆயிரத்து 491 விருப்பு வாக்குகளையும் பெற்றுள்ளனர்.

பதுளை மாவட்ட தமிழ்ப் பாராளுமன்றப் பிரதிநிதித்துவம் இம்முறையும் பாதுகாக்கப்பட்டுள்ளது. ஆளுங்கட்சியின் சார்பில் ஒருவர் தெரிவாக வாய்ப்பிருந்தும் சுயேட்சைக்குழுக்களுக்கு தமிழ் வாக்குகள் சென்றதால் அது இல்லாமல்போனது.

## மேல் மாகாணம்

தலைநகரம் கொழும்பில் சுமார் ஒரு லட்சத்து 20 ஆயிரத்துக்கும் மேற்பட்ட தமிழ் வாக்காளர்கள் இருந்தும் இம்முறையும் தமிழ்ப் பாராளுமன்றப் பிரதிநிதித்துவத்தை தக்கவைத்துக்கொள்ள பெரும்பாடுபடவேண்டியதாக இருந்தது. அதுவும் பட்டியலில் இறுதி இடத்திலேயே மனோ கணேசன் தெரிவாகியுள்ளார். 62 ஆயிரத்து 91 விருப்பு வாக்குகளைப்பெற்றுள்ளார். 2015 இல் நடைபெற்ற பொதுத்தேர்தலில் அவர் 69 ஆயிரத்து 64 வாக்குகளைப்பெற்றிருந்தார். மனோவுடன் இணைந்து போட்டியிட்ட ஜனகன், ஐக்கிய மக்கள் சக்தி வேட்பாளர் ராம் ஆகியோர் தோல்வியடைந்துள்ளனர். மொட்டு கட்சியின் சார்பில் கொழும்பு மாவட்டத்தில் எந்தவொரு தமிழ், முஸ்லிம் வேட்பாளர்களும் களமிறக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

ஆனால், மக்கள் சக்தி கட்சி சார்பில் எஸ்.எம்.மரீக்கார் மற்றும் முஜிபுர் ரஹ்மான் ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்கள்.

அதேவேளை, இரத்தினபுரி, கம்பஹா, கேகாலை ஆகிய மாவட்டங்களில் போட்டியிட்ட அனைத்து தமிழ் வேட்பாளர்களும் தோல்வியடைந்துள்ளனர். இதில் இரத்தினபுரி மற்றும் கம்பஹா மாவட்டங்களில் ஒரு பிரதிநிதியை தெரிவுசெய்வதற்கு வாய்ப்பிருந்தும் அது தொடர்ச்சியாக கைவிடப்பட்டு வருகின்றது.

கேகாலை மாவட்டத்தில் ஐக்கிய மக்கள் சக்தி சார்பில் ஹபீர் ஹாஸிமும் புத்தளம் மாவட்டத்தில் முஸ்லிம் தேசிய கூட்டணி சார்பில் அப்துல் அலி சப்ரியும் அனுராதபுரம் மாவட்டத்தில் ஐக்கிய மக்கள் சக்தி சார்பில் இஸாத் ரஹ்மானும் வெற்றிபெற்றுள்ளார்கள்.

தேசியப்பட்டியல் ஊடாக 17 ஆசனங்களை பெற்றுள்ள பொதுஜன பெரமுன அவற்றில் மூன்றினை முஸ்லிம்களுக்கும் ஒன்றை தமிழருக்கும் வழங்கியிருக்கிறது. வட மகாண முன்னாள் ஆளுனர் சுரேன் ராகவன், ஜனாதிபதி சட்டத்தரணி முகமட் அலி சப்ரி, முகமட் முஸமில், வர்த்தகர் முகமட் பலீஸ் மர்ஜான் ஆகியோரே இவ்வாறு ஆசனங்கள் வழங்கப்பட்டுள்ளவர்கள்.

இதேவேளை, சஜித் அணியின் தேசியப் பட்டியலில் முன்னாள் தொலைத்தொடர்பு அமைச்சர் இம்திதாஸ் பாக்கீர் மாக்காருக்கு இடமளிக்கப்பட்டுள்ளது.

தமிழ், முஸ்லிம், மலையக மக்கள் தமிழ் பேசும் சமூகமாக ஓரணியில் திரண்டால் எதிர்காலத்தில் கட்சிபேதங்களிலிருந்தாலும், பாராளுமன்றத்தில் தமிழர்களுக்கான வலுவான குரலாக குறிப்பிட்ட பிரச்சினைகளுக்காவது உறுதியாக ஒலிக்கமுடியும்.

# H.N. PAWN BROKER
# எச்.என். அடகு கடை

- குறைந்த வட்டி வீதம்
- சேவைக்கட்டணம் இல்லை
- நம்பிக்கை மிகுந்த ஒரே இடம்
- சனிக்கிழமைகளிலும் திறந்திருக்கும்

## தங்கப்பவுணுக்கு அதிகூடிய முற்பணம் வழங்கப்படும்



வட்டி 3%

Hub Arcade, 28/15-23 Langhorne St, Dandenong VIC 3175
Tel/Fax : 03 8712 1406, Ruban : 0423 094 478

## நம்பிக்கையில் வாடிக்கையாளர்களின் மனதில் இடம் பிடித்த - 10 வருடகால அனுபவமுள்ள...

# PERPETUA TRADE

## Money Transfer Worldwide

We Guarantee the best rate for
SRI LANKA, INDIA, CANADA, UK & EUROPE

- SAME DAY BANK TRANSFER & HOME DELIVERY
- RESPONSIBLE CUSTOMER SERVICE
- CONVINIENT WORLDWIDE LOCATIONS
- EASY, QUICK INTERNET MONEY TRANSFER

Send Money to any Bank In Sri Lanka

Hub Arcade, 28/15 -23 Langhorne St. Dandenong VIC 3175
Tel/Fax: 03 8712 1406 Mob: 0423 094 478 - Email: pmoneytransfer@ymail.com

# “Operation Rajapaksa” புயலில் மணிமுடி கழன்ற மாமன்னர்கள்!


கருணாகரன்

இலங்கையில் நடந்து முடிந்திருக்கும் பாராளுமன்றத் தேர்தலிலும் பல மணி-முடிகள் சரிந்துள்ளன. புகழ்பெற்ற பல தலைவர்கள் தங்கள் பதவிகளையும் அதிகாரத்தையும் இழந்து (தெருவில்) நிற்கிறார்கள். முக்கியமாக முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, சபாநாயகராக இருந்த கரு ஜெயசூரிய, ஐ.தே.கவின் மைய முகங்களான ரவி கருணாநாயக்க, அதன் செயலாளர் அகில காரியவசம், தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா... இப்படிப் பலர்.

இதில் ரணில், கரு, மாவை போன்றவர்கள் ஏறக்குறைய ஐம்பது ஆண்டுகால அரசியல் அனுபவத்தையும் அரசியலில் அதிகாரத்தையும் கொண்டிருந்தவர்கள். பாராளுமன்றத்தில் மட்டுமல்ல, கட்சியிலும் தலைமைப் பொறுப்பிலிருந்து பலதையும் தீர்மானித்தவர்கள். ரணில் நாட்டையும் பல அரசியல் தரப்புகளையும் தன்னுடைய கைகளில் வைத்து உருட்டி விளையாடியவர்.

**இப்பொழுது இவர்களையெல்லாம் தோற்கடித்தது யார்?**

வேறு யாருமில்லை, சனங்களே!

தலைவர்களும் மன்னர்களும் முடியாட்சியில்தான் மணிமுடியை இழக்க வேண்டியிருக்கும் என்றில்லை. குடியாட்சியிலும் அது நடக்கும். ஜனநாயக யுகத்தில் - ஜனநாயக யுத்தத்தில் - தலைவர்கள் ஒரே நாளில் பதவிகளையும் இழந்து அதிகாரத்தையும் இழந்து விடுகிறார்கள். பதிலாக எதிர்பாராமல் யாரோவெல்லாம் பதவிகளையும் அதிகாரத்தையும் பெற்றுவிடுகிறார்கள்.

தேர்தல்களின்போதுசனங்களின்தீர்ப்பு எப்படியானது என்று சொல்லவே முடியாது. அது எந்த விஞ்ஞானத்திற்குள்ளும் மெய்ஞானத்திற்குள்ளும் ஏன் அஞ்ஞானத்துக்குள்ளும்கூட அடங்காத ஒன்று. அந்தளவுக்கு அதிசயமானது. அபூர்வமான நெளிவு சுழிவுகள் நிறைந்தது.

இல்லையென்றால் ஐந்து ஆண்டுகளுக்கு முன்பு “தொடவே கூடாது. விலக்கப்பட வேண்டிய கனிகள் இவை” என்று ராஜபக்ஸக்களைக் கைவிட்ட அதே மக்கள்தானே, வெதமுல்ல என்ற தென்னிலங்கையின் தொலைதூரக் கிராமத்திலிருந்து ராஜபக்ஸக்களை மீள அழைத்து வந்து குடும்பத்தோடு அரியணையில் ஏற்றிவிட்டிருக்கிறார்கள்.

இப்பொழுது போர்க்குற்றவாளியெனக் குற்றம்சாட்டப்பட்ட கோத்தபாய ராஜபக்ஸ நாட்டின் அதிபராக இருக்கிறார். ஊழல், அதிகார துஸ்பிரயோகம், குடும்ப ஆட்சி, ஜனநாயக மறுப்பாளர்கள் என்றெல்லாம் குறைசொல்லப்பட்ட - விமர்சிக்கப்பட்ட மகிந்த அணி ஆட்சிபீடமேறியிருக்கிறது. மட்டுமல்ல, கொலைக்குற்றம் சாட்டப்பட்டு சிறையிலடைக்கப்பட்டிருக்கும் பிள்ளையான் என்கிற சிவனேசதுரை சந்திரகாந்தன் பாராளுமன்ற உறுப்பினராகியுள்ளார். வடக்குக் கிழக்கில் உள்ள தமிழ், முஸ்லிம் வேட்பாளர்களில் அதிகூடிய விருப்பு வாக்குகளைப் பெற்றவரே இந்தச் சந்திரகாந்தன்தான். இந்தக் கட்டுரையை நீங்கள் வாசிக்கும்போது பிள்ளையான் இலங்கையின் முக்கியமானதொரு பொறுப்பிலிருக்கக்கூடிய வாய்ப்புமுண்டு. சிறையை விட்டு வெளியே வரவும் கூடும்.

“கட்சிதாவி”, “கொள்கை மாறி”, “நம்பிக்கைத் துரோகி” என்றெல்லாம் கடந்த ஆறு மாதத்துக்கு முன்பு தமிழ்த் தரப்பினரால் கடுமையாக விமர்சிக்கப்பட்ட சதாசிவம் வியாழேந்திரன் இப்பொழுது பாராளுமன்ற உறுப்பினராக தெரிவுசெய்யப்பட்டிருக்கிறார். இராஜங்க அமைச்சராகியும்விட்டார்.

பல கொலைகளோடும் ஜனநாயக மீறல்களோடும் சம்மந்தப்பட்டவர்கள், இதற்கெல்லாம் காரணமானவர்கள் என்று சொல்லப்படும் டக்ளஸ் தேவானந்தா, தர்மலிங்கம் சித்தார்த்தன், செல்வம் அடைக்கலநாதன் போன்றோர் பாராளுமன்ற உறுப்பினர்களாகியுள்ளனர். டக்ளஸ் தேவானந்தா அமைச்சரவை அந்தஸ்த்துள்ள ஒரே தமிழ் அமைச்சர் வேறு.

இது மட்டுமல்ல, தங்கத்துரை, குட்டிமணி, பிரபாகரன், முதல் மாவீரர் லெப் சங்கர், கப்டன் பண்டிதர் உள்ளிட்ட ஈழ விடுதலைப்போராட்ட வீரர்களின் விளைநிலமாகக் கூறப்படும் வடமராட்சியில் சிறிலங்கா சுதந்திரக் கட்சியே வெற்றியைப் பெற்றிருக்கிறது. யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டத்தில் அதிகூடிய விருப்பு வாக்குகளை சிறிலங்கா சுதந்திரக்கட்சியைச் சேர்ந்த அங்கயன் ராமநாதன் பெற்றிருக்கிறார்.

இதேவேளை, தமிழிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா யாழ்ப்பாணத்திலே தோற்கடிக்கப்பட்டுள்ளார். கூடவே அவருடைய சகாக்களும் தோற்றிருக்கின்றனர். அங்கயனிடம் தோல்வியைக் கண்டவர்களில் வேறு சில அரசியல் தலைவர்களும் உண்டு. ஈ.பி.ஆர்.எல்.எவ்வின் சுரேஸ் பிரேமச்சந்திரன், சமத்துவக் கட்சியின் முருகேசு சந்திரகுமார், தமிழ்த் தேசியக் கட்சியைச் சேர்ந்த சிவாஜிலிங்கம், ஸ்ரீகாந்தா போன்றோர் இதில் முக்கியமானவர்கள்.

வடக்குக் கிழக்கில் தமிழ்த் தேசிய முகாம் மெல்லிய சரிவைச் சந்தித்திருக்கிறது. தீவிரத் தமிழ்த்தேசியவாளர்களான கஜேந்திரகுமார் பொன்னம்பலம், செல்வராஜா கஜேந்திரன், சி.வி. விக்கினேஸ்வரன் போன்றோர் தெரிவு செய்யப்பட்டிருந்தாலும் பிள்ளையான், அங்கையன், திலீபன், டக்கஸ் தேவானந்தா ஆகியோரின் வெற்றிகள் தமிழ்த்தேசிய அலைக்கு ஒரு கடுமையான சவாலே. விருப்பு வாக்குகளும் தமிழ்த்தேசிய முகங்களை விடவும் பிற முகங்களுக்கே அதிகமாகக் கிடைத்துள்ளன.

இதேவேளை, இந்தத் தேர்தல் புயல் மாவை சேனாதிராஜா, ரணில் விக்கிரமசிங்க ஆகியோரின் கட்சித் தலைமைப் பதவியையே பறிக்கும் அளவுக்குத் நிலைமையை உருவாக்கிவிட்டிருக்கிறது என்பதையும் பார்த்தோம். கால் நூற்றாண்டுக்கும் மேலாகத் தன்னுடைய கைகளில் வைத்திருந்து விளையாடிய தலைமைப் பொறுப்பை ரணில் இழக்க வேண்டியுள்ளது. அமிர்தலிங்கத்தின் கொலைக்குப் பிறகுதமிழரசுக்கட்சியில்முதன்மைப்பட்டிருந்த மாவை சேனாதிராஜாவின் இடம் இப்போது கேள்விக்குள்ளாகியுள்ளது.

இதற்கெல்லாம் காரணங்கள் பலவுண்டு. அதைப் பல கோணங்களில் பல பக்கங்களில் பலரும் ஆராயலாம்.

(17ஆம் பக்கம் பார்க்க)

# “Operation Rajapaksa” புயலில்

(16ஆம் பக்கத் தொடர்ச்சி)

இப்போது அதுவல்ல நமது வேலை. வெற்றியடைந்திருக்கும் விமர்சனங்களுக்குரிய தரப்பினர்களைத் தெரிவுசெய்யும் மனநிலை அல்லது தேர்வுமுறைக்கு எப்படி மக்கள் வந்தனர் என்பதே கேள்வி.

ஏனென்றால் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பிற்குள்கூட அதிகமதிகம் சர்ச்சைகள், கடுமையான விமர்சனங்களை எதிர்கொண்ட சுமந்திரனும் சிறிதரனுமே வெற்றியடைந்திருக்கிறார்கள். ஏன் கடந்த ஆண்டுகளில் “அரசியல் கோமாளி” அல்லது “கோமாளித்தனத்தின் உச்சம்” என்று வர்ணிக்கப்பட்ட முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனகூட இந்தத் தேர்தலில் வெற்றியீட்டியிருக்கிறார்.

அப்படியென்றால்இலங்கையில்என்னதான் நடந்து கொண்டிருக்கிறது?

நமக்கும் இது கேள்வியே. ஒரு ஐந்து ஆண்டுகளுள் எப்படி ஊழல்பேர்வழிகள் “சுதுமாத்தயாக்கள்” ஆகினர்? ஜனநாயகத்துக்கு எதிரானவர்கள் எப்படி ஜனநாயகத் தேர்தலில் வெற்றியீட்டினர்?

இவ்வளவுக்கும் இலங்கையின் சிறந்த ஜனநாயகவாதி என்று சொல்லப்பட்ட ரணில்விக்கிரமசிங்க தோற்கடிக்கப்பட்டு, அரசியல் அரங்கிலிருந்தே வெளியேறும் நிலைக்குள்ளாக்கப்பட்டிருக்கிறார் என்றால், இனிவரும் இலங்கை எப்படி இருக்கப்போகிறது?

இப்பொழுது வந்திருக்கும் ஆட்சித் தரப்பு மூன்றில் இரண்டு பெரும்பான்மையைக் கொண்டிருக்கிறது. இது ஏறக்குறைய 1977இல் ஜே.ஆர். ஜெயவர்த்தனா ஆட்சியின் போதிருந்ததற்கு சமனானது. இந்த மூன்றில் இரண்டு பெரும்பான்மையின் தைரியத்தில்தான் ஜே.ஆர். தமிழர்களைப் பார்த்துப் “போர் என்றால் போர்” என்று கூவினார். ஆனால், அப்பொழுது அதற்குப்பதிலடி கொடுப்பதற்கு ஆட்கள் (இயக்கங்கள்) இருந்தனர். தமிழர்விடுதலைக் கூட்டணி எதிர்க்கட்சி என்ற ஸ்தானத்திலிருந்தது. இந்தியா ஒரு அண்ணனைப் போலப் பின்னாதரவு வழங்கியது. பிறகொரு கட்டத்தில் முழு ஆதரவாக நின்று ஜே.ஆரை மடக்கியது. இன்று அவ்வாறான நிலையெல்லாம் இல்லை.

இப்போது ராஜபக்ஸ தரப்பினருக்குக் கிடைத்திருக்கும் மூன்றிலிரண்டு பெரும்பான்மை என்பது அந்தத் தரப்பு எதை நினைக்கிறதோ அதைச் செய்வதற்கு வாய்ப்பானது. ராஜபக்ஸ சகோதரர்களின் எண்ணங்களும் எதிர்பார்ப்புகளும் ஏராளம். அதை அவர்கள் மெல்ல மெல்லச் செய்து தமக்கிசைவானதொரு ஆட்சி முறையை உருவாக்கப்போகிறார்கள். அரசியல் யாப்பைக் கூட தமக்கிசைவாக மாற்றியமைக்கும் நிலை உண்டு.

அவர்கள் நல்லதை நினைத்தால் நன்மைகள் ஆயிரம். கெட்டதாக எதையாவது எண்ணினால் தீமைகள் கோடி. ஆனால், அவர்கள் எதை எண்ணி நடக்கப்போகிறார்கள் என்பது கேள்வி.

இப்பொழுது உருவாக்கியிருக்கும் அமைச்சரவை இந்தக் கேள்வியைப் பலமாக்குகிறது. வலுவான அமைச்சுகளை தங்களுக்குள் (ராஜபக்ஸ குடும்பத்திற்குள்) பகிர்ந்து கொண்டிருக்கிறார்கள். இதன்படி ஜனாதிபதி, பிரதமர் என்ற நாட்டின் இரண்டு முதல்நிலைப் பதவிகளையும் தம்பியும் அண்ணனுமாகப் பகிர்ந்துள்ளனர். இதை விட அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சுகள் இரண்டை இரண்டு ராஜபக்ஸக்கள் (சமல், நாமல்) எடுத்துள்ளனர். போதாக்குறைக்குப் பதவியேற்பதற்குத் தெரிவு செய்யப்பட்டிருப்பது வழமைக்கு மாறாகத் தலதா மாளிகை வளாகம்.

இதுகாலவரையான பாராளுமன்ற வரலாற்றில் இப்படியொரு ஏற்பாடு நடக்கவேயில்லை. அப்படியென்றால், ராஜபக்ஸக்கள் என்னதான் நினைக்கிறார்கள்? மக்கள் தங்களுக்கு ஆணை தந்துவிட்டனர். எனவே நாங்கள் எண்ணியதையெல்லாம் செய்துவிடலாம் என்றா? சிங்கள மக்களை மட்டும் திருப்திப்படுத்தும் ஒரு வலுவான அரசியல் பாரம்பரியத்தை கட்டியெழுப்ப வேண்டும் என்றா?

இப்படித்தான் நடக்கும் என்றால் இந்தப்போக்கு இலங்கையை வேறு எங்கேயோதான் கொண்டு போய் விடும். நிச்சயமாக அது முதலில் நாட்டுக்கு நெருக்கடியை உண்டாக்கும். பிறகு ராஜபக்ஸக்களுக்கான நெருக்கடியாக அது மாறும்.

ராஜபக்ஸ சகோதரர்களுக்கு வாய்ப்புகளை அள்ளிக் கொடுத்தது ரணில் விக்கிரமசிங்கவும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு மற்றும் முந்திய ஆட்சிக்கு ஆதரவு வழங்கிய மலையக, முஸ்லிம் தரப்புகளும் தான். சுருக்கிச் சொன்னால், நல்லாட்சித் தரப்பு. இதில் மைத்திரிபால சிறிசேனவும் அடக்கம். நல்லாட்சித்தரப்பின் அரசியல் உறுதிப்பாடின்மையும் சரியற்ற நடவடிக்கைகளும் வீட்டுக்கும் சிறைக்கூடங்களுக்கும் அனுப்பப்பட்டிருந்த ராஜபக்ஸக்களை இன்று பலமாக்கி விட்டிருக்கிறது.

ஆனால், மைத்திரிபால சிறிசேன இந்தத் தவறுகளால் பாதிக்கப்படாமல் தப்பியிருக்கிறார். கடந்த ஆட்சிக்காலத்தில் கடுமையாக விமர்சிக்கப்பட்ட மைத்திரிபால சிறிசேனதான் இப்பொழுது மிகச் சிறந்த தந்திரசாலி, கெட்டிக்காரர் என்ற பேரை எடுத்திருக்கிறார். தன்னுடைய ஜனாதிபதி பதவியைக் கெட்டித்தனமாகக் காப்பாற்றிக் கொண்டதோடு இப்போது புதிய ஆட்சியிலும் பங்கேற்கிறார். கூடவே ராஜபக்ஸக்களின் பகையையும் தணித்துக் கொண்டார். கிடைக்கின்ற தகவல்களின்படி மைத்திரிக்கு துணைப்பிரதமர் பதவி அல்லது அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சுப்பொறுப்பொன்று கிடைக்கலாம்.

ஆனால், மிகச் சிறந்த அரசியல் ராசதந்திரியாக வர்ணிக்கப்பட்ட ரணிலோ எல்லாப்பதவிகளையும்இழந்துதவித்துக் கொண்டிருக்கிறார். இதையெல்லாம் எண்ணும்போது “புத்தியுள்ள மனிதரெல்லாம் வெற்றி காண்பதில்லை... வெற்றி பெற்ற மனிதரெல்லாம் புத்திசாலியில்லை...” என்ற சந்திரபாபுவின் பாடல்தான் நினைவுக்கு வருகிறது. வெற்றிபெற்ற மனிதரெல்லாம் புத்திசாலி இல்லை என்பது மட்டுமல்ல, கண்ணியமானவரலாற்றைக் கொண்டவர்களுமில்லை.

பெரும்பாலும் குற்றங்கள், கறைகளோடுள்ளவர்களே இந்தத் தடவையும் வெற்றியடைந்திருக்கின்றனர். எனவே இந்த அரசியல் சூழமைவில் எந்தப் பெரிய நன்மாற்றங்களையும்எதிர்பார்க்கமுடியாது. ஆனால், மூன்றிலிரண்டு பெரும்பான்மையைக் கொண்டிருக்கும் ராஜபக்ஸக்கள் கொஞ்சம் மனசு வைத்தால்... மனசு வைத்தால்.... நல்லவைகள் நடக்கும். அந்த நல்லவைகள் எவை என்பது கேள்வியே.

ஏனென்றால் அவர்கள் கருதும் நல்லவைகள் எவை? நாங்கள் கருதும் நல்லவைகள் எது? என்பது இன்னொரு சிக்கலான விசயம்.

இப்படிச்சுழன்றடித்துக்கொண்டிருக்கும் இன்றைய இலங்கையின் அரசியல் புயலில் இனி என்னவெல்லாம் நடக்கப்போகிறது? யார் யாரெல்லாம் தப்பிப் பிழைப்பார்கள்? எதையும் எளிதில் தீர்மானிக்க முடியாத ஒரு சூழலில் இலங்கை நிற்கிறது. ■





# ஆஸ்திரேலியாவை நோக்கி எழுந்துவிட்டு ஐநூறு கிலோவுடன் விழுந்த விமானம்!

## PNG - Queensland நடந்தது என்ன?

உலகெங்கும்ஊரடங்கும்கொ- ரோனா பீதியும் அரசுகளை பீதியடையச்செய்து மக்களை வீடுகளில்முடக்கியுள்ளநிலையில், ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த குற்றக்கும்பலொன்று கற்பனைக்கு எட்டமுடியாத குற்றச் செயலொன்றினை மேற்கொள்ள திட்டமிட்டமை அம்பலமாகியுள்ளது. அந்த திட்டமிட்ட குற்றச்செயல் தோல்வியில் முடிவடைந்ததால் அதன் பின்னணியிலிருந்தவர்கள் அனைவரும் சட்டத்துறையினரின் காலடியில் வந்து விழுந்திருக்கிறார்கள்.

இவர்களது நடமாட்டங்களை கடந்த இரண்டு வருடங்களாக அவதானித்துவந்த தாங்கள் கடைசியில் அமுக்கிவிட்டதாக ஆஸ்திரேலிய காவல்தரப்பினர் தெரிவிக்கிறார்கள். ஆனால், இன்னமும் இதில் மறைந்திருக்கும் மேலதிக மர்மங்கள் துலங்குமா? விளங்குமா? என்று இனிவரும் கை-துகள் மேலும் உறுதிப்படுத்தப்படலாம் என்று தெரிகிறது.

இரண்டு நாடுகளுக்கு இடையில் போதைப்பொருள் கடத்தப்படுவதும் அப்படியான நடவடிக்கைகளில் பலர் கைது செய்யப்படுவதும் சாதாரணமாக நாங்கள் கேள்விப்படுகின்றசம்பவங்கள்தான். அநேகமாக, இந்தக்குற்றவாளிகள் விமான நிலையங்களில் கைது செய்யப்படுவார்கள். கப்பல்களில் போதைப்பொருள் கடத்த முயற்சி செய்தவர்கள், படகு மூலம் சிறு தீவுகளிலிருந்து போதைப்பொருட்களை உற்பத்தி செய்து நாட்டுக்குள் கொண்டுவருவதற்கு எத்தனித்தவர்கள் என்று பல திடுக்கிடும் செய்திகளையெல்லாம் கேள்விப்பட்டிருக்கிறோம்.

ஒவ்வொருநாடும்கடைப்பிடிக்கும்சட்டங்கள், அந்த சட்டங்களில் காணப்படும் ஓட்டைகள், காவல்துறையினர்இதில்காண்பிக்கும் மெத்தனங்கள், அதிகாரத்தரப்புக்களுக்கு இதன் பின்னணியிலுள்ள கைகள் என்பவையெல்லாம் போதைப்பொருள் கடத்தல் - பாவனை போன்ற பெரிய குற்றங்களில் செல்வாக்கு செலுத்துபவையாக காணப்படுவது வழக்கம்.

ஆனால், ஒருநாட்டிலிருந்துதனிவிமானமொன்றை இரகசியமாக ஓட்டிச்சென்று இன்னொரு நாட்டிலிருந்து ஐநூறு கிலோ போதைப்பொருளை ஏற்றிவருவதற்கு போடப்பட்ட திட்டம் பற்றி கேள்வியுற்றிருக்கிறீர்களா? அதாவது இரண்டு நாடுகளின் சட்டத்தின் மீதும் சறுக்கீஸ் விளையாடியபடி, ஐநூறு கிலோ போதைப் பொருளை இறக்குமதி செய்வதற்கு முயற்சித்த ஆஸ்திரேலிய குற்றக்கும்பல் ஒன்று இவ்வாறு அகப்பட்டிருக்கிறது.

ஆஸ்திரேலியாவிலிருந்து இயங்கிய இத்தாலியை பூர்வீகமாக கொண்ட கும்பலொன்றின் துணிகர போதைப்பொருள் கடத்தல் வலையமைப்பு இதன் மூலம் பிடிபட்டிருப்பதாக ஆஸ்திரேலிய பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த ஒட்டுமொத்த கடத்தல் நாடகமும் சிக்கி சிதைந்து சின்னாபின்னமாகிய கதை மிகவும் சுவாரஸ்யமானது.

கடந்த ஜூலை மாதம் 26 ஆம் திகதி காலைகுவீன்ஸ்லாந்தின்ஒதுக்குப்புறமான பிரதேசமொன்றிலிருந்து புறப்பட்ட சிறிய ரகவிமானமொன்று பாப்புவா நியு கினியாவுக்கு சென்று சேர்ந்திருக்கிறது. விமானக் கண்காணிப்புக்குள்அகப்பட்டுவிடக்கூடாது என்பதற்காக மூவாயிரம் அடிகளுக்கு கீழ் இந்தவிமானம்மிக்கவனமாகஓட்டிச்செல்லப்பட்டிருக்கிறது.

இந்த விமானத்தில் போதைப்பொருட்களை ஏற்றிவருவதற்கு ஏற்றவகையில் திறமான பெட்டிகள் அமைக்கப்பட்டு, அதில் பத்திரமாக பொருளை கொண்டுவருவதற்கானதயாரிப்புக்கள்முன்னமேமேற்கொள்ளப்பட்டிருக்கின்றன.

பாப்புவா நியு கினியாவில் போயிறங்கிய இந்த விமானம் அங்கு சுமார் ஐநூறு கிலோ போதைப்பொருட்களைவிமானத்தில் ஏற்றிக்கொண்டு அன்று மாலையே ஆஸ்திரேலியாவுக்கு திரும்பத்திட்டமிட்டிருக்கிறது. விமானம் சட்ட விரோதமானது. ஓடிய பாதையும் சட்ட விரோதமானது. அதில் ஏற்றிய பொருளும் சட்டவிரோதமானது. இரு நாட்டு பாதுகாப்பு தரப்புக்களின் கண்களில் மண்ணைத்தூவிவிட்டு உச்சத்திறமையோடும் துணிச்சலோடும் மேற்கொள்ளப்படுகின்ற இந்த கடத்தலில் கரணம் தப்பினால் மரணம்தான் என்பதால் -

போனவிமானத்தில்அன்றைக்கு "பொருளுடன்" திரும்புவது திட்டமாக இருந்திருக்கிறது. எல்லாவற்றையும் திட்டமிட்ட இந்தக்கடத்தல் கும்பல், இந்த சிறிய ரக விமானம் எவ்வளவு எடையை தூக்கிக் கொண்டு பறக்கும் என்ற அடிப்படை விடயத்தில் கோட்டைவிட்டுவிட்டது என்கிறது பாப்புவாநியூ கினியா பொலீஸ். அது தமக்கு வாய்ப்பாகப்போய்விட்டது என்கிறது.

ஜூலை26ஆம்திகதி அங்கிருந்து கிளம்பிய விமானம், பறக்கத்தொடங்கிய சிறிது நேரத்திலேயே ஏற்றிய போதைப்பொருளை தூக்கிக்கொண்டு ஓடமுடியாமல், விழுந்துவிட்டது. அந்தப்பறப்பின்போது அதில் ஓட்டியோடு எத்தனைபேர் பயணம் செய்தார்கள் என்ற விவரம் தெரியாது. ஆனால், பாப்புவா நியூ கினியாவில் ஒதுக்குப்புறமான இடமொன்றிலிருந்து கிளம்பிய விமானம் காட்டுப்பகுதிக்குள் சென்று விழுந்திருக்கிறது.

திட்டம்சொதப்பிவிட்டதில்மனம்தளராத இந்தக்நடத்தல் கும்பல் விமானம் விழுந்த இடத்துக்கு சென்று அதிலிருந்த போதைப்பொருட்களை அகற்றிவிட்டது.

கடைசியில்விழுந்தவிமானத்தைதேடிப்பிடித்து பாப்புவா கினியா பொலீஸார் சென்று பார்க்கும்போது அதில் போதைப்பொருள் கடத்தப்பட்டதற்கான சந்தேகங்கள்உருவாக்கியதேதவிர, அதற்குள்போதைப்பொருட்கள் எதையும் காணவில்லை.

இந்நிலையில், விமானம்விழுந்து மூன்று நாட்களின் பின்னர் பாப்புவா நியூ கினியாவிலுள்ளஆஸ்திரேலிய தூதரகத்தில்சென்று குறிப்பிட்ட ஆஸ்திரேலிய விமானத்தின் ஓட்டி சரணடைந்துள்ளார். நடந்த கூத்துக்களை அனைத்தையும் சொல்லியிருக்கிறார். போதைப்பொருள் கடத்தலில் சம்பந்தப்பட்ட அங்குள்ளவர்களது விவரங்களையும் தான் ஆஸ்திரேலியாவிலிருந்து கிளம்பி வந்த வழியையும் போட்ட திட்டங்களையும் சொன்னவுடன். தூதரகத்தினர் இதனை பாப்புவா நியூகினியா தரப்புடன் பேசியிருக்கிறார்கள்.

பாப்புவா நியூ கினியா ஜனாதிபதியே இந்த விடயத்தினை ஆஸ்திரேலிய காவல் துறையினரின்கவனத்துக்கு கொண்டுவந்து, இரண்டு நாடுகளும் இணைந்து இந்த போதைப்பொருள் கும்பலை பிடிக்கவேண்டும் என்று அழைப்பு விடுத்திருக்கிறார்.

இதேவேளை, ஆஸ்திரேலிய பொலீஸார் இரண்டு வருடங்களாக மேற்கொண்டு வந்த விசாரணைகளின் அடிப்படையில் - இந்த விமானம் பாப்புவா நியூ கினியாவில் விழுந்த அதே நாளில் - விக்டோரியாவிலும்குவீன்ஸ்லாந்திலும்ஐந்து பேரை கைது செய்தார்கள்.

இவர்கள்தான், பாப்புவா நியூ கினியாவிலிருந்து வந்து இறங்கவிருந்த போதைப் பொருளை விக்டோரியா - சிட்னி - குவீன்ஸ்லாந்து பகுதிகளுக்கு விநியோகிப்பதற்கு திட்டமிட்டவர்கள்என்று பொலீஸார்தெரிவிக்கிறார்கள். 31 வயதுக்கும் 61 வயதுக்கும் இடைப்பட்ட இந்த ஐவரும் இத்தாலியை பூர்வீகமாகக்கொண்ட ஆஸ்திரேலிய போதைப்பொருள் கடத்தல்கும்பலுடன் தொடர்புடையவர்கள் என்று பொலீஸார் தெரிவித்துள்ளனர். வந்து இறங்கவிருந்த சுமார் எட்டு கோடி டொலர் பெறுமதியான போதைப்பொருளை ஆஸ்திரேலிய பயன்பாட்டாளர்களின் மத்தியில் விநியோகித்து சமூகத்தை சிதைப்பதற்கு திட்டம்போட்டவர்கள் இவர்கள் என்று பொலீஸ் விசாரணைக்குழுவினர் அக்குவேறு ஆணிவேறாக இவர்களின் திட்டத்தை அம்பலப்படுத்தியிருக்கிறார்கள்.

கைது செய்யப்பட்டு பொலீஸாரின் விசேட விசாரணையாளர்களினால்தற்போது விசாரிக்கப்படுகின்ற இவர்கள் ஐவருக்கு எதிரான குற்றச்சாட்டுக்களும் நிரூபிக்கப்பட்டல், இவர்கள் அனைவருக்கும் ஆயட்கால சிறைத்தண்டனை வழங்கப்படலாம் என்று தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, இந்த விமானத்தை ஓட்டிச்சென்றவர் பாப்புவா நீயூ கினியாவில் நாட்டுக்குள் சட்டவிரோதமாக நுழைந்தவர் என்று குடிவரவுச்சட்டத்தின் கீழ் குற்றஞ்சாட்டப்பட்டிருக்கிறார்.

ஆனால், இந்த இரண்டு நாடுகளுக்கும் தெரியாமல் ஐநூறு கிலோ போதைப் பொருளை சுமந்து ஓடுவதற்கு உதவியாக இருந்த பிரபலமான விமானத்தின் வரலாறு என்ன என்று விசாரணை செய்த போது,

குறிப்பிட்ட விமானம் விக்டோரிய கம்பனியொன்றில்தான் பதிவு செய்யப்பட்டிருக்கிறது. ஆனால், அந்த விமானம் ஒரு போதும் தங்களது சேவையின் கீழ் பறப்பில் ஈடுபடவே இல்லை என்று அந்தக் கம்பனி அடித்துச்சொல்கிறது. இதுபோக, விமானத்தின் உரிமையாளர் விவரத்தை தேடிப்போனபோது, அது பாப்புவா நியூ கினியாவை சேர்ந்த பிரபல வர்த்தகர் ஒருவரது பெயரில் பதிவுசெய்யப்பட்டிருக்கிறது. அவர் தற்போது உயிரோடு இல்லை என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

குறிப்பிட்ட நபர், அந்நாட்டின்ஒரு கட்சித்தலைவராக இருந்தவர் என்றும் கடந்த வருடம் ஒகஸ்ட் மாதம் சரமாரியான கத்திக்குத்துக்கு இலக்காகி படுகொலை செய்யப்பட்டிருக்கிறார் என்றும் இந்த விமானத்தின் பின்னணியில் அவிழ்ந்த அடுத்த மர்மமாக தெரியவந்திருக்கிறது.

ஆஸ்திரேலியாவுக்குள் கடலால் அகதிகள் வருகிறார்கள், கை கழுவாதவர்களால் கொரோனா வருகிறது என்று எங்கு பார்த்தாலும் கண்களில் எண்ணையையும் கை-களில் சனட்டைஸரையும் உற்றி சகல பாதுகாப்பு தரப்பினரும் உஷாராக இருக்கும் வேளையில் -

இவர்கள் அனைவரையுமே அடிமுட்டாள்கள் என்று ஒதுக்கிவிட்டு ஒரு கும்பல் தனி விமானத்தில் போதைப்பொருளை இறக்குமதி செய்து இந்த நாட்டில் விநியோகம் செய்யுமளவுக்கு திட்டமிட்டிருக்கிறது என்றால், இந்த முரட்டுத்துணிச்சலுக்கு என்ன பெயர் வைப்பது?

நாங்கள் என்ன வைப்பது? அதுதான் பொலீஸாரே வைத்திருக்கிறார்கள் நாமம்!

# கோட்டா சரணம் கச்சாமி



# ராஜபக்ஷ ராஜ்ஜியம் வெற்றிபெற்ற கதை!

சிறிலங்கா அரசியல் வரலாற்றில் 1977 ஆம் ஆண்டுக்கு பின்னர் இம்முறை மூன்றிலிரண்டு பெரும்பான்மையுடன்கூடிய ஆபத்தான அரசாங்கத்தை அமைப்பதற்கான ஆணையை மக்கள் வழங்கியுள்ளனர். எனவே, புதிய அரசாங்கத்தின் நகர்வுகள், அணுகுமுறைகள் எவ்வாறு அமையப்போகின்றனஎன்பதைஅறிவதற்காக - கண்காணிப்பதற்காக தேசிய ரீதியில் மட்டுமல்ல சர்வதேச மட்டத்திலும் பலர் வழிமீது விழிவைத்து காத்திருக்கின்றனர்.

1977 இல் நடைபெற்ற பொதுத்தேர்தலில் ஆறில் ஐந்து பெரும்பான்மையுடன் அரியணையேறிய ஜே.ஆர்.ஜயவர்தன தலைமையிலானஐக்கியதேசியக்கட்சிஅரசாங்கம், புதிய அரசியலமைப்பை உருவாக்கியதுடன், திறந்த பொருளாதாரக் கொள்கை உட்பட பல புரட்சிகரமான திட்டங்களுக்கு பிள்ளையார்சுழி போட்டது. மறுபுறத்தில்தனக்குகிடைத்த ஆறில் ஐந்து பெரும்பான்மையை பயன்படுத்திஜே.ஆர்.ஜயவர்தனஏதேட்சதிகாரியாக செயற்பட்டு பலவந்தமாக சில தீர்மானங்களை திணித்த கசப்பான அரசியல் சம்பவங்களும் பதிவாகின.

தற்போது பொதுத்தேர்தலில் வெற்றிவாகைசூடியுள்ள ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச தலைமையிலான அரசாங்கமும், 1978 ஆம் ஆண்டு அரசியலமைப்பை நீக்கிவிட்டு, புதியதொரு அரசியலமைப்பை உருவாக்குவதற்கு திட்டமிட்டுள்ளது. இதற்கான உறுதிமொழி கடந்த ஜனாதி-பதி தேர்தலின்போது தேர்தல் அறிக்கை ஊடாக வழங்கப்பட்டது.

'ஒரே நாடு - ஒரே சட்டம்' என்பதை முன்னிலைப்படுத்தியே புதிய அரசியலமைப்பு உருவாக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளதாலும், கோட்டாபய ராஜபஜக்ச தலைமையிலான அரசாங்கத்தின் சில நடவடிக்கைகளாலும் சிறுபான்மையினமக்களின்கடந்தகாலஅச்சங்கள்மேல் வரத்தொடங்கியுள்ளன.

அதேபோல, கொவிட்-19 பிரச்சினையால் உலக பொருளாதாரமே ஆட்டம் கண்டுள்ள நிலையில், சுற்றுலாத்துறை உட்பட பல்துறைகளும் கடும் சரிவை சந்தித்துள்ளன. குறிப்பாக, கொரோனாவுக்கு முன்னரே கையேந்தும் நிலையிலிருந்த இலங்கையின் பொருளாதாரத்துக்கு வைரஸ் தாக்கமானது பேரிடியாகவே அமைந்துள்ளது. எனவே, சவால்களுக்கு மத்தியில்பொருளாதாரப்போரைபுதுவடிவில் எதிர்கொள்வதற்கான தலைமைத்துவத்தை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச வழங்குவாரா அல்லது 77 இற்கு பிறகு பலமானதொரு அரசாங்கத்தை அமைப்பதற்கு பேராதரவை வழங்கிய மக்கள்மீது வரிச்சுமைகளை திணித்து, சாபங்களை சம்பாதிக்கும் அரசியலை முன்னெடுப்பாரா என்பதே தற்போது எழும் மில்லியன் டொலர் பெறுமதியான கேள்வியாகும்.

### மீண்டும் ராஜபக்ச அலை உருவானது எப்படி?

இலங்கையில் உள்நாட்டுப்போர் முடிவுக்குவந்த பிறகு சிங்கள - பௌத்த மக்கள் மஹிந்த ராஜபக்சவை தலையில்தூக்கி வைத்து கொண்டாடியதுடன், அவரை காவல் தெய்வமாகவும் கருதினர். இதன் காரணமாகவே 2010 பொதுத்தேர்தலில் மஹிந்த தரப்புக்கு 144 ஆசனங்களை வழங்கினர். எனினும், மஹிந்த ராஜபக்சவால்முன்னெடுக்கப்பட்டசிலநடவடிக்கைகளானவை மக்கள் மத்தியில் அதிருப்தி அலைகளை உருவாக்கின.

வகைதொகையின்றி அமைச்சர்களின் எண்ணிக்கை அதிகரிப்பு, ஊழல், மோடிசகள் தலைவிரிப்பு, குடும்ப ஆட்சி, இனவாதிகளுக்கான அரவணைப்பு உட்பட மேலும் சில காரணிகளால் 2015 ஜனாதி-பதி தேர்தலில் மஹிந்தவை மக்கள் நிராகரித்தனர். போரை முடித்தவர், தேசப்பற்றாளர், வெற்றி நாயகன் என்றெல்லாம் போற்றிபுகழ்ந்த மக்களே அவரை நிராகரித்ததால் மஹிந்தவின் அரசியல் வாழ்வும் முடிவுக்கு வருகின்றது என்றே பலரும் நம்பினர். அதற்கேற்ற வகையிலேயே சுதந்திரக்கட்சியின் தலைமைப்பதவி பறிப்பு உட்பட சில சம்பவங்களும் நடந்தேறின.

ஆனால் மத்திய வங்கி கொள்ளை, ரணில் - மைத்திரி மோதல், மகாநாயக்க தேரர்களுக்கு எதிரான பிரச்சாரம், குற்றச் செயல்களில்ஈடுபட்டபுலனாய்வாளர்கள் சிறையில் அடைப்பு உட்பட மேலும் சில சம்பவங்களால் நல்லாட்சிமீது சிங்கள, பௌத்த மக்கள் சினம் கொண்டனர். மாற்று தேர்வாக உள்ளாட்சித் தேர்தலில் மஹிந்த தலைமையிலான கூட்டணியை ஆதரித்தனர். அப்போதுகூட நல்லாட்சி அரசாங்கம் உஷாரடையவில்லை. தொடர்ந்தும் சொதப்பியது. இதற்கிடையில்தான் ஈஸ்டர் குண்டுதாக்குதலும் நடந்தேறியது.

அதுவரைகாலமும் குண்டுச்சட்டிக்குள் குதிரை ஓட்டுவதுபோல புலிப் புராணம்பாடி அரசியல் பிழைப்பு நடத்தி வந்த மஹிந்த தரப்பு, "முஸ்லிம் பயங்கரவாதத்தையும் ராஜபக்சக்களாலேயே ஒழிக்க முடியும்" என்ற தொனியில் பரப்புரைகளை முன்னெடுத்து ஜனாதிபதி தேர்தலில் கோட்டாபய ராஜபக்சவுக்கு வரலாற்று வெற்றியை பெற்று கொடுத்தது.

இந்நிலையில், கொரோனாவின் கோரத் தாண்டவத்தை கட்டுப்படுத்துவதற்காக இலங்கையில் சுகாதாரத்துறை, பாதுகாப்பு பிரிவு ஆகியன தீவிரமாக செயற்பட்டாலும் கோட்டாபய ராஜபக்சவின் அரசியல் தலைமைத்துவமே இதற்கு பிர-தான காரணம் என மக்கள் உறுதியாக நம்புகின்றனர்.

அதற்கேற்ற வகையிலேயே, தென்னிலங்கையிலுள்ள பெரும்பாலான ஊடகங்களும் செயற்பட்டன, செய்திகளை வெளியிட்டன. மறுபுறத்தில், சில பௌத்த பிக்குகளும் 'கோட்டா சரணம் கச்சாமி' என துதிபாடினர். இவ்வாறான அக - புற காரணங்களால் பொதுத்தேர்தலில் மொட்டு கட்சிக்கு வாக்குகளை வாரி வழங்கி 145 ஆசனங்களை மக்கள் பெற்றுக்கொடுத்துள்ளனர்.

(20ஆம் பக்கம் பார்க்க)



# ராஜபக்ஷ ராஜ்ஜியம் வெற்றிபெற்ற கதை!

(19ஆம் பக்கத் தொடர்ச்சி)

### கோட்டாவின் தந்திரோபாய நகர்வுகள்

இராணுவ அதிகாரி, அரச அதிகாரி என பதவிகளை வகித்த கோட்டாபய ராஜபக்ச அரசியலுக்குவந்த பின்னர் ஒவ்வொரு அடியையும் மிகவும் நிதானமாகவே எடுத்து வைக்கின்றார்.

ஆழமாக அலசி ஆராய்ந்த பின்னரே தீர்மானங்கள் எடுக்கப்படுகின்றன. மறுபுறத்தில், மக்கள் மனங்களில் எவ்வாறு இடம்பிடிப்பது என்ற அரசியல் த(ம)ந்திரத்தையும் அவர் கற்று வைத்துள்ளார்.

அதுமட்டுமல்ல, எதிர்கால அரசியலில் தனக்கு ஆபத்தாக அமையும் எனக் கருதப்படும் எந்த விவகாரத்தையும் மதிநுட்பத்துடன் கையாள்வதுடன், முன்னெச்சரிக்கையாக பாதுகாப்பு அரண்களையும் அமைத்துவருகின்றார்.

2015 இல் மஹிந்தவின் தோல்விக்கு வழிவகுத்த விடயங்களை நேர்த்தியாக கற்றிருக்கிறார். குறிப்பாக, ஈ.பி.டி.பி., சிறிலங்கா சுதந்திரக்கட்சி, தேசிய காங்கிரஸ் ஆகியவற்றின் ஆதரவுடன் தேசிய அரசாங்கம் அமைத்து அமைச்சர்களின் எண்ணிக்கையை அதிகரித்துக்கொள்ளக் கூடியதாக இருந்தாலும் அதனை கோட்டாபய ராஜபக்ச செய்யவில்லை. அரசியலமைப்பின்19 ஆவது திருத்தச்சட்டத்தின் பிரகாரமே அமைச்சரவையையும், இராஜாங்க அமைச்சுகளையும் அவர் நியமித்துள்ளார் .இது மக்கள் மத்தியில் பெரும் வரவேற்பை பெற்றுள்ளது.

மேலும், இதுவரை காலமும் அமைச்சரவை நியமிக்கப்பட்ட பின்னரே அமைச்சுகளின்கீழ்வரும் அரச நிறுவனங்கள் பட்டியலிடப்படும். அதற்கு இரண்டு வாரங்கள் வரை எடுக்கும். ஆனால், இம்முறை அமைச்சரவை பொறுப்பேற்க முன்னரே அமைச்சு விவரங்கள் அறிவிக்கப்பட்டு, அவற்றின்கீழ்வரும் அரச நிறுவனங்களும் பட்டியலிடப்பட்டுள்ளன. எனினும், உள்நாட்டலுவல்கள் அமைச்சானது பாதுகாப்புஅமைச்சின்கீழ்கொண்டுவரப்பட்டுள்ளமை விமர்சனத்துக்குள்ளாகியுள்ளது.

பொதுத்தேர்தலில் தோல்வியடைந்த எவருக்கும் தேசியப்பட்டியல் வழங்கப்படவில்லை. ஏனைய கட்சிகள் ஆசனங்களை பங்கீடுவதில் நெருக்கடியை எதிர்கொண்டிருந்த நிலையில் மொட்டு கட்சி முன்கூட்டியே பட்டியலை வெளியிட்டது.

இவ்வாறு புதிய ஆட்சியின் ஆரம்பத்திலேயே கோட்டாவால்முன்னெடுக்கப்பட்டுள்ள சில திட்டங்கள் மக்கள் மத்தியில் வரவேற்பை பெற்றுள்ளன. அதாவது, ஜனாதிபதி விழிப்பாகவே இருக்கிறார் என்பது இதன்மூலம் உறுதியாகின்றது.

அடுத்ததாக, தற்போதைய ஆட்சிக்கு ஏதேனும் சந்தர்ப்பத்தில் நெருக்கடியை கொடுக்ககூடியவரென்றால் அது விமல்வீரவன்ஸதான். மஹிந்த ஆட்சியின்போது அஜித் நிவாட் கப்ராலின் செயற்பாடுகளை கடுமையாக விமர்சித்ததுடன், அரசாங்கத்திலிருந்து வெளியேறப்போவதாகவும் மிரட்டல் விடுத்தார்.

ஆனால், விமல்வீரவன்சவைவிட தேசியவாதத்தை முன்னிலைப்படுத்தி இனவாதம் கக்கக்கூடிய சரத் வீரசேகரவை அம்பாறையில் இருந்து கொழும்பில் அழைத்து வந்து போட்டியிடவைத்தார் கோட்டாபய. சரத்வீரசேகரவும் தீவிரமாக பிரச்சாரம் முன்னெடுத்தார். ஜெனிவா மாநாட்டுக்கு சென்று புலம்பெயர் தமிழர்களுடன் உப மாநாடுகளில் முட்டிமோதும் சரத் வீரசேகரவுக்கு கொழும்பு மாவட்டத்தில் வாழும் சிங்கள, பௌத்த மக்கள் வாக்குகளை வாரி வழங்கினர். இதனால் மாவட்டத்தில் அவர் முதலிடம் பிடித்தார், விமல் இரண்டாம் நிலைக்கு தள்ளப்பட்டார். அதாவது, விமலுக்கு நிகராக ஒருவரை வளர்த்தெடுப்பதே கோட்டாவின் உள்நோக்கமாக இருந்திருக்கிறது என்பது இப்போது தெளிவாகவே தெரிகிறது. 2015 பொதுத்தேர்தலில் அம்பாறையில் தோல்விகண்ட ஒருவர் குறுகிய காலப்பகுதிக்குள் கொழும்பில் முதலிடம் பிடிக்கின்றாரெனில் அவருக்கு அரச உயர்பீடத்தின் அனுசரணை, ஆசிர்வாதம் இல்லாமலா இருந்திருக்கும் என்ன?

கம்பஹா மாவட்டத்திலேயே அதிகளவான வாக்காளர்கள் உள்ளார்கள். தேர்தல் வெற்றியை தீர்மானிக்கும் பிரதான மாவட்டமாகவும் அது திகழ்கின்றது. அம்மாவட்டத்துக்கு தலைமை வழங்கும் பிரசன்ன ரணதுங்க, எதாவது ஒரு சந்தர்ப்பத்தில் அரசாங்கத்துக்கு நெருக்கடியை ஏற்படுத்தினால் அது சிக்கலாக அமைந்து விடும் என்பதால் பிரசன்னவின் கொட்டத்தை அடக்குவதற்கு இன்னொரு வியூகம் அமைக்கப்பட்டிருக்கிறு. அதாவது, ஜெனிவா மாநாட்டில் சிங்கள அமைப்புகளின் சார்பில் பங்கேற்கும் பேராசிரியர் நாலக கொடஹேவா கம்பஹா மாவட்டத்தில் களமிறக்கப்பட்டார். 3 லட்சத்து 25 ஆயிரத்து 479 வாக்குகளைப்பெற்று மாவட்டத்தில் அவர் முதலிடம் பிடித்தார். இது பிரசன்னவுக்கு பெரும் அவமானத்தை ஏற்படுத்தியுள்ளது. ஏனெனில் தேர்தல் பிரச்சாரங்களின்போது தானே முதலிடம் பிடிப்பார் என அவர் சபதம் எடுத்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

அதேபோல. வாராந்தம் அமைச்சரவை கூடுவதுபோல மாதாந்தம் பௌத்த பிக்குகளை ஜனாதிபதி செயலகத்துக்கு அழைத்து ஆலோசனைபெற்றுவருகின்றார் கோட்டபாய. மகாநாயக்கர்களின் ஆசியுடனேயே ஆட்சியை முன்னெடுக்கின்றேன் என்ற செய்தியை சமூகத்தில் விதைக்கமுயற்சிக்கின்றார். அதில் வெற்றியும் கண்டுள்ளார். இதனால்தான் ஐ.தே.கவின் அடிமட்ட தொண்டர்கள்கூட பௌத்தத்துக்காக மொட்டுக்கட்சிக்கு கிராமமட்டத்தில் வாக்களித்ததை காணக்கூடியதாக இருந்தது.

மக்களை நேரில் சந்தித்து அவர்களின் குறைகளை கேட்டறிந்து, உடனடி பிரச்சினைகளுக்கு அதிரடியாக தீர்வுகளை வழங்குதல், எதிரணிகளை வசைபாடாமல் தமது திட்டங்களை முன்வைத்து பிரசாரம் செய்கின்றமை உட்பட மேலும் பல நகர்வுகளை கோட்டாபய ராஜபக்ச வெற்றிகரமாக முன்னெடுத்துவருகின்றார். இரண்டாவது தடவையும் ஜனாதிபதியாக பதவி வகிக்கவேண்டும் என்ற ஆசையும் அதற்குள் அடங்கியிருப்பது தெரிகின்றது.

அதேவேளை, மஹிந்த ஆட்சியில் போதைபொருள்காரர்களும், பாதாள உலக கோஷ்டிக்கு ஒத்துழைப்பு வழங்குபவர்களும்இருந்தனர்என்றுகுற்றச்சாட்டுஅன்று முன்வைக்கப்பட்டுள்ளது. இம்முறை கோட்டாபய ராஜபக்சவுக்கு மிகவும் நெருக்கமான அமைப்பான "வியத்மக" ஊடாக 10 பேர் பாராளுமன்றத்துக்கு தெரிவாகியுள்ளனர். 8 பேர் மக்களால் தெரிவு செய்யப்பட்டவர்கள். இருவர் தேசியப் பட்டியல் வேட்பாளர்கள். இந்த 10 பேரில் மூவர் பேராசிரியர்கள், ஒருவர் விசேட வைத்தியர், மற்றுமொருவர் ஜனாதிபதி சட்டத்தரணி, இவ்வாறு கோட்டாவின் பரிந்துரையின்பேரில் பாராளுமன்றம் வந்திருப்பவர்கள் தகமைகொண்டவர்களாகவே இருக்கின்றனர். எனவே, தகைமையற்றவர்களை பாராளுமன்றம் அனுமதித்தார் என்ற குற்றச்சாட்டிலிருந்தும் கோட்டாபய ராஜபக்ச விடுபட்டுள்ளார்.

### மூன்றிலிரண்டு வரமா, சாபமா?

நாடாளுமன்றத்தில் மூன்றிலிரண்டு பலம் கிடைத்துவிட்டது என அரசாங்கம் மார்தட்டிக்கொண்டாலும் சில சமயங்களில் அதுவே அரசாங்கத்துக்கு தலையிடிகளை கொடுக்ககூடும். அதிகாரம் இல்லை, பெரும்பான்மை இல்லை எனக்கூறி காலத்தை கடந்தும் தந்திரம் இனி எடுபடாது, சர்வதேச மட்டத்திலும் பல சவால்களை சந்திக்கவேண்டிவரலாம். வழங்கிய வாக்குறுதிகளை கட்டாயம் நிறைவேற்றியாக வேண்டும், அவ்வாறு இல்லாவிட்டால் மக்கள் மத்தியில் அதிருப்தி உருவாகும்.

### அமைச்சரவை

இதற்கிடையில் புதிய அரசாங்கத்தின் அமைச்சரவையும் 14 ஆம் திகதி பதவியேற்றுள்ளது. கோட்டாபய ராஜபக்ச, மஹிந்த ராஜபக்ச, சமல் ராஜபக்ச மற்றும் நாமல் ராஜபக்ச என அமைச்சரவையில் நான்கு ராஜபக்சக்கள் இடம்பிடித்துள்ளனர். சசீந்திர ராஜபக்சவுக்கு இராஜாங்க அமைச்சு பதவி வழங்கப்பட்டுள்ளது. ராஜபக்சக்களின் மருமகனான நிபுண ரணவக்கவுக்கு மாவட்ட தலைவர் பதவி வழங்கப்பட்டுள்ளது. அதேபோல, கோட்டாபய ராஜபக்சவின் "வியத்மக" உறுப்பினர்கள் ஐவருக்கு இராஜாங்க அமைச்சு பதவி வழங்கப்பட்டுள்ளது.

அமைச்சரவையில் டக்ளஸ், ஜனாதிபதி சட்டத்தரணி அலிசப்ரீ ஆகியோரே சிறுபான்மையினத்தவர்களாக இடம்பெற்றுள்ளனர். இவ்விருவருமே ராஜபக்சக்களின் விசுவாசிகளவர். சமூகத்துக்கு எதிரான பிரேரணைகள் வந்தால்கூட அதனை அமைச்சரவையில் எதிர்க்கமாட்டார்கள் என்பதே வெளிப்படை.

39 பேர்கொண்ட இராஜாங்க அமைச்சர்கள் பட்டியலில் ஜீவன் தொண்டமான், வியாழேந்திரன் ஆகிய இருவருமே தமிழர்கள். முஸ்லிம் எவருக்கும் இராஜாங்க அமைச்சு பதவி வழங்கப்படவில்லை. முன்னாள் அமைச்சர்கள் சிலர் நிராகரிக்கப்பட்டுள்ளனர். இதனால் ஆரம்பமே ஆளுங்கட்சி கூட்டணிக்குள் குழப்பத்துடன் ஆரம்பமாகியுள்ளது.

"சிங்கள, பௌத்தத்துக்கு முன்னுரிமை வழங்கி, சிங்கள மக்களின் தேவை, விருப்பங்களுக்கமையவே பயணிப்போம்" - என்பதை ராஜபக்சக்கள் குறுகிய காலப்பகுதிக்குள் உறுதிப்படுத்தியுள்ளனர். எனவே, இனிவரும் காலப்பகுதி இலங்கையில் வாழும் சிறுபான்மையின மக்களுக்கு சவால்மிக்க காலப்பகுதியாகும்.

எதிரொலி
ஆஸ்திரேலியா
ETHIROLI



## ஊழிக்காலம்-2

**14**



# புயலுக்குப்பின்...

ஆற்றங்கரையின் மரமும் அரசறிய வீற்றிருந்த வாழ்வும் வீழ்ந்துவிடும்" - என ஔவை சொன்னது நடந்தேறியுள்ளது. பார்வதி எதையும் மறுக்கவோ மறைக்கவோ முயலவில்லை. விரும்பவுமில்லை. அவளுக்கே தெரியாமல் மற்றவர்கள் போட்டுக் கொடுப்பார்கள் என்பதில் அவளுக்கு சந்தேகமேயில்லை எனவே அவள் உண்மையைப் பேசினாள்.

அந்த அதிகாரி போனபின், முகாமுக்குப்பொறுப்பானகோப்ரல்வந்தான். அவனுடைய கையில் இரண்டு தினங்களுக்கு முன் வந்த 'லங்காதீப' பத்திரிகை இருந்தது. யுத்தம் முடிந்து,அவர்கள் வெளியேறிய தினத்தில் வந்த பத்திரிகை. அதைக் கொண்டு வந்தவன், பார்வதியை அழைத்து அவளருகே அதை விரித்துப்பிடித்து -

"அம்மா, இங்க பாருங்க,இது பிரபாகரன்தானே" - பார்வதி பார்த்தாள்..

"அது பிரபாகரன்தான்" - என்றவள், மேலோட்டமாக தலைப்புச் செய்தியை வாசித்தாள்.

ஆச்சரியப்பட்ட கோப்ரல்

"சிங்களம் வாசிக்க முடியுதா" என வாயைப்பிளந்தான்.

இவர்கள் இதுவரை எதிரிகள், இதுவரை துப்பாக்கிகளாலேயே பேசியவர்கள் - என்ற நிலைபோய் இவள் சிங்கள மொழியிலேயே தொடர்பு கொள்ளக் கூடியவள் என்ற எண்ணம் அவனுக்கு பார்வதியின்மேல் ஒரு மரியாதையை ஏற்படுத்தியது.

"அம்மாஇதைப்பாத்திட்டுக்குடுங்க" - என பத்திரிகையை அவளிடமே கொடுத்துவிட்டுச் சென்றான். அதிலிருந்த செய்திகள் அவளுக்கு விருப்பமில்லாதவைதான். என்றாலும்அதை மற்றவர்களுக்கும் வாசித்து விளங்கப்படுத்தினாள்.

அதுபோன்றபடங்கள்வந்தபத்திரிகைகளேஅவர்களிடம்சேமிப்பில்இருந்தன. ஒரு சிங்களப் பத்திரிகையைக் கொடுத்து ஒரு செய்தியைக் காட்டிய ரமா -

"இதை வாசித்துக் காட்டுங்கோ" - என்றாள்.

பார்வதிஅதைவாசித்து,தமிழில்சொல்லிக் கொண்டிருந்தாள். இவர்களுக்குப் பின்னால் சத்தமிடாமல் வந்து நின்ற ஒரு ஆமிக்காரியை பார்வதி கண்டுவிட்டாள். வாசிப்பை நிறுத்தினாள். ஆனால் அவள் -

"கொந்தாய்... கொந்தாய்..கியவன்ன" - என்று பாராட்டிவிட்டுப் போனாள். பிறகு எப்படியோ அவளுடன் நட்பாகிவிட்டாள். சிங்களச் சிப்பாய்களுக்கு ஆணோ பெண்ணோ தமது மொழியைப்பேசுபவர்களைசட்டென்றுபிடித்துவிடுகிறது. பின் தமது தேவைகள், கட்டளைகளை அவர்கள் ஊடாகவே மற்றவர்களுக்கு தெரியப்படுத்திக் கொண்டனர்.

விரும்பியோ விரும்பாமலோ அவர்களுடைய கட்டளைகளை மற்றவர்களுக்கு விளக்கவேண்டிய தேவை,நிர்ப்பந்தம் சிங்களம் தெரிந்தவர்களுக்கு இருந்தது. இதனால் சிங்களம் தெரிந்தவர்களை ஆமிக்காறியளுக்கு வால் பிடிக்கிறவை என்றே பல பெண்கள் கூறத் தொடங்கினர். எனவே பார்வதி மெள்ள மெள்ள விலகிக் கொண்டாள்.

"இரக்கமுள்ளவள் எப்போதும் பிள்ளைத்தாச்சி" - என்றொரு பழமொழியுண்டு. பார்வதியும்தன்இரக்கமனதால்இயலாதவளுக்கு இரங்கப்போய், மாட்டிக் கொண்டாள்.

"போங்க அன்ரி,ரெண்டுதரம் ஆள் விட்டிட்டாள்" - என்றாள் பிரபா.

"அவள் பொய் எழுதிறாள் பிள்ளையள்,பாதிக்கப்பட்டா எனக்கு மனம் சரிவராது" - என்றாள் பார்வதி. என்றாலும் இறங்கிப் போனாள். அதற்குள் வந்தவள் திரும்பிப் போய்விட்டாள். அன்றும்அதற்கடுத்தநாளும்எதுவிதகுழப்பமுமின்றி முகாம் இருந்தது.

அந்தப் பெரிய வளாகத்தின் முன்புறம் மன்னார்வீதியை அண்டியதாக, இதேபோன்ற பெரிய விடுதியொன்றும், அதன்பின்அலுவலகமும் அமைக்கப்பட்டிருந்தன. அடுத்ததாக, பெரிய ஹோல் ஒன்று கண்ணாடிச்சுவர் முன்புறமும் ஏனைய மூன்று புறமும்முழுச்சுவராலும் கட்டப்பட்டிருந்தது. வெளியே வராண்டா இருந்தது. உள்ளே எந்த தடுப்புகளும் இல்லை. மூன்றாவதாக ஒரு வளவு அங்கே தரப்பால் கொட்டில்களும் ஒரு கிணறும் இருந்தது. எல்லாவற்றையும் தனித்தனியே இலக்கமிட்டுப் பிரித்திருந்தார்கள். ஏபுளொக், பீபுளொக், சீபுளொக், டீபுளொக். ஏயில் ஆயிரம் பேர்வரை இருந்தனர் பீயில்எழுநூற்றறுபது.

சீயில் நானூற்றறுபது. டீயில் எண்ணூறு பேர் இருந்தனர். இவர்களில் சிலர் அங்குமிங்குமாக இடம்மாற்றப்படுவதுண்டு.

பிள்ளைகள் எல்லோருமே கூடிவிட□

"தங்கச்சி! நீ நிக்கிற இடம் என்னதென்று விளங்கவேணும். அங்கால இஞ்சால கொடி கட்டுற வேலை செய்யாதை. அடங்காம நடந்தா அடக்கிக்காட்டுவன். அதார் மாடியில நிண்டு தேவையில்லாத கதை கதைக்கிறது. எங்களுக்கு எல்லாரையுந்தெரியும். உங்களுக்குலீடர்எண்டு ஒராள் போட்டிருக்கு. அவ சொன்னா கேட்டுநடவுங்க, ட்டாய்ய்க். சொன்னது கேக்குதா□"

அந்த எண்ணூறு பேரிடமும் எந்த சலனமுமில்லை. அவள் மேலும் மேலும் அசிங்கமாகத் திட்டிக்கொண்டே போனாள். யாரும் எதுவும் தோன்றாமல் அதை சகித்துக்கொள்ள வேண்டியதாயிற்று. சற்றுநேரம்அதைக்கேட்டுக்கொண்டிருந்த சிலர்,சத்தமில்லாமல் தத்தம் அறைகளுக்குள் மெல்ல நழுவினர்.

பார்வதிக்கு மட்டும்அவளைஎங்கோ பார்த்த ஞாபகம் படக்படக்கென்று விட்டு விட்டுத் தோன்றியது. கொஞ்சமும்தொனியைக்குறைக்காமல்இன்னும் இரைந்து கொண்டிருந்தாள். அவளது பேச்சில் கடந்த கால சம்பவங்கள் விலாவாரியாகப் பேசப்பட்டது. "உண்மையில பொறுப்பில நிண்டவை அமைதியா இருக்கினம். அங்கயும் அடங்காமத் திரிஞ்சவைதான் இஞ்சயும் குதிக்கிறியள்"- என்று பார்வதி உள்ளுக்குள் நினைத்துக் கொண்டாள்.

"யாரிவள்" - ரதியிடம் மெதுவாகக் கேட்டாள் பார்வதி.

"கங்கா" என்றவள்,கிட்ட வந்து-

"அன்ரீ, இவள் இயக்கத்தில இருந்தவள். பிறகு காவற்றுறையிலும் இருந்தவளாம், ரெண்டாயிரத்து ஏழில, இஞ்சால ஓடிவந்து ஆமியில சேர்ந்திட்டாளாம் எண்டு கதைக்கினம்" - என்றாள்.

மின்னல்போல பார்வதிக்கு உண்மை வெளித்தது. இவள் ஒட்டிசுட்டானில் காவற்றுறையில் வேலை செய்தவள். உளவாளியாகவே வந்து, அங்கேயே திருமணம் செய்து ஒரு குழந்தையும்பெற்றவள். இப்போது அதிகாரத்தொனியில் உரக்கப்பேசியவளின் பின்னணி இப்போது நன்றாகவே புரிந்துவிட்டது.

பார்வதியின் பேத்தி,இறுதிநாளன்று வெளியே வந்ததாகத் தகவல் கிடைத்திருந்தது.

அவள் இந்த நான்கு புளொக்குகளில் ஏதோவொன்றில் இருக்கக்கூடும். என்று ஆவல் பார்வதிக்கு இருந்தது. முதலில் தான் இருந்த 'டீ புளொக்'கையே முழுதும் சுற்றிப்பார்த்துவிட முடிவு செய்தாள். ஒவ்வொரு அறையாக பார்த்தபடி நடந்தாள். மாடியில் ஒரு அறையிலிருந்து "அம்மம்மா"என்ற குரல் கேட்டுத் திரும்பினாள்.



பீர்பல் சபையிலிருந்த பொழுது அக்பர் கேட்டாராம். "நம் நாட்டில் எத்தனை காக்கைகள் உள்ளன என்று யாருக்காவது தெரியுமா" - என்று

அமைச்சர்கள் திருதிரு என்று முழித்தனர். பீர்பலோ "இதென்ன பெரிய வேலையா, நான்முன்னரேஎண்ணிவைத்திருக்கிறேனே" என்றார்.

ஆச்சரியப்பட்ட மன்னன் "அப்படியா சொல் பார்க்கலாம்" என்றான். பீர்பல் சற்றும்தாமதியாது, "ஒருலட்சத்து பதினாறாயிரத்து எழுநூற்று நாற்பத்து மூன்று" - என்றார்.

மன்னன் "கூட இருந்துவிட்டால்..."

"வேறு ஊரிலிருந்து விருந்தாளிகளாக வந்திருக்கும்" - என்றார்.

"குறைவாக இருந்தால்-"

"நம்மூர் காக்கைகள் விருந்தாளியாகப் போயிருக்கும்" - என்றார்.

இந்தக்கதைதான் இங்கேயும். எங்கிருந்தாவது பிள்ளைகளைக் கொண்டு வந்து எதாவது புளொக்கில் இறக்குவார்கள். இங்கிருந்து வேறிடங்களுக்கும் கொண்டுபோவார்கள். எனவே புள்ளிவிவரம் கூறமுடியாது. அன்றும் மாலையில்வெளியிலிருந்துபிள்ளைகள்கொண்டுவரப்பட்டு சீ புளொக்கில் விடப்பட்டனர்.

மாலையில் அந்த நாற்சார மண்டபத்தின் நடுவே ஒரு பெண் நின்று காட்டுக் கூச்சல் போட்டுக் கொண்டிருந்தாள்.

செஞ்சோலைப்பெண்களும்அவளை'அம்மம்மா'என்பார்கள். அவளுடைய பேரனின்நண்பர்களும்அவளைஅம்மம்மா என்பார்கள். அவளுடைய பேத்தியுடன் நின்றவர்களும் அம்மம்மா என்றுதான் அழைப்பார்கள் இது?.

"நாங்கதான் வாங்கோ" - என்றவள் அவள் தேடிக் கொண்டிருக்கும் பேத்தி தமிழொளியின்கூட நின்றவர்கள்தான். மஞ்சள் நிற அரைப்பாவாடையும் வெள்ளை ரீசேட்டும் அணிந்திருந்தாள். அவளை யாரென்றே தெரியவில்லை.

"அம்மம்மா நாங்கள் தமிழொளியோட நிண்டனாங்கள். அவ எங்கயிருக்கிறா..."

"ஓ...தெரியேல்ல. அப்ப நீங்கள் அவளோட வரயில்லையா"

"நாங்கள்ஒருமாதத்துக்குமுதலேஓடி வந்திட்டம்."

"ஓ....நான் அதுக்குப்பிறகும் கண்டனான்"

"உங்களோட வரயில்லையா?"

"ம்...." - பார்வதி ஒரு பெருமூச்சுடன் அப்பால் நகர்ந்தாள்.

மறுநாள்,இரண்டு வாகனங்கள் அந்த வளாகத்துக்குள்வந்தன. அதுவும்நேராக 'டீ புளொக்' வாசலிலேயே வந்து நின்றன. மங்கையோடு உரையாடிக்கொண்டிருந்த பார்வதி திரும்பிப் பார்த்தாள். அதில் பல ஆண்களே இருந்தனர்.

மங்கை அவளைக்கூட்டிக்கொண்டு உள்ளே போனாள். இப்போதெல்லாம் ராணுவத்தைக் கண்டு யாரும் அச்சப்படுவதில்லை. ஆனால் தங்களுக்குள்ளேயே ஒருவருக்கொருவர் அஞ்சவேண்டியிருந்தது.

எப்போதோ களமுனைகளில் நடந்த சம்பவங்களுக்காக,இப்போது பழிவாங்கப்படுவோம் என்ற அச்சம் மேலோங்கியிருந்தது.

"வந்தவை யாரோ தெரியாது. யாரும் முக்கியமானபுலிஉறுப்பினர்களைஅடையாளங்காட்ட வந்திருக்கலாம். அவர்கள் கண்ணில் படவேண்டாம" - என்றாள் மங்கை.

"நான்எப்பிடி மற்றப்புளொக்குகளில என்ர பேத்தி வந்திருக்கிறாளா என்று தேடுறது" - பார்வதி புலம்பினாள்..


அங்க நிமலா எண்டொரு பிள்ளை பொறுப்பா நிக்கிறா. கங்காவைப்போல இல்ல. மெதுவா எழுதி, வேலிக்குள்ளால குடுத்து விட்டா,பார்த்துச் சொல்லுவாள்" - மங்கை யோசனை கூறினாள்.

பெரும்பாலும்,படையணியைச் சேர்ந்தவர்களே இருந்தனர். அரசியல், மருத்துவம், புலனாய்வுப் பிரிவுகளில் இருந்தவர்களை அவள் அறிவாள். ஏனையோரில் அநேகர் அவளுக்குப் புதிது. எனவே மங்கைதான் தனக்குத் தெரிந்த ஒரு பெண்ணிடம் பெயரை அனுப்பி வைத்தாள்.

மாலையில் வேலை எதுவுமில்லை. அந்த அறையில் பொழுதுபோக்காக எல்லோருமே எதுவோ செய்துகொண்டிருந்தனர். பாட்டு ஒருபுறம், தாயக்கட்டம் ஒருபுறம், வாசிப்பு ஒருபுறம் என நடந்து கொண்டிருந்தது. சட்டென ஒரு ஆமிக்காறி திமிராகவும் பரபரப்பாகவும் வந்து நின்றாள்.

"கவுத பார்வதி...கவுத" என்றாள் அதே சூட்டுடன்.

# மாத ராசிபலன்



## மேடம்

இந்த மாதம் எதிலும் எச்சரிக்கையாக இருப்பது நன்மை தரும். அதனால் எந்த ஒரு வேலை பற்றியும் அதிகம் யோசிப்பதை தவிர்ப்பது நல்லது. திடீர் பணதேவை உண்டாகலாம். வெளியூரில் இருந்து வரும் கடிதங்கள் மூலம் மகிழ்ச்சி ஏற்படும். குடும்பத்தில் அமைதியும், மகிழ்ச்சியும் இருக்கும்.

தொழில், வியாபாரத்தில் ஈடுபட்டு இருப்பவர்களுக்கு தொழில் வியாபாரம் தொடர்பான விவகாரங்களில் வீண் இடையூறுகள் ஏற்பட்டு நீங்கும்.

கலைத்துறையினருக்கு முயற்சிகளின் பேரில் புதிய ஒப்பந்தங்கள் கையெழுத்தாகும்.

அரசியல்வாதிகள், பொதுநல சேவை புரிவோருக்கு பண விஷயம் திருப்திகரமாக இருக்கும்.

பெண்கள் குடும்ப ஒற்றுமைக்காக விட்டுக் கொடுத்து போக வேண்டியிருக்கும்.

மாணவர்கள் படிப்பில் தீவிர அக்கறை எடுக்க வேண்டும்.

## இடபம்

இந்த மாதம் வாழ்வில் எதிர்பாராத திருப்பம் உண்டாகும். புதிய நண்பர்கள் சேர்க்கை உண்டாகும். எதிலும் சாதகமான பலன் கிடைக்கும். திறமையாக எதையும் சமாளிப்பீர்கள். திட்டமிட்ட காரியம் திட்டமிட்டபடியே நடக்கும். செலவுகள் கட்டுக்குள் இருக்கும்.

கணவன், மனைவி உறவு மகிழ்ச்சிகரமாக இருக்கும். குடும்பத்தில் மதிப்பும், மரியாதையும் அதிகரிக்கும். தெய்வ நம்பிக்கை கூடும்.

தொழில் வியாபாரத்தில் மேன்மை உண்டாகும்.

உத்தியோகத்தில் இருப்பவர்கள் முன்னேற்றம் காண்பார்கள்.

கலைத்துறையினருக்கு புதிய ஒப்பந்தங்கள் சற்று தாமதமாக வந்தாலும் முயற்சிகள் எடுக்க வேண்டியிருக்கும்.

அரசியல்வாதிகள் சீரான பலனை எதிர்பார்க்கலாம். பெண்களுக்கு பணி செய்து வீண் அலைச்சலும், சொர்வும் ஏற்படும்.

மாணவமணிகள் சிரத்தை எடுத்து படிப்பர். உங்கள் முயற்சிக்கு தகுந்த பலன்கள் வந்தே தீரும்.

## மிதுனம்

இந்த மாதம் பொருள் வரவையும் சேமிக்க வேண்டும் என்ற எண்ணத்தையும் தரும். நண்பர்கள் மூலம் தக்க தருணத்தில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும்.

குடும்பத்தில் சுப காரியம் நடக்கலாம். சிலருக்கு குழந்தை பாக்கியம் ஏற்படும். கணவன், மனைவிக்கிடையே மகிழ்ச்சி கூடும்.

தொழில் வியாபாரத்தில் இருந்த போட்டி குறையும்.

உத்தியோகத்தில் மன நிம்மதியும் அதிக நன்மையும் உண்டாகும்.

கலைத்துறையினருக்கு புதிய ஒப்பந்தங்களால் பொருளாதார லாபம் கிடைக்கும்.

அரசியல்வாதிகள், சமூக நல சேவகர்கள் சிறப்படைய மிகுந்த முயற்சி தேவை.

பெண்களுக்கு வீண் அலைச்சலும், செலவும் ஏற்பட்டாலும் சேமிக்க வேண்டும் என்ற எண்ணம் உருவாகும்.

மாணவகண்மணிகளுக்கு அனுகூலமான போக்கே காணப்படுகிறது. நல்ல மதிப்பெண்கள் கிடைக்கும்.

## கடகம்

இந்த மாதம் முடங்கி கிடந்த காரியங்கள் அனைத்தும் வேகம் பிடிக்கும். வீண் அலைச்சல் உண்டாகும். எதிர்பாராத செலவு ஏற்படும். புதிய காரியங்களில் ஈடுபடும்போது யோசித்து செய்வது நல்லது.

குடும்பத்தில் இருப்பவர்களின் செயல்கள் டென்ஷன் ஏற்படுத்துவதாக இருக்கும். அனுசரித்து செல்வது நல்லது.

தொழில் வியாபாரத்தில் ஈடுபட்டு இருப்பவர்கள் கூடுதல் கவனம் செலுத்துவது நல்லது.

உத்தியோகத்தில் இருப்பவர்கள் உயர் அதிகாரிகளை அனுசரித்து செல்வது நல்லது.

கலைத்துறையினருக்கு புதிய வாய்ப்புகள் வந்து சேரும்.

அரசியல்வாதிகள் பொதுநல சேவகர்கள், நினைத்ததை நிறைவேற்றிக் கொள்ள வாய்ப்புகள் உண்டு.

பெண்களுக்கு குடும்பத்தில் இருந்து வந்த கஷ்டங்கள் தீரும், நிம்மதி பிறக்கும்.

மாணவர்கள் கல்வியில் சிறப்பான முன்னேற்றத்தை அடையலாம்.

## சிம்மம்

இந்த மாதம் முன்பு தடைபட்ட காரியங்கள் எவ்வித இடையூறுமின்றி நடந்து முடியும். அதனால் நன்மையும் ஏற்படும். நண்பர்கள் பலவிதங்களிலும் ஆதரவாக இருப்பவர்கள் ஆக்கபூர்வமான யோசனைகள் தோன்றும்.

கணவன், மனைவிக்கிடையே மகிழ்ச்சி நீடிக்கும்.

தொழில் வியாபாரத்தில் இருந்து வந்த இடையூறுகள் குறையும்.

உத்தியோகத்தில் இருப்பவர்கள் திருப்தியாக உணர்வார்கள்.

கலைத்துறையினருக்கு மிகப் பொன்னான காலமிது.

அரசியல்வாதிகளுக்கு நற்பெயர் எடுப்பதற்கு வாய்ப்புகள் உருவாக்கிக்கொள்ள் சூழ்நிலைகள் உருவாகும்.

பெண்களுக்கு தடைபட்ட காரியங்கள் சாதகமாக நடந்து முடியும்.

மாணவமணிகள் சிறிது சிரத்தை எடுத்தாலே பெருவெற்றி பெறலாம். அனைத்திலும் நினைத்த மதிப்பெண்கள் கிடைக்கும்.

## கன்னி

இந்த மாதம் விருப்பமானவர்களை சந்தித்து உரையாடி மகிழ்ச்சி அடை வீர்கள். மனதுணிவு உண்டாகும். எந்த ஒரு காரியத்தையும் துணிவுடன் செய்து அதிக நன்மை அடைவீர்கள்.

கணவன், மனைவி நெருக்கம் அதிகரிக்கும். ஆனால் வாக்கு வாதங்களை தவிர்ப்பது நல்லது.

தொழில் வியாபாரத்தில் ஈடுபட்டு இருப்பவர்கள் மிகவும் எச்சரிக்கையுடன் செயல்படுவது நல்லது.

உத்தியோகத்தில் இருப்பவர்கள் கோபப்படாமல் மேல் அதிகாரிகள் சொன்ன வேலையை செய்து முடிப்பது நல்லது.

கலைஞர்களுக்கு தங்குதடையின்றி புதிய வாய்ப்புகளைப் பெறலாம்.

அரசியல்வாதிகளுக்கு நற்பெயர் எடுப்பதற்குண்டான சூழ்நிலைகள் உருவாகும். எதிர்பார்த்த பதவிகள் வந்து சேரும்.

பெண்களுக்கு மனதில் இருந்த பயம் நீங்கி துணிவு உண்டாகும்.

மாணவர்கள் நல்ல நிலைக்கு உயர்த்தப்படுவீர்.

## துலாம்

இந்த மாதம் எடுத்த காரியம் கைகூடும். விரோதிகளும் நண்பர்களாவார்கள். மறைமுக எதிர்ப்புகள் விலகும். பணவரத்து திருப்தி தரும், கடன் விவகாரங்களில் எச்சரிக்கை தேவை. குடும்பத்தில் வாழ்க்கை துணை மூலம் ஆதாயம் கிடைக்க பெறுவீர்கள். உறவினர்கள், நண்பர்கள் மூலம் தக்க தருணத்தில் உதவிகள் கிடைக்கும்.

தொழில் வியாபாரத்தில் இருந்த போட்டி குறையும்.

உத்தியோகத்தில் இருப்பவர்கள் செய்தொழிலில் முன்னேற்றம் காண்பார்கள்.

கலைத்துறையினருக்கு சீரான நிலையில் இருக்கும்.

அரசியல்வாதிகளுக்கு மாதமுற்பகுதி நன்றாக இருந்தாலும் பிற்பகுதி பாடுபட வேண்டியிருக்கும்.

பெண்களுக்கு மறைமுக எதிர்ப்புகள் விலகும். எதிரிகளும் நண்பராவார்கள்.

மாணவமணிகள் தீவிர முயற்சி எடுத்து படிப்பது அவசியமாகும்.

## விருச்சிகம்

இந்த மாதம் எதிர்பாராத செலவு உண்டாகும். எதிர்பார்த்த வெற்றி கிடைப்பதில் தாமதம் உண்டாகும். திடீர் பணவரத்தும் இருக்கும். புதிய நண்பர்கள் சேர்க்கையும் ஏற்படும். மற்றவர்களுக்கு உதவி செய்வதில் ஆர்வம் காட்டுவீர்கள். எதிர்ப்புகள் நீங்கும்.

குடும்ப உறுப்பினர்களிடம் இருந்த மனத்தாங்கல் நீங்கி மகிழ்ச்சியும், சகஜ நிலையும் காணப்படும்.

தொழில் வியாபாரம் சிறிது மந்தமான நிலையில் காணப்பட்டாலும் வருமானம் குறையாத நிலை இருக்கும்.

உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு வெளியூர் மாற்றங்கள் உண்டாகலாம்.

கலைத்துறையில் உள்ளவர்களுக்கு சீரான வாய்ப்புகள் வந்தாலும் அவ்வப்போது குழப்பமான மனநிலையும் இருக்கும்.

அரசியல்வாதிகள், சமூக சேவையில் உள்ளவர்களுக்கு மாத முற்பகுதி மிகுந்த உற்சாகமாக இருக்கும்.

மாணவ கண்மணிகளுக்கு கல்வியில் புதிய உற்சாகமும் நம்பிக்கையும் கிடைக்கும்.

## தனுசு

இந்த மாதம் எதிர்ப்புகள் நீங்கி எதிலும் உற்சாகம் உண்டாகும். மனமகிழ்ச்சிக்காக பணம் செலவு செய்ய தயங்க மாட்டீர்கள். நண்பர்கள் சேர்க்கையும் அவர்களால் உதவியும் கிடைக்கும்.

குடும்பத்தில் வாழ்க்கை துணை மூலம் மகிழ்ச்சி உண்டாகும். உஷ்ண சம்பந்தமான நோய்வரக்கூடும்.

தொழில் வியாபாரத்தில் கூடுதல் லாபம் கிடைக்க பெறுவீர்கள்.

உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு வேண்டிய உதவிகள் மேல் அதிகாரிகள் மூலம் கிடைக்கும்.

கலைத்துறையில் இருப்பவர்களுக்கு மிகுந்த உகந்த காலகட்டமிது.

அரசியல்வாதிகள், சமூக சேவகர்களுக்கு மாத முற்பாதியில் பலன்கள் நன்மை தீமை என கலந்து கிடைத்தாலும் பிற்பாதி சிறப்பாக இருக்கும்.

மாணவக் கண்மணிகளுக்கு படிப்பில் நிதானமும் கவனமும் தேவை.

## மகரம்

இந்த மாதம் எடுத்துக் கொண்ட முயற்சிகளில் காரிய தடை தாமதம் நீங்கும். சூரியன் சஞ்சாரம் ராசிக்கு 4ல் இருப்பது உஷ்ண சம்பந்தமான நோய் ஏற்படுத்தும். வீண்பயம் ஏற்படும்.

ஏற்கனவே செய்த காரியங்களுக்கான பலனை அடைய வேண்டி இருக்கும். சிலர் வீட்டை விட்டு வெளியில் சென்று தங்க நேரிடலாம். வீண் வழக்கு விவகாரங்கள் வரலாம் எச்சரிக்கையாக செயல்படுவது நல்லது.

தொழில் வியாபாரம் சுமாராக நடக்கும். பங்கதாரர்களுடன் சேர்ந்து தொழில் செய்பவர்கள் கவனமாக செயல்படுவது நல்லது.

குடும்பத்தில் அமைதி நிலவ குடும்ப உறுப்பினர்களை அனுசரித்து செல்வது நல்லது.

கலைத்துறையினருக்கு எதையும் சாதிக்கும் திறமை அதிகமாகும்.

அரசியல்துறையினருக்கு மனம் வருந்தும்படியான சூழ்நிலை ஏற்படும்.

மாணவர்களுக்கு மிகவும் கவனமாக பாடங்களை படிப்பது அவசியம்.

## கும்பம்

இந்த மாதம் வீண்கவலை ஏற்பட்டு நீங்கும். நினைத்த காரியத்தை செய்து முடிப்பதில் வேகம் காட்டுவீர்கள்.

குடும்பத்தில் வீண் பிரச்சினைகள் தலை தூக்கும். அவற்றை லாவகமாக கையாண்டு சமாளிப்பீர்கள். கணவன், மனைவிக்கிடையே பழைய விஷயங்களை பேசாமல் இருப்பதன் மூலம் ஒற்றுமை இருக்கும்.

தொழில் வியாபாரத்தில் ஏற்படும் பணத் தேவையை சரிகட்ட நண்பர்கள் மூலம் உதவிகள்

உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு அலுவலகம் தொடர்பான வேலைகளில் அலைச்சல் இருக்கும்.

கலைத்துறையினருக்கு தீவிர முயற்சிகளின் பேரில் புதிய ஒப்பந்தங்கள் கிடைக்கும்.

அரசியல்வாதிகள், சமூக சேவகர்கள் பிரதி பலனை எதிர்பார்க்காமல் உழைக்க வேண்டியிருக்கும்.

மாணவர்கள் அதிக சிரத்தை எடுத்து படிப்பது நல்லது.

## மீனம்

இந்த மாதம் சொன்ன சொல்லை காப்பாற்ற பாடுபட வேண்டி இருக்கும். திடீர் கோபம் உண்டாகும். கட்டுப்படுத்திக் கொள்வது நல்லது. அடுத்தவர்களால் இருந்த தொல்லைகள் குறையும்.

குடும்பத்தில் சுபகாரியங்கள் நடக்கலாம். உறவினர்களிடம் நிதானமாக பேசுவது நல்லது. கணவன், மனைவிக்கிடையே இருந்த இடைவெளி குறையும்.

தொழில் வியாபாரம் தொடர்பான விஷயங்களில் கூடுதல் அலைச்சல் இருந்தாலும் முடிவில் சாதகமான பலன் கிடைக்கும்.

உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு அலுவலக வேலை தொடர்பான கவலை ஏற்பட்டு நீங்கும்.

கலைஞர்கள், புதிய ஒப்பந்தங்கள் கிடைக்கப் பெறுவர்.

அரசியல்வாதிகளுக்கு மாத முன்பகுதி நன்றாக இருக்கும்.

மாணவர்கள் அதிக சிரத்தை எடுத்து படிப்பது நல்லது.










## Other Services

**IP/HD CCTV Systems | Security Alarm | Alarm Monitoring | Access Control | Security Fog System**
**Data & Tele-communication | Video Intercom | Smart Home | Solar CCTV /Ducted Vacuum | Digital TV Antena**

NS Systems SECURITY

**0447 533 555**
**www.nssystems.com.au**

UTECH SECURITY Corporate Group

We are registered and licensed by Victoria Police. Private security Business License: 910-932-10S

info@nssystems.com.au    PO BOX 633, Noble Park, VIC 3174


Transco™ Shopping
Shop Online at Any Australian Retailer
and have your goods sea-freighted to you in Sri Lanka
get your free virtual address
Scan QR code to watch How it works Video
More than 1000 + stores to shop from
coles
Woolworths
Target
Kmart
MYER
BIGW
DAVID JONES
amazon
THE GOOD GUYS
JB HI-FI
dick smith
Ted's cameras
Officeworks
IKEA
Sportsgirl
FOREVER NEW
SWAROVSKI
novo
COTTON:ON
rebel
EB GAMES
Setting up is so easy and it's a dream come true
1 Go to our website transcoshopping.lk and get your own unique vertual address
2 Shop online in any Australian Store and use your unique vertual address as your delivery address
3 Once we receive the goods we pack them in a Transco box (prices available on the website) and notify you. When shipping fee is payed, we sea-freight to you in Sri Lanka
4 Tell everyone! about Transco Shopping
For more information visit our website or send us an email
All logos, brands, trademarks and registered trademarks are property of their respective owners. All company, product and service names used in this ad are for identification purposes only. Use of these names, trademarks and brands does not imply endorsement.
Transco Shopping is a part of Transco CARGO
transcoshopping.lk
info@transcoshopping.lk